பக்கங்கள்: 18+8= இருபத்தாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 10 வியாழக்கிழமை (25-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:29

# யாழ். வந்த பயணிகள் முகமாலையில் அந்தரிப்பு

## இராணுவ சோதனை நிலையங்கள் மாலை 6.30 மணியுடன் மூடப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெம்பர்25

**ஏ-9 கண்டி வீதி ஊடாகப் பயணம் செய்வதற்கு நேற்று மாலை மேலதிகமாக ஒரு மணி நேரம் மட்டுமே பயணிகள் அனுமதிக்கப்பட்டனர். போக்குவரத்து அனுமதி இரவு 9.30 மணிவரை நீடிக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையுடன் வந்த நூற்றுக்கணக்கான பயணிகள் முகமாலை இராணுவ சோதனை நிலையம் மூடப்பட்டதால் இடைவழியில் அந்தரிக்க நேர்ந்தது**

நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடப் பிறப்பு ஆகியவற்றை முன்னிட்டு ஏ-9 கண்டி வீதியிலும், மன்னார் உயிலங்குளம் வீதியிலும் உள்ள தங்களின் சோதனை நிலையங்கள் நேற்றும் இன்றும் எதிர்வரும் 31ஆம் மற்றும் ஜனவரி முதலாம் திகதிகளிலும் இரவு 9.30மணிவரை திறக்கப்பட்டிருக்கும் என்று விடுதலைப் புலிகள் ஏற்கனவே அறிவித்திருந்தனர். இராணுவத்தரப்பும் இதற்குச் சாதகமாக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அறிவித்தபடி முகமாலை, ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய பாதைகளில் உள்ள தங்களின் சோதனை நிலையங்களை புலிகள் நேற்றிரவு 9.30 மணிவரை திறந்துவைத்திருந்தனர்.

ஆனால், முகமாலை இராணுவ சோதனை நிலையம் நேற்று மாலை வழக்கத்தைவிட மேலதிகமாக ஒரு மணி நேரம் மட்டுமே - 6.30 மணிவரை - திறக்கப்பட்டிருந்தது.

கண்டி வீதியில் போக்குவரத்தைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரும மாலை 6.30 மணியுடன் தங்கள் பணியை முடித்துக்கொண்டு வெளியேறிவிட்டனர்.

இராணுவ சோதனை நிலையங்களும் இரவு 9.30 மணிவரை திறந்திருக்கும் என்று நம்பி ஏ-9 வீதியூடாக

(18ஆம் பக்கம் பார்க்க)

# இன்றும் மாலை 6.30 வரையே போக்குவரத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.25


முகமாலைஊடான பயணிகள் போக்குவரத்து இன்றைய தினமும் மாலை 6.30 மணி வரை மட்டுமே இடம்பெறும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி நேற்றிரவு இத்தகவலைத் தெரிவித்தார்.

நத்தார் மற்றும் புதுவருடப் பண்டிகைகளை ஒட்டி ஏ-9 வீதியூடான போக்குவரத்தை இரவு 9.30 மணி வரை நீடிக்க வசதியாக தங்கள் சோதனை நிலையங்களை இரவு 9.30 மணி வரை திறக்க விடுதலைப் புலிகள் ஏற்பாடு செய்திருந்தபோதும் இராணுவச் சோதனை நிலையங்கள் நேரகாலத்துடன் மூடப்பட்டமை தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பயணிகள் போக்குவரத்தை தற்போதைய நேரத்திலும் பார்க்க ஒரு மணிநேரம் கூடுதலாக - அதாவது மாலை 6.30 மணிவரை மட்டுமே - நீடிப்பது என்று இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன்படி இன்றைய தினமும் மாலை 6.30 மணிவரை போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும். எதிர்வரும் 31ஆம், முதலாம் திகதிகளிலும் இதே நடைமுறையே பின்

(18ஆம் பக்கம் பார்க்க)




# தேவாலயங்களில் நேற்று நள்ளிரவு பிரார்த்தனைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.25

குடாநாட்டில் உள்ள பல கிறிஸ்தவ ஆலயங்களில் நேற்று நள்ளிரவு நடந்த கிறிஸ்மஸ் ஆராதனைகளில் மக்கள் கலந்துகொண்டனர். மக்கள் தேவாலயங்களில் நடந்த பூஜைகளில் கலந்துகொள்ளச் சென்றதால் நேற்றிரவு முழுவதும் வீதிகளில் சன நடமாட்டம் காணப்பட்டது. பட்டாசு வெடிச்சத்தங்களும் பரவலாகக் கேட்டபடி இருந்தன.

இதேவேளை, கொளுத்திய பட்டாசை காலினால் அணைக்க முற்பட்டதாகக் கூறப்படும் சிறுவனொருவன் அது வெடித்ததில் காலில் பலத்த காயமடைந்தான். யாழ்.திருநகரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அமலதாஸ் (வயது-11) என்ற சிறுவனே இவ்வாறு இடது காலில் பாதப் பகுதியில் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான். (எ-7)

# சமாதானப் பேச்சின் தலைவிதியை தீர்மானிக்கக் கொழும்பில் மாநாடு?

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய எதிர்வரும் ஜனவரி மாத ஆரம்பத்தில் கொழும்பில் முக்கிய மாநாடொன்று நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் இணைத் தலைமையை ஏற்ற நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்வர் என்று தினசரிப் பத்திரிகைச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக இம்மாநாட்டில் முக்கிய தீர்மானம் எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இணைத் தலைமை வகித்த அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் பிரதிநிதிகளே இம்மாநாட்டில் பங்குபற்றுவர். சமாதான முன்னெடுப்புகளை மேலும் தொடருவது மற்றும் பின்பற்றவேண்டிய சில நடவடிக்கைகள் குறித்து தகவல் வெளியிடுவதற்காகத் தமிழீழ விடு

(18ஆம் பக்கம் பார்க்க)

### வடமேல் மாகாண சபைத் தேர்தல்:

# யாருக்கு ஆணை வழங்குவது என்பதை மக்கள் தீர்மானிக்க இன்னொரு சந்தர்ப்பம்

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள வடமேல் மாகாண சபைக்கான தேர்தல், நாட்டின் சமாதான முயற்சிகளுக்கும் அரசியல் ஸ்திர நிலைக்கும் மக்கள் தமது ஆணையை வழங்குவதற்குக கிடைக்கும மற்றுமொரு சந்தர்ப்பமாக அமையும்.

நேற்றுமுன்தினம் மாலை குருநாகலில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதால் சமாதான நடவடிக்கைகள் உட்பட பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது சிரமமான காரியம். பெப்ரவரி 8ஆம் திகதி வடமேல் மாகாண சபை தானாகவே கலைந்துவிடுகிறது. அதனை யாரும் கலைக்கமாட்டார்கள். ஜனாதிபதியோ, பிரதமரோ இதற்கான தீர்மானத்தை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் மக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு மீண்டும் செல்ல வேண்டியேற்படும். நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுக்காக அல்ல; புதிதாகத் தங்களது மாகாண சபையைத் தெரிவு செய்து கொள்வதற்காக.

ஏதாவது ஒன்றைச் செய்வது என்பது சிரமம்; அழிப்பது இலகுவான செயலாகும். இரண்டு மூன்று வருடங்களாகப் பல்வேறு சிரமங்களுக்கு

(18ஆம் பக்கம் பார்க்க)

### வாசகர்களுக்கு...!

நத்தார் பண்டிகையை ஒட்டி இன்றைய 'உதயன்' 26 பக்கங்களுடன் வெளியாகின்றது.

உதயனின் வழக்கமான அம்சங்கள் 18 பக்கங்களில் தனியாகவும் -

நான்கு வர்ணப் பக்கங்களுடன் கூடிய நத்தார் சிறப்புமலர் தனி இணைப்பாகவும் வெளியாகின்றன.

உங்கள் 'உதயன்' பிரதியோடு நத்தார் சிறப்பு மலரையும் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

### இயல்பு நிலையை ஏற்படுத்த

# அரசினர்-புலிகள்-படையினர் இணைந்து மக்கள் சேவை!

## அழைப்பு விடுக்கிறார் புதிய யாழ். தளபதி

யாழ்ப்பாணம்,டிசெ.25

குடாநாட்டில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இயல்புநிலையை ஏற்படுத்த அரசு - படையினர் - விடுதலைப் புலிகள் ஆகிய முத்தரப்பினரும் ஒன்றாக இணைந்து பணிபுரிய வேண்டும் சகல தரப்புக்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் என நம்புகின்றேன் என்று யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தெரிவித்தார்.

குடாநாட்டில் பணிபுரியும் அரச திணைக்களங்களின் தலைவர்களுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடந்த இக்கலந்துரையாடலில் சகல திணைக்களங்களின் தலைவர்களும், பிரதேச செயலாளர்களும் கலந்துகொண்டனர்.

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள விவரணப்படம் தொலைக்காட்சி மூலம் தளபதிக்கு முதலில் காண்பிக்கப்பட்டது. மக்களின் பிரச்சினைகள் குறித்து அரச அதிபர் தளபதிக்கு விளக்கமளித்தார்.

அதன்பின் தளபதி உரையாற்றுகையில் கூறியதாவது:-

குடாநாட்டில் உள்ள அப்பாவி மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்

(18ஆம் பக்கம் பார்க்க)

# மூன்றாம் தரப்புக் கோரிக்கை நிராகரிக்கப்படின் சமாதானப் பேச்சுக்கள் படுதோல்வியடையும்!

## அமைச்சர் ஹக்கீம் அடித்துக் கூறுகிறார்

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவதை அரசும் விடுதலைப் புலிகளும் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டிருக்கும்பொழுது முஸ்லிம்கள் தனித் தரப்பாக கலந்துகொள்ளும் உரிமை - புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறுவதைப்போன்று மறுக்கப்படுமானால் பேச்சுக்கள் படுதோல்வி அடையும் அதில் எந்தவொரு தரப்பும் வெற்றியடைய முடியாது.

- இப்படிக் கூறியுள்ளார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுடன் உரையாடிய சு.ப தமிழ்ச்செல்வன், பிரபா - ஹக்கீம் உடன்படிக்கை எப்பொழுதோ முறிந்து காலாவதியாகிவிட்டதாகத் தெரிவித்தார் என்று கூறப்படுவது குறித்து கருத்து வெளியிட்டபோதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு - கிழக்கில் தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீண்டும் தங்களது சொந்த இடங்களில் வந்து குடியேறுமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்னுடன் சேர்ந்து கையொப்பமிட்ட கூட்டறிக்கையில் தெரிவித்திருந்தார். கூட்டறிக்கை முறிவடைந்துவிட்டதென்றால் குறிப்பிடப்பட்ட அம்சமும் இப்போது கைவிடப்பட்டு அவர்களை அங்கு மீண்டும் வரவேண்டாம் என்று இப்போது கூறப்படுகின்றதா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## 13 பங்களாதேஷ் மீனவர் கடற்படையினரால் மீட்பு!

கொழும்பு,டிசெ.25

இலங்கைக்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த பங்களாதேஷ் மீனவர்கள் 13 பேரை இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இலங்கை மீனவர்கள் கொடுத்த தகவலையடுத்து அங்கு விரைந்த கடற்படையினர் இவர்களை மீட்டு வந்தனர்.

இந்த மீனவர்கள் தமது மீன்பிடிப் படகில் ஏற்பட்ட தொழில் நுட்பக்கோளாறு காரணமாக கடந்த மாதம் 18ஆம் திகதி தொடக்கம் நடுக்கடலில் தத்தளித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் தற்போது திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். (எ-7)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**



குடாநாட்டில் உள்ள அரச திணைக்களங்களின் தலைவர்களுக்கும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.
சந்திப்பிற்கு தலைமைவகித்த யாழ. அரச அதிபர் செ.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல், படைத் தளபதி சந்திரபால் மற்றும் கலந்துரையாடலில் கலந்து கொண்ட அரச அதிகாரிகள் மற்றும் படை அதிகாரிகள் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி கூடுதல் அதிகாரத்தை எடுத்திருப்பது தமிழர்களுக்குப் பாதிப்பு

## சென்னையில் அமைச்சர் மகேஸ்வரன் பேட்டி

மீனம்பாக்கம்,டிசெ.25

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு வரையறுக்கப்படாத அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்.இது தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் கூறினார்.

சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறியதாவது:-

நான் காஞ்சிபுரம் சென்று சங்கராச்சாரியாரை சந்திக்க உள்ளேன். இலங்கையில் தாமதப்பட்டிருக்கும் அமைதிப் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கும் - தடைகள் விலகும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஜனாதிபதி சந்திரிகா தனக்கு வரையறுக்கப்படாத அதிகாரத்தை எடுத்துக் கொண்டு அமைதிப் பேச்சுக்கள் முன்னேற்றம் அடைந்து வந்த நிலையில் முட்டுக்கட்டை போட்டுவிட்டார் இதை இலங்கைத் தமிழர்கள் சவாலாக ஏற்று, வெற்றி அடைவார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பகுதிகளில் தமிழர்கள் கைதான் ஓங்கியுள்ளது. தமிழர்களுக்கு உரிய அதிகாரம் வழங்கப்படாமல் இலங்கையில் நிரந்தர அமைதி திரும்பாது.

தமிழர்களின் பிரச்சினையை அறிந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைப்பு அளித்து வருகிறார். சந்திரிகா அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதிலேயே குறியாக இருக்கிறார். எது எப்படி இருந்தபோதிலும், தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமையும், அதிகாரமும் கிடைக்கக் கூடிய நேரம் கனிந்து வருகிறது.

-இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# இந்து கலாசார அமைச்சின் பொங்கல் விழா ஜனவரி 18 இல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படும் யாழ் மாவட்டத்திற்கான பொங்கல் விழா எதிர்வரும் 18 ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சின் யாழ் பிராந்திய உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் கலந்துகொள்வார்.

அன்றையதினம் காலை 8 மணிக்கு சுன்னாகம் கதிரைமலைச் சிவன் கோவிலில் பொங்கல் இடம் பெற்று விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து காலை 9.30மணிமுதல் 12.30மணிவரை இராமநாதன் கல்லூரி மைதானத்தில் தேசிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, கபடி, கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், போர்த்தேங்காய் அடித்தல் மற்றும் கிறீஸ் கம்பம் ஏறுதல் என்பன நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து பட்டிமன்றம், கவியரங்கம், நாட்டியம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 3மணி தொடக்கம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் பா. பாஸ்கரனிடம் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.(ஐ-5-ரி)

# அச்சுவேலி பொதுநூலகத்துக்கு நிரந்தரக் கட்டட வசதி இல்லை

## தொடர்ந்து இயங்குவதில் சிரமம்

அச்சுவேலி,டிசெ.25

அச்சுவேலி பொதுநூலகத்திற்கென நிரந்தரக் கட்டடம் இல்லாமையால் அதனைத் தொடர்ந்து இயக்குவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகப் பொது நூலகம் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டே தனியாருக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் இயங்கிவந்தது. அக்கட்டடத்தின் உரிமையும் இப்போது கைமாறி விட்டது. இதனால் நூலகம் சந்நிதி வீதி, புத்தமேனியில் உள்ள தனியார் வீடு ஒன்றிற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

நூலகத்திற்கென நிரந்தரக் கட்டடமொன்று அமைக்கப்படாமையால் அதன் செயற்பாடுகளும் மட்டுப்படுத் தப்பட்ட அளவிலேயே நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8-11)

# யாழ். - பருத்தித்துறை இடையில் தடைப்பட்ட மினிபஸ் சேவை வழமைக்குத் திரும்பியது

இரு தினங்கள் இடைவெளிக்குப் பின்னர் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் (பாதை இல.750) மினிபஸ்சேவை விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரின் முயற்சியை அடுத்து நேற்று முதல் வழமைக்குத் திரும்பியது.

போக்குவரத்து நேர அட்டவணை, யாழ்.பஸ்நிலையத் தரிப்பிடம் என்பன தொடர்பாக யாழ்.மாவட்ட மினிபஸ் சங்கங்களின் தலைமையகம் எடுத்த நடவடிக்கையை ஆட்சேபித்து கடந்த திங்கள்,செவ்வாய் ஆகிய இரு தினங்களும் மினிபஸ்சேவைகளை வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் நடத்தவில்லை.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை இரு தரப்பினருடனும் பேச்சுக்கள் நடத்தி சமரச முயற்சியை மேற்கொண்டதன் பேரில் மீண்டும் நேற்றுமுதல் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் மினிபஸ் சேவைகள் ஆரம்பமாகின.

எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரம்

...எமது வாசலைத் தட்டும் கொடிய எய்ட்ஸ் நோயிலிருந்து எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாப்போம்....!

## நத்தார் பெருவிழா ஒன்று கூடல்

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நத்தார் பெருவிழா ஒன்றுகூடல் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பத்திரிசியார் கல்லூரி மதுரம் சதுக்கத்தில் தலைவர் அருட் கலாநிதி ஜே.பி. ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் நடைபெறும்.

இந்த ஒன்று கூடலில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகவும் குரு முதல்வர் வணபிதா ஜே.பி. நிக்கலஸ் அடிகள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(எ-51).

# கூட். சங்கப் பணியாளருக்கு சம்பள நிலுவை கொடுப்பனவு

அரியாலை,டிசெ.24

நத்தார் மற்றும் புதுவருடப் பண்டிகைகளை முன்னிட்டு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

கடந்த 2000ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கூட்டுறவுப் பணியாளர்களுக்கான புதிய சம்பள அதிகரிப்பின் அடிப்படையில் இதுவரை வழங்கப்படாது நிலுவையாக இருந்த கொடுப்பனவே தற்போது வழங்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் கூ.சிறில் தெரிவித்தார்.

சங்கப் பணியாளர்களில் 55 பேருக்கு நிலுவைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## மினிபஸ் விபத்துக்குள்ளான சம்பவம்:

# கைதான ஐவருக்கும் நீதிமன்று பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.கல்வியங்காட்டுச் சந்திக்குச் சமீபமாக, கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மினிபஸ் விபத்தினைத் தொடர்ந்து கலவரத்தில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐவரையும் பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் அனுமதியளித்தது.

இந்த வழக்கு விசாரணைகள் நேற்று நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றன. அச்சமயம் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் ஐந்து சந்தேக நபர்களையும் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி நீதிமன்றில் பிணை மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

மனுவை விசாரித்த நீதிவான், ஐவரையும் தலா 3ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் - தலா 15ஆயிரம் ரூபா அரச உத்தியோகத்தரது ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்ததுடன் - தினமும் காலை 8 மணிக்கும் - 12 மணிக்கும் இடைப்பட்ட காலவேளையில் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் கையொப்பம் இடுமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை - சம்பவ இடத்தில் இருந்து பொலீஸாரால் மீட்கப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்ட 29 சைக்கிள்களில் 7 சைக்கிள்களுக்கு அவற்றின் உரிமையாளர்களால் மன்றில் உரிமை கோரப்பட்டது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட 7 சைக்கிள்களின் உரிமையாளர்களையும் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளிக்குமாறு உத்தரவிட்டதுடன், அவர்களிடம் பெற்ற வாக்குமூலங்களை நாளை வெள்ளிக்கிழமை மன்றில் சமர்ப்பிக்குமாறும் கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இது தொடர்பான அடுத்த கட்ட விசாரணைகள் எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெறும். (எ-5-ரி)

# தெற்கில் பிரதேச செயலர்கள் நேற்று வேலை நிறுத்தம்

தென்னிலங்கையில் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் பிரதேச செயலகங்களின் வேலைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

பிரதேச செயலாளர்களும், உதவிப் பிரதேச செயலாளர்களும், செயலக அதிகாரிகளும் பிரதேசசெயலகங்களுக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புளத்சிங்கள பிரதேச செயலாளரை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவரது ஆதரவாளர்களும் தாக்கிய சம்பவங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பிரதேச செயலாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஆனந்த குமார லொக்குநணவக்க தெரிவித்தார்.

கண்டி, மொனறாகலை, அம்பாந்தோட்டை உட்பட அநேகமான பிரதேசங்களில் மாவட்ட செயலாளர்களும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து ஆராய்வதற்கு பிரதமர் குழுவொன்று நியமித்துள்ளார்.

(ஐ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று செயலாளர்கள் வழமை போன்று கடமை

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதேச செயலாளர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட போதிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலாளர்கள் வழமையான நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களும் வழமை போன்று செயற்பட்டன. பிரதேச செயலாளர்கள் கடமைக்குச் சமூகமளித்து சேவையில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக சில பிரதேச செயலாளர்கள் பிரஸ்தாபிக்கையில் "கடந்த கால யுத்த சூழ்நிலையின் போது வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எத்தனையோ பிரதேச செயலாளர்கள் தாக்கப் பட்டும், கைது செய்யப்பட்டும், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டும் உள்ளனர். அப்போது வடக்கு - கிழக்கிற்கு வெளியே உள்ள பிரதேச செயலாளர்கள் அவற்றை கண்டு கொள்ளாமல் மௌனமாகவே இருந்தனர்.இதனால் இப்போது நாங்கள் கடமையிலீடுபட்டுள்ளோம் - என்றனர்.

இராணுவக்கட்டுப்பாடற்ற வவுணதீவு, வெல்லாவெளி, பட்டிப்பளை, வாகரை ஆகிய இடங்களிலுள்ள பிரதேச செயலகங்களும் வழமை போன்று இயங்கின.

# மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக செயலகத்தில் திங்களன்று கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ. 25

யாழ். மாவட்டத்தின் துரித அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது..

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் காலை 10 மணிக்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் அமைச்சரவையின் செயலாளர் என்.வி.கே.கே.வேரஹெர கலந்து கொள்ளவுள்ளார்.

அடுத்த ஆண்டில் யாழ் மாவட்டத்தில் செயற்படுத்தக்கூடிய துரித அபிவிருத்தித்திட்டத்தைத் தயாரித்தல், அமுல்படுத்தல் தொடர்பான முன்மொழிவுகளும், ஆலோசனைகளும் இக்கூட்டத்தில் பெறப்படவுள்ளன. (ம-8-185)

# "உதயன்" நத்தார் சிறப்புமலர் 25.12.2003

## ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நம்மை அர்ப்பணம் செய்வோம்!



**2003** வருடங்களுக்கு முன்னர் இயேசு பிரான் உலகத்தில் அவதரித்தபொழுது, உரோமப் பேரரசு தனது புகழின் உச்சியை அடைந்திருந்தது. அவர்கள் தமது ஆட்சியினாலேதான் உலகில் சமாதானம் ஏற்பட்டுள்ளது என்று பெருமைப்பட்டனர். இதனை உரோமச் சமாதானம் (PAXROMANA) என்று குறிப்பிட்டனர்.

இந்தச் சமாதானத்தில் வெகுசிலரே இன்பத்தை அனுபவித்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் வேதனையில் உழன்றனர். குடிமதிப்பு எடுக்கப்படல், இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகள் வெட்டிக்கொல்லப்படுதல் எல்லாமே உரோமச் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகத் தான் நடைபெற்றன.

இயேசுபிரான் இதுவல்ல சமாதானம் என்றுரைத்தார். சமாதானம் இராணுவத் தளபாடங்களினாலும் அடக்குமுறையினாலும் வருவதல்ல. அது மனிதர்களுக்கிடையே வளர்கின்ற பரஸ்பர நல்லுறவினால் ஏற்படுவதென்று கிராமங்களிலே அருளுரையாற்றி வந்தார். மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விலேதான் சமாதானம் தங்கியுள்ளது. இந்தச் சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதனை எனக்கே செய்தீர்கள் என்றார். ஐஸ்வரியவான் பரலோகராஜ்யத்திற்குள் செல்வதை விட ஒட்டகமானது ஊசியின் காதில் நுழைவது எளிது என்றார்.

அன்றைய உரோமப் பேரரசுக்கு இந்தப் போதனைகள் சிரிப்பாக இருந்திருக்கலாம். ஆனால், உரோமரின் வெற்றிகளைப் பற்றியும் ஆதிக்கத்தினைப் பற்றியும் நாம் இப்பொழுது வரலாற்று நூல்களிலேதான் படிக்கின்றோம்.

ஆனால், இயேசுபிரான் ஆரம்பித்துவைத்த கண்ணீர் துடைக்கும் இயக்கம் இன்று வரை வீறு குன்றாது வளர்ந்து வருகின்றது.

அவர் அவதரித்த இப்புனித நாளிலே மீண்டும் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, உரிமைகள் இழந்த மக்களின் நல்வாழ்வுக்காக மீண்டும் நம்மை அர்ப்பணம் செய்வோம். தெய்வீக பாலன் அருளும், சமாதானமும் -

சாந்தியும் உங்கள் அனைவரோடும் தங்குவதாக!

**எஸ்.ஜெபசேன்,**
தென்னிந்திய திருச்சபை பேராயர்.



## இயேசுவின் பொன்மொழிகளைப் பின்பற்றி உலகைச் சமாதான பூமியாக்குவோம்!

### நத்தார் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



இயேசுவின் பொன்மொழிகளை ஆழ்ந்து சிந்தித்து, தினமும் அவற்றுக்குச் செயலுருக் கொடுப்போம். இதன் மூலம் நாம் வாழும் இந்த உலகைச் சமாதான பூமியாக மிளிரச்செய்யலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

அனைவருக்கும் சமாதானம் நிறைந்த நத்தார் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி, செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது:-

நத்தார் பண்டிகையானது உலகம் சமாதானக் குமரனான இயேசுபிரானின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் திருநாளாகும். நத்தார் தினம் சாந்தியையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் முழுக் கிறிஸ்தவ உலகத்தையும் தாண்டி அனைவருக்கும் ஒன்றுசேர வழங்குகின்றது.

இலங்கையர்களாகிய நாம் ஏனைய சில நாடுகளில் இல்லாத மதச் சுதந்திரத்தையும் அதைப் பேணி வளர்த்து, பாதுகாக்கும் தன்மையையும் தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றோம்.

நூற்றாண்டு காலமாக ஒவ்வொரு மதத்தையும், மதிப்பதற்கும், ஏனையோரின் மகிழ்ச்சியில் பங்குகொள்வதற்கும் நாம் பழக்கப்பட்டிருக்கின்றோம். இந்தப் பெறுமதிமிக்க மரபுகளை நாம் தொடர்ந்தும் உயிரோட்டத்துடன் பேணுவோமாக.

"நீ உனது எதிரி மீது நேசம் காட்டு,
உன்னைச் சபிப்பவனை நீ ஆசீர்வதி,
உன்னை வெறுப்பவனுக்கு நீ நன்மை செய்,
உன்னை வஞ்சிப்பவனுக்கும், உனக்குத் தொந்தரவு கொடுப்போனுக்குமாக நீ பிரார்த்தனை செய்"
மத்தியூ-5:44

என்ற பைபிள் வசனங்களை இக்காலகட்டத்தில் பின்பற்றுவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

இயேசுநாதரின் இந்த வசனங்களை நாம் பெருநாள் காலங்களில் மட்டும் ஞாபகப்படுத்தாது அவற்றை ஆழ்ந்து சிந்தித்து, தினமும் இதற்குச் செயலுருக்கொடுப்போம்.

- இவ்வாறு செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நிரந்தர சமாதானத்துக்காக பொறுப்புடன் ஒன்றுபடுவோம்!



உலகமெங்கும் வாழும் கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்கள் கௌரவத்துடனும், பக்தியுடனும், சந்தோசத்துடனும் இயேசுபிரான் பிறப்பைக் கொண்டாடும் நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வாழும் கத்தோலிக்க பக்தர்களுக்காக நத்தார் வாழ்த்தைத் தெரிவிப்பதை நான், எனக்குக் கிடைத்த பாக்கியமாகக் கருதுகின்றேன்.

இந்நாட்டில் போத்துக்கீசர்கள் வருகையுடன், சுமார் 1505 வருடங்களுக்கு முன் கத்தோலிக்க மதம் ஆரம்பிக்கப்பட்டது என சான்றுகள் கூறுகின்றன. குறிப்பாக, கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மத்தியிலே கிறிஸ்தவமதம் மிகவும் வேகமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இன்று இலங்கை பூராகவும் சுமார் லட்சக்கணக்கான மக்கள் நத்தார் தினத்தை மிக கௌரவமாக பத்தியுடன் கொண்டாடுகின்றார்கள். அண்மைக்காலமாக இலங்கையில் கலாசாரம் மற்றும் மதநடவடிக்கை காரணமாக நன்மைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதற்கான அறிகுறிகள தென்படுகின்றன. 1948ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க அஹிம்சை வழியில் போராடியதில் கிறிஸ்தவ மக்களின் பங்களிப்பு பெருமளவில் கிடைத்ததோடு, இந்தப் பங்களிப்பு குறித்து வார்த்தையில் வர்ணிக்க முடியாது. சகல இன மக்களுடனும் சகல மதத் தலைவர்களுடனும் இதுவரை கிறிஸ்தவ மக்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவும் இந்நாட்டின் அபிவிருத்திக்காகவும் வழங்கிய பங்களிப்பும் அதிகமெனவே கூறவேண்டும். அதேபோல் அவர்கள் நல்லெண்ணத்துடன் வாழும் கௌரமானவர்கள் எனவும் கூறவேண்டும்.

இவ்வுலகில் வாழும் சகல மனிதர்களும் தமது மதம் என்ற நம்பிக்கையுடன் செயற்படுவது உண்மை. ஆனால், இவ்வுலகில் உதித்த சகல மதத் தலைவர்களும், போதகர்களும் தர்மத்தையே போதித்தார்கள். அதேபோல் இயேசுபிரான் போதித்ததும் அதுவே தான். மற்றவர்களை நேசித்து அவர்கள் மீது அன்பு செலுத்துங்கள். கருணை காட்டுங்கள் என்று. இயேசு பிரான் கூறியதுபோல் உலக மக்கள் அனைவரும் ஒவ்வொரு வரும் கருணையுடனும், மற்றவர்களை நேசித்து அன்பு செலுத்தினால் இன்று இவ்வுலகில் எந்தவோர் இடத்திலும் மோதல்களும், யுத்தமும் இடம்பெறாது. யுத்தம், இரத்தம் சிந்திப் புரட்சி, மோதல் நடந்த காலத்தில்தான் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் உதித்தார். அன்று முதல் சமாதானம், அமைதியைப் பற்றியே அவர் போதித்தார். அப்போதே அவர் தெரிந்திருந்தார் சமாதானமும், அமைதியும் இல்லாத மனித வாழ்க்கை ஒரு வாழ்க்கையாகாது என்பதை. அதனால்தான் நாம் இன்றும் சமாதானத்தின் குமாரன் எனக் கூறுகின்றோம் இயேசு பிரானை. அவர் இன, மதம், ஜாதி என வேற்றுமை இன்றி சகல மக்களுக்கும் ஒரே விதமான தர்ம போதனை செய்தார்.

தற்போது நம் நாட்டில் உருவாகியுள்ள துன்பநிலையில் இருந்து விடுபட இயேசு கிறிஸ்துவின் வழிகாட்டலும், போதனைகளுமே போதுமானது என நான் நினைக்கிறேன். அனைவரும் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் கருணையுடன் வாழ வழிகாட்டிய அவர் ஒருவரை ஒருவர் கொன்றும், பேராசையால் பழிவாங்க இடமளிக்கவில்லை. அதனால் இரு தசாப்தங்களாக இடம்பெற்றும் இந்நாட்டு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்து நிரந்தர சமாதானத்தை உருவாக்க இந்த கிறிஸ்து பிறப்பில் உடன்படுவோமாக. புனித தினமான இந்நாளில் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட பிரார்த்திக்கின்றேன். மொழியில் மாற்றம் இருந்தாலும் இன்றைய தினத்தை தென்பகுதியில் வசிக்கும் சிங்கள, போகர் இன மக்களும் இந்தப் புனித நத்தார் தினத்தை உங்களுடன் கொண்டாடுகின்றார்கள் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்.

அவர்கள் அனைவரும் கொண்டாடுவது ஒரே இயேசு பிறப்பை. இனத்திற்கும் மொழிக்கும் வேறுபாடு இருந்தாலும் இந்தத் தினத்தை இனவாதிகள் இந்த சிறிய தீவில் பிரித்துக் கொண்டாட இடமளிக்கக்கூடாது. இன்று நீங்களும் சரி, உங்கள் பிள்ளைகளும் சரி, பெற்றோர்களும் உறவினர்களும் கூட இன்றைய தினத்தை எவ்வளவு சந்தோசமாகக் கொண்டாடுகின்றீர்கள். சமாதானம் என்ற வார்த்தை இன்றுடன் தடைப்பட்டு விடக்கூடாது. நிரந்தர சமாதானமாக உருவாக்கிக் கொள்ள நாம் அனைவரும் இந்நாளில் பொறுப்புடன் செயற்பட ஒன்றுகூடுவோம்.

உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான நத்தார் தினமாக அமையட்டும்!

**மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால,**
யாழ்.மாவட்ட படைத்தளபதி

## நிலையான சமாதானத் தீர்வை பேச்சு, புரிந்துணர்வு மூலம் அடையலாம்

### வாழ்த்துச் செய்தியில் பிரதமர் நம்பிக்கை



எமது நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடுகையில் இன, மத, மொழி அல்லது அரசியல் அடிப்படையிலான பிரிவினைப் போக்குகளைக் கைவிட்டு, ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும் செயலாற்ற எம்மை அர்ப்பணிக்க கிறிஸ்மஸ் பண்டிகை ஒரு சந்தர்ப்பமாகும். அடுத்தவரின் பிரச்சினைகள் குறித்து பேசுவதன் மூலம், புரிந்துகொள்வதன் மூலம் இலங்கையில் நீண்டகால, நிலையான சமாதானத்தை அடைய ஒரு தீர்வை நாம் கண்டடைய முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

மகிழ்ச்சிகரமான கிறிஸ்மஸ், சமாதான - சுபீட்சமான புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கும் பிரதமர், செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

அன்பு, கருணை ஆகிய அடிப்படை மனிதப் பெறுமானங்களைக் காட்டிலும் அதிகாரத்தையும், பதவியையும் பெரிதாக மதிக்கும் ஒரு உலகில் வசதி குறைந்தோருக்கும் நிர்க்கதியானோருக்கும் உதவும் கிறிஸ்துவின் செய்தியை கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்கள் அல்லாதோரும் நினைவில் கொள்வது நன்று.

கூட்டிணைவுக்கு இது ஒரு சந்தர்ப்பம். ஆயினும், கொடுப்பதற்கும், பங்கிட்டுக் கொள்வதற்கும் மிகவும் ஒரு நல்ல சந்தர்ப்பம். அன்பு, தாழ்மை, சமாதானம் ஆகிய கிறிஸ்மஸின் உண்மையான செய்தியை வெளிச்சங்களின் பிரகாசமும், பட்டாசுகளின் ஓசையும் கொண்டுசென்று விடக் கூடாது.

- இவ்வாறு செய்தியில் குறிப்பிட்டிருக்கிறது.

## மனித விழுமியங்களுக்கு புத்துயிர் கொடுப்போம்!

உலகில் தோன்றிய சமயத்தலைவர்கள் அனைவரும் சமூகத்தலைவர்களாகவே காணப்பட்டனர். அவனியில் அநீதி, அடக்குமுறை, அதர்மம் அதிகரிக்கும் போது நீதி, விடுதலை, தர்மம் முதலியவற்றை நிலைநிறுத்துவதற்காக புனிதர்கள் மனிதங்களாக மாறியது. இறைவனுடன் இருந்த கிறிஸ்து மனு அவதாரம் எடுத்த நிகழ்வே கிறிஸ்மஸ் பண்டிகையாகும். மனுக்கோலம் பூண்ட கடவுள் இக்காலத்தில் எமக்கு பெரிய சவாலையும் உற்சாகத்தையும் வழங்கும் செய்திகளை அறிவிக்கின்றார்.

புனிதங்கள் மனிதங்களாக மாறியதன் நோக்கம் என்னவெனில் எம்மிடையே தொலைந்து போன மனிதப்பண்புகளை தேடுவதற்காகவே ஆகும். எனவே, எம்மிடையே அழிந்துபோன நிலையில் இருக்கும் மனித விழுமியங்களுக்கு புத்துயிர் கொடுக்கவேண்டியது எமது பணியாகும். இறைவனின் இப்பணியை தொடர்ந்து செய்யும் மனிதர்கள் அனைவரும் புனிதர்களாக மாறுகின்றனர். இது எம்மை நோக்கி வரும் பெரும் சவால் ஆகும்.

கடவுள் மனுவுரு எடுத்ததன் மூலம் மனித வாழ்வை அவர் அங்கீகரித்தார். அவர் மனித வாழ்வின் அனுபவங்களோடு ஒன்றாக இணைகின்றார். எனவே, எமக்கு நேரிடும் துயர அனுபவங்களின் மத்தியில் மனுவுரு எடுத்த கடவுள் எம்மிடையே இருந்து எம்மை ஆறுதல்படுத்தி எம்முடன் இணைந்து வேதனையையும் அனுபவிக்கின்றார். இது எமக்குப் பெரும் உற்சாகத்தைத் தரும் செய்தியாகும். ஆகவே, கடவுள் எம்மைச் சவாலிடுவதற்காகவும் உற்சாகத்தை வழங்குவதற்காகவும் மனுவுரு எடுத்தார்.

உங்கள் அனைவருக்கும் எங்கள் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக!

**குரு முதல்வர் செ.பி.நேசகுமார்,**
இலங்கைத் திருச்சபை, யாழ்ப்பாணம்.

# இளங்கலைஞர் மன்றம்

## மார்கழி இசை நிகழ்ச்சி

மன்ற கலாமண்டபத்தில் இன்று (25.12.2003) வியாழக்கிழமை மாலை 5.30 மணிமுதல் நடைபெறும்.

**இன்னிசைக் கச்சேரி**

பாட்டு - திருமதி சுப்புலட்சுமி சச்சிதானந்தம்
வயலின் - S.கோபிதாஸ்
மிருதங்கம் - Y.வேணிலான்
கெஞ்சிரா - K.அனந்தகோபன்

**சிறப்பு நாதஸ்வர தவில் கச்சேரி**

நாதஸ்வரம் :
P.S.பாலமுருகன் (நல்லூர்)
K.P.குமரேஸ் (கோண்டாவில்)
தவில்:
ஜேர்மன் நாட்டில் இருந்து வருகை தந்த
தவில் கடரொளி K.P. செல்வநாயகம், P.S.செந்தில்நாதன் (நல்லூர்)

**இன்னிசைக் கச்சேரி**

பாட்டு - இன்னிசை வேந்தர் பொன்.சுந்தரலிங்கம் அவர்களின் சகோதரன். நோர்வே நாட்டில் இருந்து வருகை தந்த
பொன். சுபாஸ்சந்திரன்
வயலின் - A.ஜெயராமன்
மிருதங்கம் - S.மகேந்திரன்
தபேலா - M.லோகேந்திரன்
முகர்சிங் - K.நந்தகுமார்
கெஞ்சிரா - K.அனந்தகோபன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**- மன்றத்தினர்.**

(26289) (12-16-18-32)



# யுனிவேர்சல் லிங் கம்பியூட்டர் சேல்ஸ் & சேவிஸஸ்

127/1, கோவில் வீதி, யாழ்ப்பாணம்



இன்றைய நவின உலகில் கணனி அறிவு மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் இரண்டறக் கலக்க ஆரம்பித்துள்ளதால் சிறுவர்களின் எதிர்கால நலன் கருதி கணனியின் பிரயோகம் பற்றிய மூன்று மாத ஆரம்பக்கற்கை நெறியை ஆரம்பிக்கின்றோம்.

- ஆண்டு 5தொடக்கம் 8வரையிலான மாணவர்களுக்குப் பிரத்தியேக ஆரம்பக் கணனிப் பயிற்சிகள்.
- ஆண்டு 9தொடக்கம் 11வரையிலான மாணவர்களுக்கான விசேட கணனிக் கற்கை நெறி.
  - கணனி சம்பந்தமான ஆரம்பக் கற்கை.
  - எப்படி இன்ரநெற்றைப் பிரயோகிப்பது?
  - சான்றிதழ் கற்கை நெறிகளுக்கான ஆரம்பப் பயிற்சிகள்.

## ஆரம்பம்: 10-01-2004

## விண்ணப்ப முடிவு திகதி: 05-01-2004

(26104) (32-16-18)

மட்டுப்படுத்தப்பட்ட குழுக்களாக வகுப்புகள் பிரிக்கப்பட்டு தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மாணவர் மீதும் கவனம் செலுத்தப்படும்.
விண்ணப்பப்படிவங்களையும் விவரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
மாணவர்களது வசதிக்கேற்ப ஏனைய ரியூசன் வகுப்புகளைப் பாதிக்காத வகையில் வகுப்புகள் ஒழுங்கு செய்யப்படும். நிர்வாகம்


# நீங்காத நினைவலைகள்

**2 ஆம் ஆண்டு** **9 ஆம் ஆண்டு**



திருமதி
கந்தையா சின்னத்தங்கம்
06.05.1914 ← தோற்றம் → 18.01.1939
16.12.2001 ← மறைவு → 24.12.1994
திதி: 25.12.2003



அமரர் கந்தையா சுப்பிரமணியம்
(சோதிடர் - இரத்தினம்)
திதி: 14.01.2004

அன்ன மூட்டிய தெய்வமணிக்கையின்
ஆணை வழிநடந்ததும்
அண்ணன் எனும் தெய்வ நிழலில்
ஆறுதலடைந்ததும்
இன்று போலிருக்குது
இன்னல் தீர்த்திடும் வார்த்தைகள் கேட்க
ஏங்கித் துடிக்குது ஊரும் உறவும்

*வேலணை, வங்களாவடி.*

தகவல்:
- குடும்பத்தினர்.


# ELECTRICAL ENGINEER

## தேவை

கொழும்பில் இயங்கும் மின்சார ஒப்பந்த வேலைகளில் ஈடுபடும் நிறுவனமொன்றுக்கு, யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் வேலையிலீடுபடுத்த ஒரு

ELECTRICAL ENGINEER

தேவைப்படுகிறார்.

விண்ணப்பதாரர் மிகவும் அனுபவமுள்ளவராகவும் தாமாகவே திட்டமிட்டு, வளங்களைத் திரட்டி உயர்தொழில்சார் ரீதியாக வேலைகளை விரைவாக முடிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். பல்கலைக் கழகப்பட்டதாரிகள் அல்லது தொழில்நுட்பக் கல்லூரித் தகைமைகளையுடையவர்கள் விரும்பத்தக்கது. உங்கள் விண்ணப்பங்களை தொடர்பு தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு பின்வரும் FAX இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

**FAX No: (011) 2588777.** (C/32259) (26-16-18-32)


# ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,டிசெ.25

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மீக சஞ்சிகையின் மார்கழிமாத இதழ் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

சஞ்சிகைக்கான வெளியீட்டுரையை சமாதானநீதிவான் எஸ்.தேவதாசனும் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிச்சாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்த மூர்த்தியும் நிகழ்த்துவர். (எ-173)

# மீளக்குடியமர்ந்தோருக்கு உதவிப் பொருள்கள்

வடமராட்சி,டிசெ.25

ஏனைய மாவட்டங்களிலிருந்து வந்த தென்மராட்சிப் பிரதேசத்தில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினால் உணவுப் பண்டகம் அல்லாத பொருள்கள் நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே வழங்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் இது வரை மேற்படி பொருள்களைப் பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கே தற்போது பொருள்கள் வழங்கப்படவுள்ளன என பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (எ-117)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவராசா முத்தம்மா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா முத்தம்மா நேற்று (24.12.2003) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் செல்லையா சிவராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சேதுப்பிள்ளையின் மருமகளும் சுசீலாதேவி (கச்சி-நீர்வேலி), சற்குணலிங்கம் (ஆஸ்திரேலியா), இந்திராதேவி (கொழும்பு), சந்திராதேவி (கொழும்பு), சிறதா தேவி (ஆஸ்திரேலியா), ஜெயக்குமார் (கனடா), சாந்தகுமார் (கனடா-வன்கூவர்), அஞ்சலிதேவி (கனடா), நிறைஞ்சலிதேவி (டென்மார்க்), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசநாயகம் (நீர்வேலி-ஓய்வூதியர் இலங்கை வங்கி), கனகாம்பாள் (ஆஸ்திரேலியா), தெயவேந்திரம் (கொழும்பு), காலஞ்சென்ற இராசதுரை (இருபாலை-லக்ஸ்பான்சி ஹவுஸ்) மற்றும ஜெகதீஸ்வரன் (ஆஸ்திரேலியா), கோமதி (கனடா), கலானி (கனடா-வன்கூவர்), பாலரவீந்திரன் (கனடா), ஜீவானந்தன் (டென்மார்க்), சித்திரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.இராசநாயகம் (மருமகன்)
T.P.:0602213413

*கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.* (26303)(18-16-32)

## கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர்

**(முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்)**

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வதிவிடமாகக் கொண்டவரும், பிரான்ஸில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர் 22.12.2003 திங்கட்கிழமை பிரான்ஸில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் மூத்த புதல்வனும் இந்திராணியின் அன்புக் கணவரும் கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.12.2003) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுககொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்,சகோதரிகள், மைத்துனர்மார்.

*நுணாவில் மேற்கு சாவகச்சேரி.* (சி-32266)(36-16-18)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 537 |
| திகதி | 23.12.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4413148-4428361

வெற்றி இலக்கங்கள் **20 36 44 52**



லக்கினம்
துலாம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,736,850/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,490,300/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 337,481 | 10 | 3,374,810 |
| 2 இலக்கங்கள் | 30,903 | 20 | 618,060 |
| 1 இல + லக்கினம் | 30,744 | 30 | 922,320 |
| 2 இல + லக்கினம் | 2,828 | 100 | 282,800 |
| 3 இலக்கங்கள் | 836 | 500 | 418,000 |
| 3 இல + லக்கினம் | 81 | 5,000 | 405,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 402,878 | - | 6,520,990 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,520,990/-

தொடர் இல. 5403225க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 26ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34., கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**4427622-0-75**
**4420675-3-89**
**4414988-5-41**
**4428349-4-50**
**4421813-4-24**

PHOENIX O&M





புகைப்படப்பிடிப்பாளர்களே...
உங்கள் எண்ணம்போல் விரும்பிய வண்ணங்களில்
விரும்பிய அளவுகளில் நீங்கள் அருகில் இருந்தவாறே உடனுக்குடன்
உங்கள் புகைப்படச்சுருள்களை அழகுற பிரதியாக்கம் செய்து
பெற்றுக்கொள்ள தெரிவுசெய்யவேண்டிய ஒரே நிறுவனம்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு 3 அடங்களுக்கு கட்டணம் இலவசம்!

யாழ் நகரில்..
SKY ELECTRONICS
1c- STANLY ROAD
JAFFNA.

FUJIFILM
IMAGE SERVICE

MOORTHY STUDIO & COLOUR LAB
JAFFNA ROAD, MANIPPAY.
PHONE-021 222 2884.

உதயன்

# மீட்பவர் வழியில் மேயுங்கள்!

மனுக்குலத்தின் மேய்ப்பவர் - இறைமகன் - இயேசுபிரான் நம்பூவுலகில் பிறப்பெடுத்த தினம் இன்று. அது கிறிஸ்தோதயத் திருநாளாக உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.

சமாதானத் தாகத்தில் - அமைதி வேட்கையில் - அல்லலுற்றுத் தவிக்கும் உலக சமுதாயத்துக்கு சமாதானப் பிரபு இயேசுவின் நல்வழிகாட்டல்கள் மிகமிக அவசியமானவை.

"அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவோர். அவர்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர்" - என்றார் தேவசுதன் இயேசு பிரான்.

அமைதியை ஏற்படுத்தும் பேறுபெற்ற நமது தலைவர்கள், அந்தப் பேறைத் துறந்து - கடவுளினால் ஆசீர்வதிக்கப்படும் நல்வாய்ப்பை இழந்து - சாத்தான் வழிநாடி நிற்பதுதான் நமது இன்றைய வேதனை நிலைக்குக் காரணம்.

1980களுக்குப் பின்னர், யுத்தக் கொடூரமும், போரழிவுகளும், மரண ஓலங்களும், குண்டுச் சத்தங்களும் இல்லாத நத்தார் தினத்தை கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் நாம் கொண்டாடினோம்.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் பொதுத்தேர்தலை அடுத்து வந்த கிறிஸ்மஸ் தினத்தில்தான் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்தார். அமைதி வழிக்கான பாதையை அந்த அறிவிப்பு அகலத் திறந்துவிட்டது.

2001 கிறிஸ்தோதய நாளில் ஒளிக்கீற்றாய்த் தோன்றிய சமாதானம் தொடர்ந்து நன்கு பரிணமித்தது. 2002 கிறிஸ்தோதய காலத்தில் அமைதி விளக்கு சுடர் ஒளியாகப் பிரகாசிக்கும் நிலையும் ஏற்பட்டது.

ஆனால், இன்று மூன்றாவது கிறிஸ்தோதய நாளை அமைதியும் சமாதானமும் கானல் நீராகிவிடுமோ என்ற அச்சத்தோடும், சந்தேகத்தோடும், ஆதங்கத்தோடும் அனுஷ்டிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

நாட்டின் அரசியல், சமூகத் தலைவர்கள் மனுக்குலத்தின் மீட்பர் இயேசுபிரான் காட்டிய போதனைகளை மறந்து தம்வழி நடக்கத் தலைப்பட்டதன் விளைவே சமாதானம் - அமைதி - பிழைத்துப் போகும் அச்சநிலை ஏற்படக் காரணமாயிற்று என்பது துலாம்பரம்.

மீட்பராகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து மகிமையிலிருக்கும் தேவனுடைய குமாரனாக இருந்தும் அவர் வேற்றுமை பார்க்காது மானிட சமூகத்திற்காகத் தமது மகிமையிலிருந்து கீழ் இறங்கிவந்து மானிடரானார். காலத்தைக் கடந்த இறைவன், ஞாலத்தைக் காப்பதற்காக, ஓலமிடும் மக்களுக்கு சீலத்தை அறிவிப்பதற்காக, காலத்திற்கு உட்பட்டவரானார்; பாடுகளைச் சுமந்தார்; பலரையும் அரவணைத்தார்.

அவரின் பணி ஆரம்பம் முதல் இறுதிவரை சமாதானத்தை அறிவிக்கும் திருப்பணியாகவே இருந்தது என்பதை நற்செய்தியை அறிவிக்கும் ஏடுகள் நமக்குப் பகர்கின்றன.

அவர் தமது பணி வாழ்வை ஆரம்பிக்கும்போது நிகழ்த்திய மலைப்பிரசங்கத்தில்கூட அமைதியையே வலியுறுத்தினார்.

சமாதானத்துக்காகத் தன்சொல்லாலும் செயலாலும் நற்பணி புரிந்த நமது மேய்ப்பர் அதற்காகவே தன் உயிரையும் உடலையும்கூட அர்ப்பணித்தார்.

ஆனால், மனித சமூகமோ இன்று மேய்ப்பரின்றி - அவர் காட்டிய வழிதுறந்து - அனர்த்தத்தையும், அவலத்தையும் நோக்கி இலக்கின்றி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இரட்சகர் இயேசுவின் நல்வழி காட்டுதல்களை மனங்கொள்வதற்கு நமது சமூகத் தலைவர்கள் தவறியதன் மோசமான விளைவே இது.

பெத்லகேம் நகரில் இற்றைக்கு 2001 ஆண்டுகளுக்கு முன்னர் இயேசு அவதரித்தபோது வானதூதர் பாடிய மகிழ்ச்சிக் கீதம் "உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. பூவுலகில் நன்மனதுடையோர்க்கு அமைதி ஆகுக!" என்பதாகும்.

அந்த அமைதிக்குத்தான் பூவுலக மக்களாகிய நாம் - நமது தேசமக்களுடன் - ஆதங்கம் மிக்க எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றோம்.

உலகத் தலைவர்கள், நாட்டுப் பிரமுகர்கள், சமூக வழிகாட்டிகள் நமது இரட்சகர் காட்டிய வழியில் மேதினியில் அமைதி பிறந்திட உழைப்போம் எனத் திடசங்கற்பம் கொள்ள வேண்டும். மீட்பர் காட்டிய சமாதான வழியில் சமூகத்தை வழிநடத்த அவர்கள் முன்வர வேண்டும்.

அப்போதுதான் மகிமையிலிருக்கும் தேவனுக்கு, உகந்த நிரந்தர சமாதானம் சமூகத்திலும், நாட்டிலும், சர்வதேசத்திலும் நிலைபெறும்.

# மனைவியை 12 நாள்கள் கட்டிவைத்தார்; கணவர் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்கு

உளநலம் பாதிக்கப்பட்டவர் என்று கூறி உணவுகூடக் கொடுக்காது தனது மனைவியை 12 நாள்கள் வீட்டில் கட்டி வைத்திருந்தார் என்று கூறப்படும் நபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தி நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்குமாறு காங்கேசன்துறைப் பொலீஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார்.

முறைப்பாடு செய்துள்ள பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையில் அடிக்கடி சண்டை நடப்பது வழமை என்று தெரிவிக்கப்படுகிறது. தனது மனைவி உளநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் மனக்குழப்பங்களுக்காக அவர் தெல்லிப்பழை வைத்தியசாலை கிளினிக்கில் சிகிச்சை பெறுகின்றார் என்றும் பொலீஸ் விசாரணையின்போது கணவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதிமுதல் மேற்படி பெண்ணை அவரது கணவர் கதிரையுடன் சேர்த்துக் கட்டிவைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. உணவுகூடக் கொடுக்காது 12நாள்கள் அவர் அப்படியே அடைத்து வைக்கப்பட்டிருந்தார் என்று பொலீஸ் விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அங்கிருந்து தப்பிய அந்தப் பெண் தெல்லிப்பழைப் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். அவரை மனநோயாளி என்று கருதிய பொலீஸார் அவரது முறைப்பாட்டை ஏற்பதற்கு மறுத்துள்ளனர் என்று கூறப்பட்டது.

இதனால் அந்தப் பெண் தனது நிலை தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்திலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறையிட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். பொலீஸ் நிலையத் தலைமையகத் தகவலின் பின்னரே தெல்லிப்பழைப் பொலீஸார் முறைப்பாடு தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளனர். பெண்ணின் கணவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்செய்துள்ளனர்.

அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம-150)

# தேசியத் தலைவரின் பணிப்பிற்கமையவே குடாநாட்டில் எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரம்

## அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ. குடாநாட்டு மக்கள் மத்தியில் 'எய்ட்ஸ்' நோய் தொடர்பான உடனடி விழிப்புணர்வை மேற்கொள்ள வேண்டுமென எமது தேசியத் தலைவர் பணித்ததிற்கமையவே தற்போது குடாநாட்டில் எயிட்ஸ் விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

- இவ்வாறு நேற்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் குடாநாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமான எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரம் தொடர்பாக விளக்குவதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அருண் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சோ.தங்கன் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

யாழ். குடாநாட்டுக்கு இப்போது எல்லா நாடுகளிலிருந்தும் மக்கள் வந்துசெல்லக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது. அத்துடன், குடாநாட்டில் சிலர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் இந்நோயில் இருந்து எமது மக்களைக் காக்கவேண்டிய தார்மீகக் கடமை எமக்குள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு குடாநாட்டை ஐந்து கோட்டங்களாகப் பிரித்து எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோட்டங்களிலும் 250இற்கு மேற்பட்டோர் இப்பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். புலிகளின் மருத்துவப் போராளிகள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலதரப்பினரும் இப்பிரசாரக் குழுவில் அடங்குகின்றனர். எய்ட்ஸ் நோய்பரவுவதற்கான சந்தர்ப்பங்கள், அதன்தாக்கம், அறிகுறி, தடுப்பதற்கான வழிமுறைகள் என்பன தொடர்பாகப் பிரசாரக் குழுவினர் மக்களுக்கு விளக்கமளிப்பார்கள்.

இதனைவிட, எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் சுவரொட்டிகள், ஸ்ரிக்கர்கள் என்பன குடாநாட்டின் முக்கிய இடங்களிலும் பொதுமக்கள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களிலும் ஒட்டப்படவுள்ளன - என்றார். (ம-8)

# தமிழக பேரூர் ஆதீன முதல்வர் அடுத்த வாரம் யாழ். வருகின்றார்

யாழ்ப்பாணம்,டிசெ.25

தமிழ் நாடு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளார் ஆத்மீகப் பயணம் மேற்கொண்டு எதிர் வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

இந்துகலாசார அமைச்சரின் அழைப்பையேற்று யாழ். வரும் அடிகளார் 4 தினங்கள் குடாநாட்டில் தங்கியிருந்து சமய நிகழ்வுகளிலும், வழிபாடுகளிலும் கலந்துகொள்வார்.

2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 11 மணிக்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் திருவிழாவிலும் பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி அம்பாள் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள சைவக்குருமார் அர்ச்சகர் சபையின் வரவேற்பு நிகழ்விலும் கலந்துகொள்வதோடு அருளுரையும் வழங்குவார்.

மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு கொழும்புத்துறை பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் அடிகளார் அங்கிருந்து யோகர் சுவாமிகள் சமாதிக்குச் சென்று வழிபாடு செய்வார். அன்றையதினம் பிற்பகல் 4 மணிக்கு சைவ பரிபாலனசபையினால் நீராவியடி நாவலர் மண்டபத்தில் நடத்தப்படும் வரவேற்பு நிகழ்வில் கலந்துகொள்வார்.

மிகச்சிறந்த சைவப் பேரறிஞரும் அனுபூதி செல்வருமாகிய தவத்திரு இராமசாமி அடிகளாரின் ஆசீர்வாதத்தையும் அருளுரையையும் பெறவிரும்பும் ஆலயங்களும் சமய நிறுவனங்களும் யாழ். செயலகத்தில் இயங்கும் இந்து சமய விவகார அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் கேட்டுள்ளார்.

இதேவேளை, தருமபுரம் ஆதீன குருமுதல்வர் டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் ஒரு வார கால பயணம் மேற்கொண்டு எதிர்வரும் 2 ஆம் திகதி யாழ். வருகை தரவுள்ளார். (ம-5-ரி)

## நாளை

மார்கழி 11
வெள்ளிக்கிழமை
(26.12.2003)
திதி : திருதியை
மு.ப. 10.22 வரை
நட்சத்திரம்: திருவோணம்
முன்னிரவு 11.18 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 6.27 - 7.57
ராகுகாலம்: 10.57 - 12.27
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

வருவதைக் கண்டு மயங்காதே. போவதைக் கண்டு கலங்காதே.

## வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்திற்கான

# முஸ்லிம் காங்கிரஸ் அரசமைப்புக் குழுவின் ஆலோசனைகள் இம்மாத இறுதிக்குள்!

கொழும்பு,டிசெ.25

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான முஸ்லிம் காங்கிரஸின் ஆலோசனைகள் இம்மாத இறுதிக்குள் அரசிடமும் புலிகளிடமும் கையளிக்கப்படும். முஸ்லிம் காங்கிரஸின் அரசமைப்பு விவகாரக் குழு இந்த ஆலோசனைகளைத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் அரசமைப்பு விவகாரக்குழு கடந்த சில வாரங்களுக்கு முன் பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சென்று சிறுபான்மையினருக்கு அந்நாடுகளில் வழங்கப்பட்டுள்ள தன்னாட்சி அலகுகள், அதிகாரங்கள் ஆகியவை குறித்து ஆராய்ந்தது தெரிந்ததே.

கடந்த 22ஆம் திகதி முதல் இக்குழு ஆலோசனைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. 27 ஆம் திகதி ஆலோசனைகள் இறுதிவடிவம்பெறுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.



# ஆண் பிள்ளைதான் வேணும்

ரயில்பாதை நடுவே உழவு இயந்திரம் திடீரென நின்றுவிட்டது. விருவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அவரும் மீனாவும் உழவு இயந்திரத்தைத் தள்ள முயலுகின்றார்கள். முடியவில்லை. ரயில் வரும் சத்தம் கேட்க ஆரம்பித்துவிட்டது. அவர்கள் பதறிப் போகிறார்கள். ரயில் வருவதற்கு முன்பு உழவு இயந்திரத்தைப் பாதையில் இருந்து தள்ளமுடியுமா என்று பார்க்கிறார்கள்.

மீனாவுக்கு சடுதியாக ஒரு யோசனை தோன்றுகின்றது. அவளின் மைத்துனன் ரகு சொல்லிக் கொடுத்த யோசனை அது. அவள் மாமாவை என்ஜினை இயக்குமாறு கூறுகிறாள். ஓடிப்போய் காபரேட்டரின் கவிட்டைப் போடுகிறாள். சில முயற்சிகளின் பின்பு என்ஜின் இயங்க ஆரம்பிக்கிறது. விரு உழவு இயந்திரத்தை ரயில்பாதையில் இருந்து வெளியே எடுக்கிறார்.

தன் மருமகளின் கெட்டித்தனத்தைக் கண்டு விருவுக்கு ஒரே வியப்பு. பெண் பிள்ளைகளாலும் வேலைகளைச் செய்ய முடியும் என்று எண்ணுகிறார். ஆண் பிள்ளைகளிலும் பார்க்க பெண் பிள்ளைகள் குறைவானவர்கள் என்ற தன் எண்ணத்தை அவர் மாற்றிக் கொள்கிறார்.

ரவியைக் கூட்டிக்கொண்டு அவர்கள் வீடு திரும்பிய போது அங்கே அழகுக் குட்டிப் பாப்பா பெண் பிள்ளை பிறந்ததைக் கொண்டாடுகிறார்கள். விரு ஓடிப்போய் தன் பேரப் பிள்ளையைக் கைகளில் பெருமையுடன் வாங்குகிறார். அதைக் கண்டதும் மீனாவுக்கு ஒரே குதூகலம்.



அனுசரணை:

unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(வி-32223)

# உடல் ஆரோக்கியம் சிறக்க முன்னோரின் சிகிச்சைமுறை

உடலுறுதியானால் உயிர் உறுதியாகும் இவ்வுடல் ஐம்பூத மாளிகை. நடமாடும் கோயில், உடல் செழிக்க உயிர் செழிக்கும்.

எண்சாண் உடம்புக்குத் தலையே தலைமையாகும். தலையில் மண்டை, முகம் என்று இரு பிரிவுகள் உள்ளன. மண்டையில் மூளை உள்ளது. அது மெல்லிய வஸ்து, அறிவு, உறுதி, நினைவு, பொறி, புலன், உணர்வு, இன்ப - துன்பம், விருப்பு - வெறுப்பு எல்லாம் மூளையில் பிறக்கும். மூளையும், முள்ளந்தண்டும் உடலை ஆட்சி செய்கின்றன.


தலை முழுவதுக்குமாக கட்டை விரலில் விசை (Switch) உள்ளது. வலது பாகத்துக்கு வலது கட்டை விரலிலும், இடது பாகத்துக்கு இடது கட்டை விரலிலும் விசைகள் உள்ளன. மூளை மிகவும் சிக்கலானதும், சிறந்ததுமான ஒரு கணனி போன்றது.

மூளையில் மூன்று பகுதிகள். அவை முன் மூளை (Cerebrum), பின மூளை (Cerebellum), நடுமுடிச்சு (Medulla Oblongata) இவையே மனததின் மாளிகை; அறிவின் இருக்கை. முன் மூளையின் உதவியினால் மனிதனின் உணர்வு, ஞாபகசக்தி, மனத் திட்பம் (Will Power), திறனாய்வு (Reasoning) ஆகிய நலன்களை அடைகிறோம்.

தசைச் சுருக்கம், சுரப்பிகளின் சுரப்பு, இதயத்தின் பணி, வளர்சிதை மாற்றம் போன்றவை கட்டுப்படுத்தப் படுகின்றன. நரம்பு மண்டலத்தின் மூளை, தண்டுவடம், நரம்புகள் போன றவை அடங்கியதனால் மூளையின் பங்கு மிகவும் முக்கியமானது; தலைமையானது. எனவே, எல்லா நோய்களின் சிகிச்சைக்கும் கட்டை விரலின் வேறுவேறு பகுதிகளைத் தேய்த்து விட்டுக்கொள்வது மிகவும் அவசியம்.

ஒரு சிறு அளவு அணுகுண்டுகள் (Mini atom Bombs) என்று கூறலாம். நம்ப முடியாத அளவுக்கு அவை மிகவும் சக்தி வாய்ந்தவை. உடலின் மற்றெல்லா நாளமில்லாச் சுரப்பிகளையும் கண்காணிககும் பொறுப்பைக் கொண்ட பிட்யூடரி சுரப்பி, ஒரு பெரிய பட்டாணிக் கடலை அளவுள்ளது. இதனுடன் 50ஆயிரம் நரம்பு நார்கள் தொடர்புகொண்டிருக்கின்றன. இதில் சுரக்கும் ஹார்மோன் உடலின் ஏனைய பாகங்களுக்கும் செல்கிறது. இது தைராய்டை இயக்கிவிடுகிறது. அட்ரினல், கணையம், பாலினச் சுரப்பிகள்

### உள்ளங்கையில் உள்ள பகுதிகளும் அவற்றுடன் தொடர்புடைய உடற் செயற்பாடுகளும்




1. இரத்த சுத்தி மையம்
2. ஜீரண மண்டலம் - 1
3. ஜீரண மண்டலம் - 2
4. இரத்த அழுத்தக் " கட்டுப்பாடு
5. மூச்சு மண்டலம்
6. வளர்ச்சி
7. இடுப்புக்குக் கீழே
8. இடுப்புக்கு மேலே
9. இதயம் - நுரையீரல்
10. ஜனன இந்திரியங்கள்
11. ஞாபக சக்தி, கழுத்து, முதுகெலும்பு
12. மூளை
13. கண்கள்
14. காதுகள்
15. மூக்கு, பீனிசப் பகுதிகள்

ஆகியவற்றையும் இயக்கிவிடுகிறது. உடலில் உள்ள உப்புச் சத்தின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. (Governs Salt Balance), இன்னொரு இரசாயனம் சிறுநீரகத்தை கட்டுப்படுத்தி அதன் இயக்கத்தையும், அதில் பிரியும் சிறு நீரின் அளவையும் தரத்தையும் வேகத்தையும் கட்டுப்படுத்துகிறது. இந்தக் கட்டுப்பாடு இல்லையெனில் சிறுநீரகம் தினந்தோறும் 3கலன் சிறுநீரைப் பிரித்து விடும். மிகவும் பூதாகாரமாக வளர்ச்சி அடைபவர்களுக்கும், மிகவும் குள்ளமாக இருப்பவர்களுக்கும் இந்த ஹார்மோனின் அதிகமான - குறைந்த சுரப்பு விகிதமே காரணம். தலையின் உள்ளே உள்ள பிட்யூடரி, பினியல் ஆகிய நாளமில்லாச் சுரப்பிகளின் விசை கைகளின் கட்டை விரலில் உள்ளது. நாம் விஞ்ஞான பூர்வமாக எப்படி அழைத்தாலும் இந்த விசை உள்ள இடத்தை, விட்டு விட்டு அழுத்துவது நல்வாழ்வு வாழ வழி வகுக்கும். இந்த விசை உள்ள இடத்தைச் சரியாகக் குறிப்பிட வேண்டுமென்றால் யோக சாஸ்திர விளக்கங்களின்படி எந்த இடத்தில் ஜபம், தவம் ஆகியவற்றின் போது துளசி - சந்தணமணி, ருத்ராஷம் முதலிய மாலைகளினால் நாம் விரல்களில் உருட்டுவோமோ அந்த இடம்தான் கட்டை விரல் நகத்தில் நேர் எதிர்ப்புறம் உள்ள சதைப்பகுதியான இடம். மெய்ஞ்ஞானிகள் இந்தச் சிகிச்சை முறையை - மருத்துவ இயலை விளக்காமல் சம்பிரதாயச் சடங்காக அமைத்து விட்டனர். சம்பிரதாயமாக அமைத்த காரணத்தால் தானோ என்னவோ, இது தொடருகிறது.




கரடு முரடான செயலானாலும், மென்மையான செயலானாலும் கை தன் கைவண்ணத்தைக் காட்டுகிறது.

மூக்குச் சுரப்பி (Pituitary and Pineal Gland), மூளைச்சுரப்பி ஆகிய இரண்டும் தலையினுள் உள்ளன. பிட்யூடரி மூக்கெலும்பை ஒட்டியும், பினியல் சுரப்பி மூளையின் பின்புறமும் உள்ளன. நாளமில்லாச் சுரப்பிகளை

ஒரு கொள்கையின் படி உடலில ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் உடம்பில் சுரக்கும் இரசாயனப் பொருள்களின் அளவில் உள்ள வேறுபாடே காரணமாகும். இந்த நாளமில்லாச் சுரப்பிகள் எல்லாவற்றையும் கண்காணிககும் பிட்யூடரி சுரப்பியின் நல்லியக்கம் ஏற்பட உதவுவது. இந்தப் பகுதி அநேகமாக, தலை சம்பந்தமான எல்லா நோய்களுக்கும், நாள்பட்ட நோய்களுக்கும், மன, உடல் சம்பந்தமான நோய்களுக்கும் (Phychosomatic Disease) நோயின் காரணங்களைப் பரிசோதனை மூலம் கூடக் கண்டு கொள்ள முடியாத நிலையிலும் ஜப மாலைகளை உருட்டுவது நல்ல பலன் தரும்.

#### சிகிச்சை முறை

ஒரு குறிப்பிட்ட நோய்க்குப் பல விசைகளையோ ஒரு விசையையோ விட்டு விட்டு அழுத்துகிறோம். ஒரு குறிப்பிட்ட நோய் நீக்கும் முறையாக இதை உபயோகிக்குமுன்பு இந்த மருத்துவ முறை சில தினங்களாவது பயிற்சி செய்து (6 முதல் 15 தினங்கள்) வருவதால் கைகளுக்கும மூளைக்கும் இடையே உள்ள தொடர்புகள் புதுப்பிக்கப்பட்டுவிடும். அழுத்தத்தைப் பயன்படுத்தும் போது கைப் பகுதியில் வலி ஏற்படும் அளவுக்கு மிக அதிக அழுத்தமோ எந்த விதமாக மாறுதல்களும் ஏற்படாத அளவு மிகவும் குறைந்த அழுத்தமோ உபயோகிக்காமல் சரியான அளவில் அழுத்தத்தை உபயோகிக்க வேண்டும். சொடக்குப் போடும் பொழுது விரல்களுக்கிடையே ஏற்படுத்தும் அழுத்தம் சரியான அழுத்தம் ஆகும்.

இந்த சிகிச்சை முறையைப் பயன்படுத்தி நமது முன்னோர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஆனால், இந்தக் கணனி யுகத்தில் மருந்து, மாத்திரைகளுக்கு அடிமையாகி விட்ட நாம், முன்னோர்கள் பின்பற்றிய வாழ்க்கை நெறிகளை மீண்டும் பின்பற்றினால் சுகவாழ்வு கிட்டும்.

(நன்றி: மஞ்சரி)

## சாயி சிந்தனை

### காயத்ரி மந்திரம்



காயத்ரி மந்திரம் மூன்று பாகங்களைக் கொண்டது. ஒன்று இறைவனைப் புகழ்கிறது. இரண்டாவது இறைவனிடம் பிரார்த்தனை. மூன்றாவது தியானம். காயத்ரி மந்திரத்தின் முதல் ஒன்பது வார்த்தைகள் (ஓம், பூர், புவஹ, ஸ்வஹ, தத், ஸவிதுர், வரேண்யம்,பர்கோ, தேவஸ்ய)இவை காயத்ரி தேவியை புகழ்ந்து வர்ணிக்கின்றன. தீமஹி என்ற வார்தை தியானத்தைச் சேர்ந்தது.

'தியோ யோனஹ் ப்ரசோத யாத்' என்ற வார்த்தைகள் இறைவனிடம் ஸ்திரமான தூய்மையான புத்திசாலித் தனத்தைத் தருமாறு பிரார்த்தனை செய்கின்றன.

முதலில் தெய்வம் மேன்மையாகப் புகழப்பட்டு, பிறகு தெய்வத்தின் சிந்தனையில் ஆழ்ந்து, தியானித்து, பின்னர் தனது புத்தியை தட்டி எழுப்பி பலப்படுத்துமாறு இறைவனை இறைஞ்சுகின்றது காயத்ரி மந்திரம். ஆகவே, முதலில் நீ கடவுளைப் புகழ்ந்து போற்றவேண்டும். ஆனால் எப்படி இறைவனிடம் நெருக்கமான உணர்வுகளோடு அவரைப் போற்ற வேண்டும். உதாரணமாக, ஒரு புதிய உடை வேண்டுமென்றால் மகன் தன் தந்தையை அளவுக்கு மீறிப் புகழ்வதில்லை. அதற்குப் பதில் உரிமையோடு கேட்கிறான். அதைப்போலவே பக்தனுக்கும் இறைவனிடம் கேட்பதற்கு முழு உரிமை இருக்கிறது. ஹ்ருதயம் என்பது ஆத்மாவின் மகன். ஹ்ருதயத்திலிருந்து பிறந்தது மனம். ஆகவே, மனம் என்பது ஆத்மாவின் பேரன். மனதிலிருந்து வார்த்தைகள் பிறக்கின்றன. ஆகவே, வாக்கு என்பது ஆத்மாவின் கொள்ளுப் பேரன். சுருக்கமாகச் சொல்வதானால் ஹ்ருதயம் மனம், வாக்கு, இம் மூன்றும் தெய்வீகக் குடும்பத்தைச் சேர்ந்தவை மட்டுமல்ல, அவற்றிற்கு தெய்வீகச் சொத்தில் பங்கு உண்டு.

(ஆதாரம்- சனாதன சாரதி-நவம்பர் 1998)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்.
அனைவருக்கும் எம்மினிய
கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்



✳உங்கள் கண்களைப் பரிசோதித்து, கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள
✳அழகிய சாங்குப் பற்களை அழகாகக் கட்டிக்கொள்ள
✳மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ள

யாழ்.நகரில் மிகக் கவர்ச்சிகரமான காட்சியறையுடன்

SOLAX OPTICAL
சொலக்ஸ் ஒப்ரிக்கல்

516, ஆஸ்பத்திரி வீதி (O.P.D. முன்பாக),
யாழ்ப்பாணம்.
T.P.0777286029.
(C/32234) (26-21-14)

நெஞ்சு பொறுக்குதில்லையே 5ஆம் ஆண்டில்



பொன்னுத்துரை செல்வலட்சுமி
தோற்றம்: 04.08.1931
மறைவு: 02.01.1998
திதி: 25.12.2003

அம்மா எங்கள் பாசம் மறந்தீர்களே?
தேடி வழி பார்க்க நீங்களில்லையே
அம்மா!

மருத்தித்துறை வீதி
கொடிகாமம்.

உங்கள் நினைவில் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

UTHAYAN Graphics
(26245)

பண்டிகை கால விசேட சலுகை

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.

ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=

அத்துடன் இலவசமாக E.mail மூலம் உங்கள் உறவுகளுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கலாம்

25.12.2003 தொடக்கம் 01.01.2004 வரை மட்டுமே

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்
T.P: 021 222 2670 Fax:021 222 3214, E.Mail: del smskr@eureka lk

2ஆம் ஆண்டு நினைவு

மலர்வு
03
-
07
-
1951



மறைவு
15
-
12
-
2001

அமரர் சின்னத்தம்பி கந்தையா

ஆண்டுகள் இரண்டு சென்றதப்பா
ஆறவில்லை எம்துயரம்!
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம்துயரம்!

மீசாலை வடக்கு.
கொடிகாமம்.
(26257) (26-21-14)
- குடும்பத்தினர்.

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1942
-
05
-
27



மறைவு
2000
-
12
-
25

திருமதி
தியாகராஜா நாகேஸ்வரி

அம்மா உன் நினைவுகள்
ஒவ்வொன்றும் சிதறடிக்க முடியாத துளிகள்
அம்மா உன் பாசம் அழிக்க முடியாத - காவியம்
உன் நினைவால் நாம் வாடுவதை
இவ்வுலகில் யாரறிவார்?

உன்பிரிவால் துயருறும்:
மானிப்பாய். (26246)(26-14-21) கணவர், பிள்ளைகள்.

# சீ. (....!) ஐ.டி. விசாரணை!!

"காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்கு வருமாறு அவர்களது உறவினர்களுக்கு சி.ஐ.டியினர் அழைப்பு"

கடந்த இரண்டரை வருடங்களாக குடாநாட்டுப் பத்திரிகைகளில் அடிக்கடி வெளியாகும் செய்திதான் இது.

காணாமற்போனோருடைய உறவினர்கள் ஆரம்பத்தில் இத்தகைய செய்திகளைக் கண்டதும் முண்டியடித்துக்கொண்டு யாழ்பொலீஸ் நிலையத்துக்குச் சென்று விசாரணைக்கு முகம்கொடுத்தார்கள். ஆனால், இப்போதெல்லாம் ஏனோ தானோ என்று அந்த விசாரணைக்குச் செல்வதை தவிர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

முதலாவது குழுவினரின் சி.ஐ.டி விசாரணைகள் 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி யாழ். பொலீஸ் நிலையத்தில் ஆரம்பமாகின.

இதுவரை 13 குழுவினர் இந்த விசாரணைக்கென கொழும்பிலிருந்து இங்கு வந்து திரும்பியிருக்கின்றனர். 14ஆவது குழுவும் விரைவில் வரவிருக்கின்றது என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆரம்பத்தில், மாதத்தில் இரு குழுக்கள் என்ற ரீதியிலும் பின்னர் சுமார் ஒன்றரை மாதத்துக்கு ஒரு குழு என்ற ரீதியிலும் சீ.ஐ.டியினரின் வரவு அமைந்திருந்தது.

ஒவ்வொரு குழுவினரும் காணாமற்போனோரது உறவினர்களை யாழ். பொலீஸ் நிலையத்துக்கு அழைத்து (பத்திரிகைகள் மூலம்) விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பலரது உறவினர்கள் 5,6 குழுவினரால் மீண்டும் மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றனர்.

அதுசரி, இத்தனை குழுவினரும் அங்கிருந்து இங்குவந்து காணாமற்போனோரது உறவினர்களிடம் திரும்பத்திரும்ப - துருவித்துருவி அப்படி என்னதான் விசாரிக்கின்றார்கள் என்பதை அறியவேண்டும் என்று ஆவல் கொண்டு அண்மையில் யாழ்.பொலீஸ் நிலையத்துக்குச் சென்றிருந்தேன். விசாரணைகள் அமளிதுமளியாக நடந்துகொண்டிருந்தன. பார்த்துக்கொண்டிருந்தேன். விசாரணையின்போது அனைவரிடமும் கேட்கப்பட்ட பிரதான கேள்விகள் இவைதான்...

எங்கு காணாமற்போனார்...?, எப்பொழுது?, யாரால்? பிடித்துச் செல்லப்பட்டார்?, இறுதியாக என்ன நிற ஆடை அணிந்திருந்தார்?.

இந்தக் கேள்விகளைத் தொடர்ந்து சிலரிடம் கேட்கப்பட்ட வேறு சில கேள்விகள் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தந்தன.

"...நல்ல பனங்குட்டான் எங்கு கிடைக்கும், பனங்கள்ளு, புளுக்கொடியல் என்பன கிடைக்குமா...? எங்கே கிடைக்கும்? (உங்கட ஊரில் இருந்தா அடுத்தமுறை விசாரணைக்கு, வரேக்க கொண்டுவாங்கோ காசு தருவம்..). யாழ்ப்பாணத்தில் சுற்றுலா செய்வதற்கு உகந்த இடங்கள் என்னென்ன..?

விசாரணை என்ற பெயரில் அழைத்து இப்படியான கேள்விகளைக் கேட்டது காணாமற்போனோரின் உறவினர்களுக்கு கடும் எரிச்சலையும் விசனத்தையும் கொடுத்திருந்ததை அவர்களின் முகத்தைப் பார்த்தபோது உணரமுடிந்தது.

தனது மகனை 'தொலைத்துவிட்டு' விசாரணைக்கு வந்திருந்த நாவற்குழியைச் சேர்ந்த வயோதிபத் தந்தை ஒருவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார் "தம்பி உங்கள் விசாரணை எண்ட பேரில எங்களைப் பேக்காட்டுறாங்கள் உதுகளைப்பற்றி ஏன் நீங்கள் பேப்பரில போடுறதில்லை"

"ஏன் ஐயா அப்பிடிச் சொல்கிறீர்கள்..." கேட்டேன்.

"பின்னை என்ன தம்பி. ஒவ்வொரு தடவையும் உவங்கள் இஞ்ச வரேக்க எங்களை விசாரணைக்கு கூப்பிடுவாங்கள் நாங்களும் பெரிய எதிர்பார்ப்போட இஞ்சவருவம். ஆனால், ஒவ்வொரு தடவையும் ஒரே கேள்வியளைத்தான் திரும்பத் திரும்பக் கேட்கிறாங்கள்.

இப்ப இரண்டரை வருஷமா உந்தக் கேள்விகளுக்கு பதில்சொல்லி அலுத்துப்போச்சு...

"எங்கட பிள்ளையளைப் பிடிச்சுக் கொண்டு போன 'அந்த' துலைவாரைக் கூப்பிட்டு விசாரிக்காமல் திரும்பத் திரும்ப எங்களைக் கூப்பிட்டு விசாரிச்சு என்ன பலன்...?

ஆவேசத்துடன்கூடிய அவரது ஆதங்கத்தில் நியாயம் இருக்கத்தான் செய்தது. அங்கிருந்த சீ.ஐ.டி. அதிகாரியான எச்.எம்.கமகே என்பவரிடம் என்னை அறிமுகப்படுத்தி விட்டுக் கேட்டேன்.

இவ்வளவு காலமும் காணாமற்போனோரது உறவினர்களிடம் திரும்பத் திரும்ப விசாரிக்கின்றீர்களே. இதுவரை அவர்கள் கொடுத்த வாக்குமூலங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட படையினர் எவரையாவது கைதுசெய்தீர்களா? அல்லது விசாரணைதானும் மேற்கொண்டீர்களா?

அதற்கு அவர் கூறியதாவது:-

படைத்தரப்பிடம் விசாரணை செய்யுமாறு, இதுவரை எமக்குப் புலனாய்வுத்துறைத் தலைமையகத்தினால் பணிப்புரைகள் எவையும் விடுக்கப்படவில்லை. அவ்வாறு மேலிடத்து உத்தரவு இல்லாமல் நாங்கள் எவரையும் விசாரிக்கமுடியாது.

அப்படியானால் இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் காணாமற்போனவர்களின் உறவினர்களிடம் விசாரித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு "அதைப்பற்றி நீங்கள் எமது தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டுதான் கேட்கவேண்டும்" என்று கூறிவிட்டு 'நைஸாக' நழுவி விட்டார்.

இந்த இடத்தில் இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். கடந்த வருட நடுப்பகுதியில் ஏழாவதாக இங்கு வந்த சீஐடி. குழுவின் பொறுப்பதிகாரியான 'புத்ததாஸ அத்தப்பத்து' என்பவர் அப்போது பத்திரிகையாளர்களிடம் சில தகவல்களை வெளியிட்டிருந்தார்.

காணாமற்போனோர் தொடர்பான சீஐடியினரின் விசாரணைகள் இத்துடன் முடிவடைகின்றன. இந்த விசாரணைகளை மேற்கொள்ளும் இறுதிக் குழுவினர் நாங்கள்தான் இவ்விசாரணைகளின் இறுதி அறிக்கைகள் இவ்வருட இறுதிக்குள் (2002) பொலீஸ்மா அதிபர், சீ.ஐ.டி. தலைமைப்பீடம், ஜனாதிபதி ஆகிய தரப்பினருக்கு சமர்ப்பிக்கப்பட்டுவிடும்.

அதன்பின்னர் அந்த அறிக்கையின் அடிப்படையில், பொலீஸ் தலைமையகத்தின் விசேட உத்தரவுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட படை அதிகாரிகள், சிப்பாய்கள் பலர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்படலாம்.

இவையே அந்த அதிகாரி பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்த கருத்துக்கள்.

ஆனால் இன்றுவரை விசாரணைகள் முடிந்தபாடும் இல்லை. அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுமில்லை மேல் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவுமில்லை. இப்பொழுதும் விசாரணைகள் தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றன.

தனது மூன்று பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு விசாரணைக்கு வந்திருந்தார் இளம்தாய் ஒருவர்.

கண்கள் கலங்கிய நிலையில் விசாரணை முடித்துத் திரும்பிக் கொண்டிருந்த அந்தத் தாயிடம் பேச்சுக் கொடுத்தேன். கூறத் தொடங்கினார் தனது சோகக் கதையை.

"எங்கட இடம் நெல்லியடி. இவர் கூலி வேலைக்குப் போய்த்தான் எங்கட குடும்பத்தைப் பாத்துக் கொண்டிருந்தவர். 97ஆம் ஆண்டு ஆவணிமாதம் 8ஆம் திகதி மத்தியானம் 2 மணியிருக்கும்....

வேலையால வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர். அப்ப திடீரெண்டு எங்கட வீட்டு வேலியை வெட்டிக் கொண்டு உள்ளுக்கு சில ஆமிக்காரர் வந்தாங்கள்.

இவரை விசாரிக்கவெண்டு கூட்டிக் கொண்டுபோனாங்கள்.

சாப்பிட்ட சாப்பாட்டையும் இடையில் விட்டுட்டு அவங்களோட போனவர் தான் பிறகு திரும்பிவரவேயில்லை... சொல்லி முடித்தபோது அந்தத் தாயின் கண்களிலிருந்து மீண்டும் கண்ணீர்....

தொடர்கிறார்...

எங்களுக்கு நாலுபிள்ளைகள். மூத்த பிள்ளைக்கு 13வயது. கடைசிப் பிள்ளைக்கு 6 வயது. இப்ப பிள்ளையள் அப்பா எங்கையெண்டு அடிக்கடி என்னட்டைக் கேக்குதுகள். நான் என்னத்தைச் சொல்லுறது. அவர் உயிரோடை இருக்கிறாரோ.. இல்லையோ....

'இப்ப உங்கட குடும்பச்செலவுகளுக்கு என்ன செய்யிறீங்கள்..'? நான் கேட்டேன். அதற்கு அந்தத் தாய் கூறிய பதில் இதயத்தில் அம்பாகக் குத்தி நின்றது.

"நான் கூலி வேலைக்குப் போய்த்தான் பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடுறன். அதுகளுக்கு ஒழுங்கான சாப்பாடு கூட இல்லை. இவர் முந்தி அடிக்கடி சொல்லுவர் நாங்கள் எவ்வளவுதான் கஸ்ரப்பட்டாலும் பிள்ளைகளை வடிவாப் படிப்பிச்சு நல்ல நிலைக்கு கொணர்ந்திடவேணும் எண்டு.

இப்ப அவரும் இல்லை. அதுகளை படிப்பிக்க என்னட்டை வசதியும் இல்லை. அதால மூத்த பிள்ளைகள் இரண்டையும் பள்ளிக்கூடத்தால நிப்பாட்டிப் போட்டன்.. கூறி முடித்து விட்டு விம்மி விம்மி அழுகின்றார்.

**....இவர் முன்பு அடிக்கடி சொல்லுவார் நாங்கள் கஸ்ரப்பட்டாலும் பிள்ளைகளை நல்லபடியா படிப்பிச்சு நல்ல நிலைக்கு கொண்டுவந்திட வேணும் எண்டு. இப்ப அவர் காணாமற்போனதுக்குப் பிறகு பிள்ளைகளைப் படிப்பிக்க என்னிடம் வசதி இல்லை. அதால மூத்த பிள்ளைகள் இருவரையும் பள்ளிக்கூடத்தால நிறுத்திப் போட்டன்......**

விசாரணை மேற்கொண்டு வரும் சீ.ஐ.டியினர் காணாமற்போனோரது பெயர் விவரப் பட்டியல் ஒன்றினை வைத்திருக்கின்றார்கள். அதனை எங்கிருந்து பெற்றார்களோ தெரியவில்லை. சிங்களத்திலும், தமிழிலுமாக அதிலே விவரங்கள் பதியப்பட்டிருந்தன. அவர்களால் தமிழில் எழுதப்பட்டிருந்த பெயர் விவரப் பட்டியலில் தமிழ் "கழுத்து நெரிக்கப்பட்டு" கொலைசெய்யப்பட்டிருந்தது. அதிலுள்ள தமிழ்க் கொலையிலிருந்து சில உதாரணங்கள்.

விசவலங்கம்- சத்திரன் (விசுவலிங்கம் - சந்திரன்), அன்ரன ஜட்கட் சன் (அன்ரனி ஜாட்நிக்ஷன்), மரமுத்தி - மரியதாஸ் (மரிமுத்து மரியதாஸன்), மனிபய் விதி சங்குவலி (மானிப்பாய் வீதி, சங்குவேலி).

இது ஒருபுறம் இருக்க....

உறவினர்களிடம் இருந்து வாக்குமூலங்களைப்பெற்று சிங்களத்தில் மொழிபெயர்த்துக் கூறுவதற்கு தமிழ் மொழி தெரிந்த சில பொலீஸார் கடமையில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இருப்பினும் அந்த வாக்குமூலங்கள் யாவும் தனிச் சிங்கள மொழியிலேயே பதியப்படுகின்றன. அவ்வாறு பதியப்பட்ட பின்னர் வாக்குமூலம் கொடுத்தவர் அதில் கையெழுத்திட வேண்டும் (அதில் என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பது கடவுளுக்கே வெளிச்சம்)

தனது ஒரேயொரு மகனைப் பறிகொடுத்துவிட்டு, விசாரணைக்கு அங்கு வந்திருந்த தாய் ஒருவர் தன் சோகத்தை என்னிடம் கொட்டினார்.

ஒரு நாள் இரவு 12.30 மணியிருக்கும் நாசமாப் போவார் வந்து கதவைத் தட்டினாங்கள். என்ர பிள்ளையை விசாரிக்கவெண்டு சொல்லிக் கூட்டிக் கொண்டு போக வெளிக்கிட்டாங்கள். நானும் இவரும் அதுக்கு சம்மதிக்கேல்ல எங்களுக்கு அடிச்சு மண்டையை உடைச்சுப் போட்டு பிள்ளையைக் குளறக் குளற இழுத்துக் கொண்டு போட்டாங்கள்.

அடுத்த நாள் 'காம்ப்புக்குப் போய்க் கேட்டேன். தாங்கள் பிடிக்கேல்லை எண்டு வாய் கூசாமல் சொல்லிப் போட்டாங்கள். இண்டுவரைக்கும் எத்தனையோ படி ஏறி இறங்கியிருப்பன். ஒரு பிரயோசனமும் இல்லை.

பிள்ளை காணாமற்போய் நாலைஞ்சு மாதத்தால இவரும் மோசம் போட்டார். என்ர பிள்ளை என்னைக்கோ ஒரு நாளைக்குத் திரும்பி என்னட்டை வந்துசேரும் எண்ட நம்பிக்கையில இந்த உசிரைக் கொண்டிழுக்கிறன்...' என்று கண்ணீர் மல்க கூறிமுடித்தார்.

இவர்களைப் போல இன்னும் எத்தனை.. எத்தனை தாய்மார்கள். தந்தையர்கள், சகோதரிகள்... தமது உறவுகள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்ன ஆனார்கள்? என்ற விடைகாண முடியாத வினாக்களை நெஞ்சிலே சுமந்துகொண்டு தினம், தினம் வெந்துகொண்டிருக்கின்றார்கள். திரும்பத் திரும்ப சீ.ஐ.டியினரின் விசாரணைகளுக்கு முகம் கொடுத்த மக்கள் இப்பொழுது கடும் விசனம் அடைந்திருக்கின்றார்கள். இந்த விசாரணைகளுக்கு சமுகம் அளிப்பதை பெரும்பாலானோர் தவிர்த்துவருகின்றார்கள்.

**அற்புதன்**

ஆனால், சீ.ஐ.டியினரோ அவர்களை விடுவதாக இல்லை. இப்பொழுது காணாமற்போனோர் சிலரின் வீடுகளுக்குத் தேடித்தேடிச் சென்று விசாரிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

காணாமற்போனோர் விவகாரத்தில் சீ.ஐ.டியினருக்கு இவ்வளவு கரிசனையோ என்று ஆச்சரியப்பட்டு விசாரித்தபோதுதான் மற்றொரு தகவலும் தெரியவந்தது.

அதாவது, ஒவ்வொரு சீ.ஐ.டி. குழுவினரும் தமக்கு வழங்கப்பட்ட எண்ணிக்கையான விசாரணைகளை முடித்தே ஆகவேண்டும் என்பது அவர்களது தலைமைக் காரியாலயத்தால் விடுக்கப்பட்ட பணிப்பு. எனவே தமது தலைமைக்குக் 'கணக்குக்' காட்டுவதற்காக தமது கடமையை முடித்துவிடும் நோக்குடன் குறித்த விசாரணைகளை எப்படியாவது நடத்திமுடித்துவிடவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள்.

தவிர, காணாமற்போனோரது உறவினர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதில் அவர்களுக்கு கடுகளவும் அக்கறை கிடையாது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இத்தகைய கண்துடைப்பு நடவடிக்கைகள் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தொடரப்போகின்றன ..? அரச படைகள் குடாநாட்டில் அரங்கேற்றிய கோர நடவடிக்கைகளைப் பூசி மெழுகும் இதுபோன்ற நடவடிக்கைகளைக் கைவிட்டு இதுவிடயத்தில் இனியாவது ஏதாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமா..? இல்லையென்றால் "பழைய குருடி கதவைத் திறவடி" என்பது போல இந்த விசாரணைகள் முடிவுகள் எவையும் இன்றி மேலும் தொடரத்தான் போகின்றனவா...? காலம் பதில் சொல்லட்டும். ★





தொடரும் துயரம்...

# முதலாவது பிறந்ததின வாழ்த்து
## 25—12—2003




செல்வன் சச்சிதானந்தன் வினேஸ்

உடுப்பிட்டி, சந்தை வீதியைச் சேர்ந்த
**சச்சிதானந்தன் - விமலாதேவி தம்பதியரின்**
**செல்வப் புதல்வன்**

## வினேஸ்

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (25.12.2003) வியாழக்கிழமை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். வினேஸ் குட்டியை அன்பு அப்பா, அம்மா, கனடாவில் உள்ள பெரிய மாமா, அத்தை, அபிநயா மச்சாள், ஐங்கரன் அத்தான், அஸ்வினி மச்சாள், நவாலி சின்ன மாமா மற்றும் அப்பப்பா, அப்பம்மா, மாமிமார், மாமாமார், மச்சாள்மார், மச்சான்மார், சித்தப்பா, சித்தி, ஹரிகரன் தம்பி மற்றும யாவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

**'அன்னபூரணி இல்லம்',**
**சந்தை வீதி, உடுப்பிட்டி.**
**060-2212904.** (26265)(34-14-25) :

அன்புடன் வாழ்த்தும்:
**திரு.க.சச்சிதானந்தன் (அப்பா).**



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 - 04 - 1965



மறைவு
25 - 12 - 2002

## செல்வரட்ணம் ஜெயராஜா
(விநோத்)

**ஆண்டு ஒன்று ஆயிடினும் ஆறவில்லை எம்மனது**
**ஈண்டு உங்களை எண்ணியே இவ்வுலகில் வாழ்கிறோம்**
**உங்களது அன்பு முகத்தை எப்படி மறக்கமுடியும்?**
**ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.**


*முதலாம் குறுக்குத்தெரு,*
*மானிப்பாய்.*
(26229) (25-14-13-21)

- பிரிவால் துயருறும்:
**உறவினர்கள்.**



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
07 - 07 - 1925



மறைவு
25 - 11 - 2003

## அமரர் சின்னத்தம்பி வாரித்தம்பி
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

**எமது குடும்பத் தலைவர் மறைந்த செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறி, மலர்வளையம் வைத்து, அனுதாபச் செய்திகளை அனுப்பி, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (25.12.2003) வியாழக்கிழமை அமரரின் தற்காலிக இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**- மனைவி, மக்கள்,**
**மருமக்கள்.**

தற்காலிக முகவர்:
கிங்ஸ்லி சத்தியநாதன்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(26244) (25-21-13-13)

நிரந்தர முகவரி:
அம்மன் கோவிலடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.


# கோயில் சுவருடன் மோட்டார் சைக்கிள் மோதி இருவர் காயம்!

தெல்லிப்பழை,டிசெ.25

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து கோயில சுவருடன் மோதியது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயம் அடைந்தனர்.

சுன்னாகம் சந்திக்குச் சமீபமாக அமைந்துள்ள வைரவர் கோயிலடியில் கடந்த திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

ஊரெழு மேற்கைச் சேர்ந்தவர்களான இரத்தினம் சதீஸ்குமார், தங்கராசா பிரேமதாஸன் ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

இவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஓ-4-150)

# விசர் நாய்க்கடிக்கு 5 பேர் இலக்காகினர்

தென்மராட்சி,டிசெ.25

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐந்துபேர் ஒரே நாளில் வெவ்வேறு இடங்களில் கடந்த திங்கட்கிழமை விசர் நாய்களால் கடியுண்டனர்.

பளை நகரைச் சேர்ந்த முத்துக்குமார் குசலகுமாரி (வயது 44), அவரது பிள்ளைகளான முத்துக்குமார் கவிபிரகாஷ் (வயது 16), முத்துக்குமார் கஜன் (வயது 15) ஆகியோரும் கச்சாய் தெற்கைச் சேர்ந்த ரி.காருணயன் (வயது 64), ரி.அரவிந்தன் (வயது 24) ஆகியோரும் விசர்நாய்களால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, கடந்த ஒக்ரோபர் பத்தாம் திகதியிலிருந்து டிசெம்பர் 22 ஆம் திகதி வரை 130பேர் விசர் நாய்க்கடித் தடுப்பு ஊசி மருந்து ஏற்றியுள்ளனர் என்றும், கடந்த 22ஆம் திகதிவரை 612 பேர் நாய்களினால் கடியுண்டனர் என்றும் ஆஸ்பத்திரி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-117)

# கேட்போர்கூடம் விஸ்தரிப்பு

குருநகர்,டிசெ.25

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர்கூடம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சொ.சூ.சிறில் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். பண்ணைப் பகுதி அருகே அமைந்துள்ள யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தின் 2 ஆவது மாடியில் கேட்போர்கூடம் அமைந்துள்ளது. நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இந்தக்கூடம் வாடகையடிப்படையில் தனியார்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது இக்கேட்போர்கூடத்தில் சுமார் 500 பேருக்கான இடவசதியே உள்ளது. சுமார் 2000 பேருக்கான இடவசதியை ஏற்படுத்தும் வகையில் கேட்போர் கூடம் விஸ்தரிக்கப்படவுள்ளது. (ஓ-51)


## தேவை

இலத்திரனியல், அழகுசாதன (Fancy) விற்பனையில் அனுபவமுள்ள பெண் / ஆண் விற்பனையாளர்கள் தேவை. கணனி அறிவு விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

**ஸ்ரீவிநாயகர்,**
வழக்கம்பரை, சுழிபுரம்.



## தவறிவிட்டது

பற்குணராசா பாலமுருகநந்தன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (7900538027V), விசேட அடையாள அட்டை (0965000001), சாரதி அனுமதிப் பத்திரம் (A0069... ) என்பன 20. 12. 2003 அன்று கச்சேரிக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்: அம்பாள் வீக்ஷர், பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(26260) (26-21-14-13)



## பயிலுநர் தேவை

எமது நிறுவனத்தில் பயிலுநராகப் பணிபுரிவதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றார்கள்.

நேரில் வரவும்.
**"யசோ"**
**35, சுன்னாகம்ப்பிட்டி றோட்,**
(26262)(34) யாழ்ப்பாணம்.



# 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## திருமதி கமலினி குகதாசன்

உடுவில் காளிகோயிலடியைச் சேர்ந்த திருமதி கமலினி குகதாசன் அவர்களின் 50ஆவது பிறந்தநாளாகிய இன்று (25.12.2003) வியாழக்கிழமை அவரை கணவர், சகோதரர், சகோதரி குடும்பங்கள், மக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்லாண்டுகாலம் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றனர்.

உடுவில். சுன்னாகம். (26249)(34-14-13-21) தகவல்: சாந்தகுமார் குடும்பம்.



உ

# விசேட விலைக்கழிவு

## கருமாரி மோட்டோஸ்

❖ லாண்ட் மாஸ்டர் ❖ வாட்டர்பம்
❖ ஜெனரேட்டர் ❖ ஓட்டோ
❖ மீன்பிடி இயந்திர உதிரிப்பாகப் பாவனையாளர்களுக்கும்
எமது வாடிக்கையாளர்களுக்கும்

**விசேட விலைக்கழிவு**

**01.12.2003 முதல் 31.12.2003 வரை**

**இல. 281 A, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணத்தில்**
இயங்கும்
எமது நிறுவனத்தின்

20 ஆவது ஆண்டு நிறைவு 10. 12. 2003 என்பதால் இந்த விலைச் சலுகைகளை வழங்குகின்றோம் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

**- நிறுவனத்தினர்.**

(C/31553)(14-13-21)


| | | | |
|---|---|---|---|
| அருளூற்றி | ஆதரிக்கும் | ஆன்மீகப் | பேரொளியே! |
| அருளூற்றி<br>இருளகற்றி | ஆதரிக்கும்<br>நாம்வாழ | ஆன்மீகப்<br>நின்பதமே | பேரொளியே!<br>சரணம்! |
| தரிசிக்க,<br>கரிசனை | வருகின்ற<br>நோக்கும் | பரிசுத்த<br>போதுமே | குருவே!<br>எமக்கு |
| "புகழ்ச்சிக்கு<br>மகிழ்ச்சி | உரியவரை"<br>பரிமாறும் | போற்றித்<br>பிறப்பின் | துதிபாடி<br>பெருவிழா |
| ஒப்புரவில்<br>அற்புதரை | வரவேற்று<br>வழிபடும் | நட்புறவின்<br>அன்பியப் | உபசரித்து<br>புதுவிழா |
| வியத்தகு<br>தவத்திரு | படைப்பு<br>வடிவம் | விடுதலை<br>தாங்கிய | அடையத்<br>குருவிழா |
| வார்த்தை<br>கீர்த்திகள் | வழிவாழ்வு<br>இறங்கும் | வையகம்<br>கிறீஸ்து! | துலங்க,<br>தினவிழா |
| நீதி நிறை<br>ஆதிபரன்! | சமாதானம்<br>யேசுபாலன்! | நீடித்து<br>ஆசிகூறும் | நிலைக்க<br>ஒளிவிழா. |
| அளப்பரிய<br>மனப்புயல் | இறையன்பின்<br>அகற்றும் | ஆழத்தில்<br>மக்கள் | மூழ்கி<br>அணிவிழா |
| ஏக்கமும்<br>விளக்கும் | தாக்கமும்<br>உவக்கும் | சுமக்கும்<br>ஒளிமுகத் | நெஞ்சில்<br>திருவிழா |
| சிந்தைகள்<br>மந்தைகள் | சிதறாது<br>மத்தியிலே | சீரழிவு<br>மனுமகன் | நேராது<br>வதிவிழா |
| வாதிடும்<br>நீதிமகன்! | மோதலை<br>வீதிவரும் | அமைதியில்<br>நிரந்தர | சேர்க்க,<br>இசைவிழா |
| வாய்மை<br>தூயவர்! | நேர்மை<br>தோன்றும் | இணையும்<br>தெய்வீகத் | சேவையில்<br>திருவிழா |
| இடையூறு<br>விடைதரும் | எதிர்ப்பு<br>வேந்தன்! | தடைகள்<br>பூமிவரும் | விலக்க<br>துதிவிழா. |
| விட்டுக்<br>திட்டம் | கொடுத்து<br>அளிக்கும் | விழிப்பாய்<br>திருவுளப் | இருக்க<br>பணிவிழா. |
| நீள்துயர்<br>ஆள்பதி | நீங்கவும்<br>பீடம் | நிம்மதி<br>அருள்சேர் | ஓங்கவும்<br>குருவிழா |
| ஊர்உலகம்<br>தீர்வுகள் | தரிசித்து<br>வழங்கும் | உள்ளங்கள்<br>திருமகன்! | புதுப்பித்து<br>பணிவிழா. |
| இயல்பு<br>தயவுடன் | வாழ்வு<br>தாழ்மை | எழுமை<br>தாங்கும் | திருப்பு<br>மனைவிழா. |

-ஞா. அரியமலர், மிருசுவில்.

(25631) UTHAYAN Graphics

# வங்கி நிகழ்வுகள்



காரைநகரில் கடற்றொழில் வங்கி அண்மையில் திறந்துவைக்கப் பட்டது. நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்எம்.அஸ்வர் நாடாவை வெட்டி வங்கியைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், விடுதலைப் புலிகளின் காரைநகர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் ஆகியோர் உட்பட நிகழ்வில் பங்கேற்றவர்களும் படத்தில் உள்ளனர்.




யாழ். மாவட்ட வங்கிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப் பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் மற்றும் கௌரவிக் கப்பட்ட மூத்த வங்கியாளர்கள் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர்.



இலங்கை வங்கியின் மாவிட்டபுரம் கிளையில் கணனி மயமாக் கப்பட்ட சேவையின் ஆரம்ப வைபவம் அண்மையில் கிளை முகாமை யாளர் என்.ஜெயரட்ணம் தலைமையில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கிப் பிரதிப் பொது முகாமையாளர் பி.ஏ.சி.பெர்னாண்டோ நாடாவை வெட்டி கணனிச் சேவைப் பிரிவைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-135)




மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளை வாடிக்கையாளரான க.சிவஞானசுந்தரம், கிளை முகாமையாளர் திருமதி ச.சிவனருள்சுந் தரத்திடம் இருந்து ஜயஸ்ரீ அதிர்ஷ்டப் பரிசாக ஒரு லட்சம் ருபா காசோலையைப் பெறுவதைப் படத்தில் காணலாம். (ஒ-173)

## ஒளி விழா

அரியாலை,டிசெ.25

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் வருடாந்த ஒளி விழா நிகழ்வுகள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் சூ.சிறில் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திருமதி றீற்றா யேசுதாஸ் அவர்களின் நற்செய்தி வாசித்தலும், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் யே.நீக்கிலாஸ் அடிகளாரின் சிறப்புச் செய்தியும் இடம்பெறும்.

தொடர்ந்து சங்கத்தின் உபதலைவர் ச.த.கணநாதன், சங்க இயக்குநர் அ.அலெக்சிஸ், யாழ் கூ.அ. உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி, செல்வி அஞ்சலின் அலண்டினா தேவதாஸ், ஆரணி சாந்தகுமார் ஆகியோரின் கிறிஸ்மஸ் செய்தியும் இடம்பெறும்.

தொடர்ந்து யாழ். திருமறைக் கலாமன்றத்தின் வரவேற்பு நடனம், சங்கப் பணியாளர்களின் இன்னிசை கீதம் என்பனவும் நடைபெறும்.(ம-17)

## மனைப்பொருளியல் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,டிசெ.25

தென்மராட்சி பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் மனைப்பொருளியல் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாக உள்ளன. கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் அலுவலகக் கட்டடத்தில் இடம்பெறும் இப்பயிற்சிநெறியில் பங்குபற்ற பிரதேசத்தைச் சேர்ந்த 30 பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்புகள் வருடா வருடம் பிரதேசத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலும் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-117)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.25

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 3ஆம் திகதி திறந்த பல்கலைக்கழக யாழ்பிராந்திய அலுவலகத்தில் இடம்பெறும்.

எதிர்வரும் 3ஆம் திகதி கல்வி உளவியலும் (1201), மறுநாள் 4ஆம் திகதி கல்வி அடிப்படைகளும் (1202), எதிர்வரும் 10ஆம் திகதி கல்வி தொழில்நுட்பமும் (1204) இடம்பெறும். பரீட்சை காலை 9மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

இதுவரை பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காத விண்ணப்பதாரிகள் 853615, 853777 எனும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(ம-185)

## இசை நிகழ்ச்சி

அரியாலை,டிசெ.25

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் மாதாந்த இசைநிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறும்.

திருமதி சுப்புலட்சுமி சச்சிதானந்தம் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் ஜேர்மனி நாட்டில் இருந்து வருகைதந்த நெல்லியடி 'தவில் சுடரொளி' கே.பி.செல்வநாயகம் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும். (ம-17)

## அமெ.பிரமுகருக்கு கதிர்காமர் அழைப்பு

கொழும்பு,டிசெ.25

அடுத்த வருடம் மார்ச் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள, "தெற்காசியாவில் அமெரிக்காவின் பாத்திரம்" என்ற தொனிப்பொருளிலான இரண்டு நாள் கருத்தரங்கிற்கு அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலர் மெடலின் அல்பிரைட் அம்மையார் அழைக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கற்கை நெறிகளுக்கான பண்டாரநாயக்க நிலையம் இந்தக் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

நிலையத்தின் தலைவரும், ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர், புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்கு அண்மையில் சென்றிருந்தார். அந்நிகழ்வுக்கு பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்த அல்பிரைட் அம்மையாரிடம் கதிர்காமர் இந்த அழைப்பை விடுத்தார்.

நிகழ்வில் கலந்து கொண்ட நியூயோர்க்கின் வெளியுறவுக் கவுன்ஸில் தலைவர் ரிச்சர்ட் ஹாஸீனையும் கதிர்காமர் இந்தக் கருத்தரங்குக்கு அழைத்துள்ளார்.

# வாசகர் திருமுகம்

## யாழ். விஞ்ஞானச் சங்கப் போட்டிகள் நீதியான முறையில் நடத்தப்படுமா?

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான அறிவு விருத்தியில் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் பணிகள் அளப்பரியவை என்பதை யாழ். கல்வி உலகம் என்றும் மறவாது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதிகவளம், ஆளணி வளம் போன்றவற்றின் மிகக் குறைந்தளவு பங்கையேனும் பாடசாலைகளில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் பெறக்கூடிய வகையில் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கமானது யாழ். பல்கலைக்கழகத்துக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இடையில் ஓர் இணைப்புப் பாலமாகச் செயற்பட்டு சிறப்பாகச் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

அத்துடன், வருடந்தோறும் யாழ். விஞ்ஞானச்சங்கத்தினால் நடத்தப்படுகின்ற விஞ்ஞானக் கண்காட்சிகள் உட்பட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படுகின்ற இளம் ஆய்வாளர் விருது, வினாடிவினாப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி போன்றன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது யாவரும் அறிந்ததே.

பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான அறிவு விருத்தியில் மேற்படி போட்டிகள் கூடுதலான பாதிப்பை ஏற்படுத்துவதனால் இப்போட்டிகள் பாரபட்சமற்று நீதியான முறையில் நடத்தப்படவேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்ப்பது தவிர்க்கமுடியாது. ஆனால், 01.11.2003 சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞானச் சங்கப் போட்டிகளில் ஏற்பட்ட ஒழுங்கீனங்கள் அங்கு குழுமியிருந்த விஞ்ஞான ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் கூடுதலான அளவு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருந்தன.

அதாவது, போட்டி நிகழ்வுகளில் எல்லோருக்கும் சமசந்தர்ப்பத்தை வழங்குவதற்காக நேரக் கட்டுப்பாடு என்பது மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும் என்பது காலங்காலமாகப் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு வழமை.

ஆனால், காலை 10 மணிக்கு ஆரம்பமாக வேண்டிய விஞ்ஞான வினாடிவினாப் போட்டியானது 30 நிமிட தாமதத்தின் பின்பு காலை 10.30 மணிக்கே ஆரம்பமாகியது. அத்துடன், ரியூட்டரிச் சீருடையுடன் எல்லோரையும் அவமதிக்கும் விதத்தில் 40 நிமிட தாமதத்தில் 11.10 மணிக்கு வந்த மூன்று மாணவர்கள் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு மேலதிக நேரமும் விசேடமாக வழங்கப்பட்டது.

அனுமதி அட்டையில் குறிப்பிட்ட நேரத்தின்படி மேற்படி மாணவர்கள் ஒரு மணித்தியாலம் தாமதமாக மேற்படி பரீட்சைக்கு அலட்சிய மனப்பான்மையுடன் சமுகமளித்திருந்தனர் என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

இதனால் 11.30மணிக்கு ஆரம்பமாக வேண்டிய விஞ்ஞானக் கட்டுரைப் போட்டியானது 12.00 மணிக்கே ஆரம்பமாகியது.

ஓர் ஆண்கள் பாடசாலையைச் சேர்ந்த குறிப்பிட்ட மூன்று மாணவர்களுக்காக விஞ்ஞானக் கட்டுரைப்போட்டிக்குச் சமுகமளித்த ஏறக்குறைய நூறு மாணவர்கள் 30நிமிடம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேற்படி ஒழுங்கீனம் காரணமாக:-

1.பரீட்சைகள் உட்பட போட்டி நிகழ்வுகளுக்கு மாணவர்கள் தாம் நினைத்த நேரம் போகலாம் என்ற தப்பபிப்பிராயம் மாணவர்கள் மத்தியில் ஏற்பட வழிவகுக்கப்படுகின்றது.

2. மேற்படி போட்டிப் பரீட்சையானது குடாநாட்டில் வேறு இருநிலையங்களிலும் நடைபெற்றதால் ஒரு மணித்தியாலம் தாமதமாகப் பரீட்சைக்கு வந்த மாணவர்கள் குறுக்குவழியில் வினாத்தாளை ஏற்கனவே பெற்றிருக்க மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் என்ன?

3. தற்போது பாடசாலைகளில் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்கள் பரீட்சை மண்டபங்களுக்குப் பாடசாலைச் சீருடைகளுடனேயே சமுகமளிப்பது ஒழுக்க மேம்பாட்டுக்கு அவசியம் என்ற வழமை மீறப்படுவதற்கு கால்கோள் இடப்படுகின்றது.

ஆகவே, குடாநாட்டு மாணவர்களின் விஞ்ஞான அறிவு விருத்தியில் கணிசமான பங்கையாற்றிவரும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தினர் மேற்படி விடயங்களிலும் கவனம் செலுத்துமாறு விஞ்ஞான ஆசிரியர் என்ற முறையில் கேட்டுக்கொள்கின்றேன்.

*கோப்பாய் வடக்கு,* **விஞ்ஞான ஆசிரியர்.**

## பிரகாசிக்குமா கரம்பொன்?

ஊர்காவற்றுறை, கரம்பொன் பகுதியில் வசிக்கும் மக்கள் 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மீண்டும் 1996ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்து எட்டு வருடங்கள் ஆகின்றன. ஆனால் இன்றுவரையும், கரம்பொன் ஒழுவில் வீதி, கரம்பொன் தென்கிழக்கு, கரம்பொன் கிழக்கு, மெலிஞ்சிமுனை ஆகிய பகுதிகளில் வதியும் மக்கள் இன்னமும் குப்பிவிளக் குடனும் அரிக்கன் லாம்புடனும் தமது இரவுப் பொழுதினைக் கழித்து வருகின்றனர். கடந்த 2001ஆம் ஆண்டுமுதல் ஊர்காவற்றுறை நகரப் பகுதியில் ஓர் மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டு ஊர்காவற்றுறை நகரப் பகுதிக்கும் அதனை அண்டிய பகுதிக்கும் மின்இணைப்பு பொருத்தப் பட்டு மின்சாரமும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், மேற்குறிப்பிட்ட கரம்பொன் பகுதிக்கு இன்னமும் மின்சாரமும் மின்இணைப்புமே வழங்கப் படவில்லை. இது தொடர்பான விண்ணப்பங்களும் கடிதங்களும் வடபிராந்திய மின்சார சபைக்கும், பிரதேச சபைக்கும், உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் அனுப்பப்பட்டன. ஆனால், அவர்கள் ஓர் ஒழுங்கான நடைமுறையினை மேற்கொள்ளாது, இப்பகுதிகளுக்குப் புதிய மின்கம்பங்கள் நாட்டப்பட்டாலே மின்இணைப்பு வழங்கமுடியும் எனக்கூறி மின்கம்பங்கள் நடுவதற்கு அப்பகுதி மக்களை சிரமதான முறையில் குழிகள் தோண்டித் தரும்படி கேட்டனர். இதற்கு இணங்க மக்கள் குழியினைத் தோண்டினர். ஆனால், மின்கம்பங்கள் நடப்படவில்லை. பின்னர் பருவமழை பெய்யத் தொடங்கின. இதனால் வெட்டப்பட்ட குழிகள் மூடப்பட்டுவிட்டன. அதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் கரம்பொன் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான எவ்வித முயற்சியினையும் மேற்கொள்ளவில்லை. தீவகத்தின் பிறபகுதிகளில் மின்சாரம் வழங்கப்பட கத்தோலிக்க மாணவர் விடுதி, மாணவிகள் விடுதி, கன்னியாஸ்திரிகள்மடம், போசனசாலை, பெந்தக்கோஸ் சபை, வெதுப்பகம், தபால்நிலையம், பாடசாலைகள் இதனைவிட குடியிருப்பாளர்கள், கணனிப் பாவனையாளர்கள் எல்லாமும் நிறைந்த இக்கரம்பொன் பகுதிக்கு மின்இணைப்பு வழங்கப்படாமையையிட்டும் பாடசாலைகளிலுள்ள கணனிகளை இயக்க முடியாமையையிட்டும் கரம்பொன் கிராமம் இருளில் மூழ்கியுள்ளமையையிட்டும் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தியும் உரிய நடவடிக்கை எடுக்காததையிட்டு கரம்பொன் பகுதி மக்கள் கடும் கவலையும் விசனமும் அடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில்

**கவி.**




சக்தி, கவர்ச்சிகரமான வடிவமைப்பு, நம்பகத்தன்மையைப் பற்றி நாம் அனைவரும் நினைப்பதுண்டு... நவீன தொழில் நுட்பத்துடன் அதிக சக்தியுடைய 143.43 CC என்ஜின் கொண்ட பள்சர் உங்கள் மனதை நன்கறிந்த எங்கள் காலத்திற்குரிய மோட்டார் சைக்கிள்.

அது மட்டுமல்ல... உங்கள் நம்பிக்கையை என்றும் பாதுகாக்கும் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் மற்றும் நாடு முழுவதும் பரந்து காணப்படும் சேவை, உதிரிப்பாக முகவர்கள் வலைப்பின்னலூடாக உங்கள் சேவைக்கு தயார் நிலையில். இப்போது நீங்களும் அனைத்தையும் முந்திக்கொண்டு முன்னணியில்...

- 143.43 CC 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- டிஸ்க் பிரேக் (உலகப் புகழ்பெற்ற இத்தாலி நாட்டு பிரம்போ கம்பனியின் வடிவமைப்புடன்)
- 5 கியர்கள் கொண்ட வேக ஒழுங்கு
- கிக் மற்றும் இலக்ட்றிக் ஸ்டாட்டர்
- 18 லீட்டர் கொள்ளளவுடைய எரிபொருள் தாங்கி (3 லீட்டர் ரிசவ்)
- வேகமானி, ட்ரிப் மீட்டர், எரிபொருள் சுட்டி மற்றும் கவர்ச்சிகரமான டெல்டேல் விளக்குகளுடன் (Telltale light)
- சைட் ஸ்டேன்ட் சுட்டிக் காட்டி
- பக்க உறைகள் (Side covers) இரண்டிற்குமான பூட்டு

துணிகரமற்ற உத்தரவாதம்

பஜாஜ் இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 4700600. தொலைநகல் : 4700677, 2687175.
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு : 4715050.
இணைய தளம் : http://www.dpmco.com

பிராந்திய அலுவலகங்கள் : கண்டி, மாத்தறை, அம்பாறை, தெஹியத்தக்கண்டிய, அநுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா, பக்கலை, பதுளை, திருகோணமலை, மத்துகமை, நீர்கொழும்பு, குருநாகல்.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.

mel ads 3/12/2681

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது நத்தார், புதுவருட வாழ்த்துக்களை
மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். வோச் வேக்ஸ்
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழினி வீடியோ சென்ரர்
259, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

றோயல் தொலைத்தொடர்பு நிலையம்
18, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5816

R.Sathees
T.P.: 0777 733066
(26259) (24-13-17)


## பாடசாலைக் கட்டடங்களுக்கு அடிக்கல்

'நிகொட்' நிறுவனத்தினரால் பளை மத்திய கல்லூரி, பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை என்பவற்றுக்கு பத்து லட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள வகுப்பறைத் தொகுதிகளுக்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த மாத இறுதியில் பளை கோட்டக் கல்வி அலுவலர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

பளை மத்திய கல்லூரியில் அமைக்கப்படவுள்ள இரு வகுப்பறைக் கட்டடங்களுக்கான அடிக்கற்களையும் பிரதேச செயலர் சு.புத்திசிகாமணியும், பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ள இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினமும் நட்டு வைத்தனர்.(ம-117)

## எழுதுவினைஞர் இடமாற்றம் திட்டமிட்டபடி நடக்கும்

அச்சுவேலி,டிசெ.25

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் எழுதுவினைஞர்களின் இடமாற்றம் திட்டமிட்டபடி நடைமுறைப் படுத்தப்படுமென வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி அமைப்புகளான மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றில் தொடர்ச்சியாக நீண்டகாலம் கடமையாற்றிய எழுதுவினைஞர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் பல்வேறு திணைக்களங்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றங்கள் தொடர்பாக அண்மைக்காலமாக ஆட்சேபங்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவை, பொது எழுதுவினைஞர் சேவை என இரண்டு பிரிவுகளாக இருந்த எழுதுவினைஞர் சேவை இப்போது ஒரே சேவையாக மாற்றப்பட்டுள்ளது. இந்த எழுதுவினைஞர் சேவையில் இருப்பவர்களை திணைக்கள ரீதியாக மாற்றம் செய்வது ஏற்புடையது. அதில் எந்தவித பிரச்சினையும் இல்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(ம-8-11)


பாராட்டி வாழ்த்துகிறோம்
சங்கானை, சிலம்புப் புளியடி இந்து இளைஞர் மன்றத்திற்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக முதற்கட்டக் கொடுப்பனவு ரூபா 100000/- வும். வறிய மக்களின் மலசலகூட நிர்மாணத்திற்காக சீமெந்தும் தந்துதவிய
கௌரவ இந்து சமய விவகார
அலுவல்கள் அமைச்சர்
திரு.தி.மகேஸ்வரன்

அவர்களை
மன்றத்தின் சார்பிலும்,
இப்பகுதி மக்களின் சார்பிலும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இந்து இளைஞர் மன்றம்,
சிலம்புப் புளியடி, சங்கானை.
(C/32231) (24-13-17)

மாவை - கொல்லங்கலட்டி
ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோவில்
மார்கழித் திருமஞ்ஞன பிரமோற்சவ விஞ்ஞாபனம்
இலங்காபுரியை அரசாண்ட இராவணேஸ்வரனாலும் விபீஷண சக்கரவர்த்தியாலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகோடி சிவலிங்கங்களுள் ஒன்றான ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோவில்.
கொடியேற்றம் 29.12.2003 பகல் 10 மணிக்கு
தேர்த்திருவிழா 6.1.2004 பகல் 11 மணிக்கு
மறுநாள் தீர்த்த உற்சவம்
அனைவரும் வந்து சுவாமிதரிசனம்செய்து இஷ்டசித்திகளை பெறுவீர்களாக!
தினமும் காலை 7 மணி தொடக்கம் தெல்லிப்பழை
தடைமுகாமுக்கு வர பஸ்ஸில் அழைத்துச்செல்லப்படும்.
- அறங்காவலர்.
(26272) (24-13-17)

கபிலா சூ பலஸ்
அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எம்மினிய நத்தார் நல்வாழ்த்துக்கள்!
◊ கபிலா காலணி என்றால் அது உங்கள் எழிலை மிளிர வைக்கும் பிரத்தியேகப் பாதணி!
◊ நீங்கள் தேடிடும் பாதணி வகைகள் இம் மேதினியில் பெற்றிட நாடிட வேண்டியது கபிலாவிடமே!
◊ உங்களுக்கெனக் கொழும்பிலிருந்து விதவிதமான உள்நாட்டு, வெளிநாட்டுக் காலணிகளை நேரடியாகத் தருவித்து விநியோகிப்பவர்கள்.
யாழ். நகரில்!
கபிலா காலணி அகம்
இல.4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-32176)(31-24-13-17)

இன்றைய அறிமுகம்! MBS நாளைய நாகரிகம்!!
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தன் முதல் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.
T.P.: 0777 286247
✳ சேட்டிங் - சூட்டிங் ✳ சோளி கிற்
✳ சேட்ஸ் - சோட்ஸ் ✳ கவுண் ✳ சல்வார்கிற்
✳இந்தியன் சாரிகள ✳ பேபி சூட் மற்றும் சிறுவர் சிறுமியர்களுக்கு ஏற்ற றெடிமேற் ஆடை வகைகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

நலம் காணும் நன்னாளாம் இந்நாளில்
எமது நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது உள்ளம் நிறைந்த இனிய நத்தார்,
புதுவருட நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஹரிஹரன் பிறிண்டேர்ஸ்
General & Commercial Offset Printers
&
Computer Designers
424A, K.K.S. Road, Jaffna.
(சி-31916) (24-13-17)


இனிய நத்தார் வாழ்த்துக்கள்!
கூறைகூறத்தப்
பட்டுப் புடைவைகள்
பட்டு வேட்டிகள்.
புது ரக மனங்கவர் சல்வார்
கமிசுகள். ஆண்கள். பெண்கள்.
சிறுவர், சிறுமியர்
அனைவருக்குமான ஆடைகளை
ஒரே கூரையின் கீழ் பெற்றிட....
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்..!
த. சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்
இல.21 சிறப்பு அங்காடி மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம். ☎: 222-2826
(சி-31950)

இனிய நத்தார் வாழ்த்துக்கள்!
பாதணிகளை கொழும்பு விலையில் யாழ். நகரில் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய இடம்:
DSI
சுப்பசூஸ்
SUPER SHOES
DSI பாதணிகளை மொத்தமாகக் கொள்வனவு செய்யும் வியாபாரிகளுக்கு கொழும்பு விலையில் இருந்து விசேட கழிவு வழங்கப்படும்.
DSI பாதணிகளின் ஏக விநியோகஸ்தர்கள்:
75, கஸ்தூரியார் வீதி (கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்), யாழ்ப்பாணம்.
(சி-31949) (24-13-17)

## சாவகச்சேரி பிரதேச சபை

01.01.2004 முதல் 31.12.2004 வரை
சந்தை/ இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான

### மீள்கேள்வி அறிவித்தல்

29.11.2003 ஆம் திகதியன்று 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாகப் பின்வரும் குத்தகைகளுக்கு மீள்கேள்வி கோரப்படுகின்றது.

1. கொடிகாமம் சந்தைக் குத்தகை
2. கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை
3. வரணிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை
4. கைதடி சந்தை ஆட்டிறைச்சிக்கடை

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித்திகதி: | 29.12.2003 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: | 30.12.2003 நண்பகல் 12.00 |
| கேள்வி திறக்கப்படும் திகதி: | 30.12.2003 - பிற்பகல் 1.00 |

★ மேலதிக விவரங்களுக்கு தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொள்ளவும்.
★ கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.
23.12.2003 (சி.32238) (25-13)

ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 16 - 09 - 1932



உதிர்வு 29 - 11 - 2003

அமரர்

### சின்னத்தம்பி பொன்னுத்துரை

(அநுராதபுரம் மாவடியைச் சேர்ந்தவரும் ஓய்வுபெற்ற மலேரியா திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தரும், அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் கோவில் அறங்காவலர்சபை உறுப்பினரும்)

திதி நாள்: கார்த்திகை வளர்பிறை ஐந்தாம்நாள் (ஷஷ்டி)

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தபால், தொலைபேசி மூலமும் ஆறுதல் பகிர்ந்த அன்புள்ளங்களுக்கும், குடும்பத்தாருடன் இணைந்து உறுதுணையாக நின்று உதவி புரிந்தோருக்கும் கிரியைகளிற் கலந்து கொண்டோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அந்தியேட்டிக்கிரியை 26.12.2003 வெள்ளிக்கிழமை கிளிநொச்சி இரணமடு குளத்தில் நடைபெறுவதுடன், 28.12.2003 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் ஆனந்தபுரம் கிளிநொச்சி இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி: பொன்னுத்துரை தர்மயோதி.
பிள்ளைகள்: சுரேஸ் (ஸ்ரீராம்) - லண்டன்,
திருமதி அமுதா கௌரிநாதன் - இந்தியா,
திருமதி ஆனந்தி சிறீதரன் -
வலயக் கல்விப்பணிமனை, கிளிநொச்சி.
சகோதரர்கள்: அமரர் செல்லத்துரை.
அமரர் சுப்பிரமணியம் (இராசதுரை).
அமரர் சின்னத்துரை.
அப்புத்துரை.
திருமதி மனோன்மணி விஜயரத்தினம்.
ஐயாத்துரை, பரமதுரை, அண்ணாத்துரை.

பிள்ளையார் கோவிலடி,
தாவடி. (26268) (34-25-14-17)

தகவல்:
சி.அப்புத்துரை (சகோதரன்).

## நுளம்பைக் கட்டுப்படுத்த மலத்தியோன் விசிறும்பணி

குருநகர்,டிசெ.25

யாழ். குருநகர்ப் பகுதியில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அப்பகுதியில் உள்ள கழிவு நீர் செல்லும் வடிகால்களுக்கு மலத்தியோன் விசிறும் பணிகள் இடம்பெற்றன.

யாழ். மாநகரசபையும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள மலேரியாத் தடுப்பு இயக்கமும் இணைந்து இப்பணியை மேற்கொண்டன.

குருநகர்ப் பகுதியில் உள்ள பல வடிகால்கள் சேதமடைந்துள்ளமையால் அங்கு கழிவுநீர் தேங்கியுள்ளது. இதனால், அப்பகுதியில் நுளம்புப் பெருகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. எனவே, வாடிகால்களைச் சீர்ப்படுத்தி அப்பகுதியில் மலத்தியோன் விசிறும் பணிகளை மேற்கொள்வதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியுமென யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம-8-51)

## விசேட தேவை உடையோர் தினம்

வலி.வடக்கு,டிசெ.25

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் விசேட தேவைக்கு உரியவர் தினக் கொண்டாட்டம் நாளை, வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் வி.வி.முருகையா தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

விசேட தேவையுடைய 80 பேருக்கு பரிசுப்பொருள்களும் அன்பளிப்புகளும் வழங்கப்படவுள்ளன.

காயத்திரி கருணை குருகுல சிறுவர் இல்லம், தாயக சிறுவர் இல்ல மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(ம-86-139)

## வருட ஆரம்பத்திலேயே அடையாள அட்டை

வலி.தெற்கு,டிசெ.25

பாடசாலை மாணவர்கள் தமக்குத் தேவையான தேசிய மற்றும் அஞ்சல் அடையாள அட்டைகளை வருட ஆரம்பத்திலேயே பெற்றுக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வழங்குமாறு உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

அடுத்த வருடம் கோட்ட, வலய, மாவட்ட மட்டப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தமது அடையாள அட்டைகளை சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

எனவே, மாணவர்கள் தமது அடையாள அட்டைகளை ஏற்கனவே விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்வதன மூலம் போட்டிகளில் சுலபமாகக் கலந்துகொள்ள முடியும். மாணவர்கள் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு பாடசாலை அதிபர்கள் அறிவுறுத்தல்களை வழங்கவேண்டும் என கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-8-152)

Happy Birthday Happy Birthday

25-12-2003

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

1st



நோர்வேயில் வசிக்கும்
திருதிருமதி முரளீதரன் - நிசாந்தினி
தம்பதிகளின் செல்வப்புதல்வி

### செல்வி மயூரி

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (25.12.2003) வியாழக்கிழமை தனது நோர்வே இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

மயூரியை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சொர்ணவடலிப் பிள்ளையார் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (C/32252)(34-13-14)

தகவல்:
சுந்தரலிங்கம் (தாத்தா).

Happy Birthday Happy Birthday



ஸ்ரீ ராம ஜெயம்

**பொன்னாலை**

திருவருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான

### வைகுண்ட ஏகாதசி
### திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம்

நாராயணன் அடியார்களே!

நிகழும் சுபானு வருஷம் மார்கழித்திங்கள் 11 ஆம் நாள் (26.12.2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.15 மணிக்குக் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகும். தொடர்ந்து 10 நாள்கள் உற்சவம் நிகழும்.

❊ மார்கழி 19 ஆம் நாள் (03.01.2004) சனிக்கிழமை வைகுண்ட ஏகாதசி
அதிகாலை 3.00 மணிக்கு சங்காபிஷேகம்
அதிகாலை 5.00 மணிக்கு சொர்க்கவாசல் தரிசனம
முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
முற்பகல் 11.00 மணிக்கு இரதோற்சவம்
இரவு வைகுண்ட ஏகாதசி புராணபடனமும் பஜனையும் நிகழும்.

❊ மார்கழி 20 ஆம் நாள் (04.01.2004) ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு திருவடிநிலை புறப்பாடல்
முற்பகல் 11.00 மணிக்கு தீர்த்தோற்சவம்

மஹோற்சவ தேவஸ்தான பிரதமகுரு
வேதாகம கிரியா கலாபூஷணம்
ஸ்ரீ விஸ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருமணி (தேவஸ்தான பிரதமகுரு)

11.01.2004 மார்கழி வருடாந்த பஜனை ஊர்வலம் கோயிலடியிலிருந்து புறப்பட்டு மாவடி வீதியூடாக சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தைச் சென்றடைந்து சுழிபுரம் வீதியூடாக மீண்டும் கோயிலடியைச் சென்றடையும்.

பொன்னாலை - தேவஸ்தான பரிபாலனசபை.

## நெஞ்சை விட்டு நீங்காத நினைவஞ்சலி

ஆறாம் ஆண்டு எட்டாம் ஆண்டு



| திருமதி | அமரர் |
|---|---|
| பிலோமினா அந்தோனிப்பிள்ளை | டானியல் அந்தோனிப்பிள்ளை |

16.04.1935 ← மண்ணுலகில் → 11.06.1926
22.04.1997 ← விண்ணுலகில் → 25.12.1995

ஈன்று வளர்த்தீர்கள்! எம்முயிரில்
உயிராக ஒன்றி இருந்தீர்கள்!!
வாழ்ந்து களித்த நாள்கள் இடப்
பெயர்வால் வாடி மெலிய
தாண்டி நடந்தீர்கள்! நெடும்பயணம்!!
ஆயினும் வாழ்ந்திருப்பீர்கள் என்றும்
வற்றாத எங்கள் அன்பகத்தில்!

24. முதலாம் குறுக்குத்தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.
(26261)(34-14-25-17)

கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்கி உங்கள்
ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## Combined Maths - A/L 2006

இணைந்த கணிதம்

### பிரத்தியேக வகுப்பு (A/L) 2006

**S.இலட்சுமணன்**

ஆரம்பம்: 2003.12.27 சனிக்கிழமை மு.ப. 7.30 மணி
இடம்: 410, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
பதிவுகளை 27.12.2003 திகதிக்கு முன் மேற்கொள்ளவும்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(C/32257)(34-14-25-17)



தமிழகத்தின் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 16ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, மெரீனா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர்.சமாதியில் அஞ்சலி செலுத்தினார்.

# மாடுகளுக்குத் தொற்றும் 'விசர் நோய்': அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள ஆபத்து!

## இறைச்சியை உண்பவர்களுக்கும் நோய் ஏற்படும் அபாயம்

அமெரிக்காவின் வாஷிங்ரன் மாநிலத்தில் உள்ள கால்நடை வளர்ப்பு நிலையம் ஒன்றில் மாடு ஒன்றுக்கு விசர் நோய் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது.

இதனால் அந்நாட்டின் மாடு வளர்ப்புத்தொழில் பேராபத்துமிக்க எதிர் காலத்தை எதிர்கொள்கிற துரதிர்ஷ்ட நிலை ஏற்பட்டிருக்கின்றது.

சுமார், மூவாயிரம் கோடி டொலர் மதிப்புள்ள இத்தொழில் அப்படியே முடங்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நோய்த் தாக்கம் திடீரென ஏற்பட்டிருப்பதற்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் உண்டா என்பது குறித்தும் அமெரிக்க அதிகாரிகள் நுணுக்கமாக ஆராய்ந்து வருகின்றார்கள்.

இந்நோய்க்கு உள்ளாகும் மாடுக



ளின் இறைச்சியை உண்போருக்கு மூளை மற்றும் முள்ளந்தண்டு பாதிப்புகளை உருவாக்கும் நோய்த் தொற்று ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

ஒரு மாடு இந்நோய்க்கு ஆளானால் அதன் மூலம் ஏனையவற்றுக்கும் அந்நோய் வேகமாகப் பரவும் என்பதும் கவனிக்கத்தக்கது.

90களின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் திடீரெனப் பரவிய இத்தகைய நோயினால் அங்கு பெரும் பொருளாதார நட்டம் ஏற்பட்டது. இந்நோய்க்கு உள்ளான மாடுகளின் இறைச்சியை உண்டவர்களில் சுமார் 130 பேர் - அவர்களில பெரும்பாலனோர் இங்கிலாந்து வாசிகள் உயிரிழந்தனர். மேலும், பல நூறுக்கணக்கானோர் வேறு உடற்பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நோயிலிருந்து தமது கால்நடைகளையும், பொருளாதாரத்தையும் மீட்பதற்காக பல லட்சம் மாடுகளைக் கொன்று குவித்து புதைக்க வேண்டிய நிலைக்கு அந்த நாடுகள் அப்போது தள்ளப்பட்டன; பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளவேண்டியதாயிற்று.

கனடாவில் கடந்த மே மாதம் இத்தகைய விசர் நோயோடு மாடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அந்த நெருக்கடியிலிருந்து கால்நடை வளர்ப்புத் தொழிலை மீட்பதற்காக பல பில்லியன் (பல நூறு கோடி) டொலர்களை இழக்கவேண்டியதாயிற்று.

அமெரிக்காவிலும் இந்நோய்த் தொற்றுள்ள மாடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி நேற்றுமுன்தினம் வெளியான கையோடு அமெரிக்காவிலிருந்து அதிகளவில் மாட்டிறைச்சியை இறக்குமதி செய்துவந்த ஜப்பானும் தென்கொரியாவும் அந்த இறைச்சியை உடன் தடைசெய்திருப்பதாக அறியப்படுகின்றது.

# தற்கொலைத் தாக்குதலில் 4 ஈராக்கியர் உயிரிழந்தனர்!

ஈராக்கின் வடபகுதியில் உள்ள இர்பில் நகரில் நேற்றுத் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் 4 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர்.

வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட டிரக் ஒன்றை உள்துறை அமைச்சின் பிராந்திய அலுவலகக் கட்டடம் மீது மோதி இந்தத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் தற்கொலைத் தாக்குதலாளி, காவல்பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலீஸார் மற்றும் ஒரு பொதுமகன் ஆகியோர் கொல்லப்பட்டனர். தாக்குதலில் அலுவலகக் கட்டடத்தின் ஒருபகுதி சேதமடைந்தது.

தாக்குதல் இடம்பெற்ற பகுதி குர்தீஷ் இனமக்கள் பெரும்பான்மையாக வாழும் இடமாகும். சதாம் ஹுசைனை குர்தீஷ் விடுதலைப் போராளிகளே பிடித்து அமெரிக்காவிடம் ஒப்படைத்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், இந்தத் தற்கொலைததாக்குதல் நடந்துள்ளது.

இதுவரைகாலமும் அமெரிக்கப் படையினரை நேரடி இலக்காகக் கொண்டு சதாம் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்திவந்தனர் என்றும் -

தற்போது அமெரிக்கப் படையினருடன் இணைந்து செயற்படும் ஈராக்கியர்களை இலக்காகக்கொண்டு அவர்கள் தாக்குதல்களை மேற்கொள்ள உள்ளனர் என்பதை நேற்றைய தாக்குதல் எடுத்துக்காட்டுவதாகவும் - பி.பி.ஸி. செய்தியாளர் கிறிஸ்றோக் தெரிவித்தார்.

இதேவேளை, தலைநகர் பக்தாத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பலத்த மோதல்களின் பின்னர் நேற்று அமைதி நிலவியது. (ஒ)

# புத்தாண்டு தினத்தில் வானத்தில் அதிசயம்!

வானத்தில் நடக்கவிருக்கும் அதிசய நிகழ்ச்சியுடன் 2004ஆம் ஆண்டு பிறக்கிறது. புத்தாண்டு தினத்தில் சனிக்கிரகம் பூமிக்கு அருகில் வருகிறது.

சூரியனைச் சுற்றி வரும் முக்கிய கோள்களில் சனியும் ஒன்று. இந்தக் கிரகத்தை சுற்றியுள்ள வளையம் இதன் சிறப்பு அம்சமாகும்.

சனிக்கிரகம், மிதுனராசி மண்டலத்தில் இடம்பெற்றுள்ளது. இது செவ்வாயைவிட பிரகாசமான கிரகம் என்பது குறிப்பிடத்தக்கது.

சூரியனைச் சுற்றிவரும் பாதையில் சனிக்கிரகம் 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூமியின் அருகில் நெருங்கி வருவது வழக்கம். அந்த அதிசய நிகழ்ச்சி எதிர்வரும் முதலாம் திகதி ஆங்கிலப் புத்தாண்டு தினத்தில் நடக்கப் போகிறது.

புத்தாண்டு அன்று சனிக்கிரகம் பூமிக்கு மிக அருகில் வருகிறது. அப்போது அது கூடுதல் பிரகாசத்துடன் ஜொலிக்கும். சூரியன் உதிக்கும் நேரத்தில் கிழக்குத் திசையில் சனிக்கிரகத்தைப் பார்க்கலாம் . வானவியலில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இந்த அபூர்வ நிகழ்ச்சி புத்தாண்டுப் பரிசு என்று சொல்லலாம்.

# இந்திய, பூட்டான் படையினர் மீது உல்பா தீவிரவாதிகள் தாக்குதல்!

சிலிகுரி,டிசெ.25

இந்திய - பூட்டான் எல்லையில் உல்பா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில இந்தியப் படையினர் 16 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப் படுகிறது. ஆனால், இந்தியா அதை மறுத்துள்ளது.

அஸாம் மாநிலத்தில் வன்முறையில் ஈடுபடும் உல்பா தீவிரவாதிகள், அயல்நாடான பூட்டானின் தெற்குப் பகுதியில் உள்ள காடு - மலைகளில் முகாம் அமைத்துள்ளனர். அவர்களை பூட்டான் இராணுவம் வேட்டை ஆடுகிறது. அந்நாட்டு மன்னர் தலைமையில் இராணுவத்தினர் முகாம்களைத் தகர்த்துத் தீவிரவாதிகளைத் தீர்த்துக் கட்டிவருகிறார்கள். தீவிரவாதிகளை இந்தியாவுக்குள் நுழையவிடாது எல்லையில் இந்தியப் படையினர் காவல்காத்து வருகின்றார்கள்.

அவர்களைச் சுட்டுவீழ்த்திவிட்டு உல்பா தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் நுழைந்துள்ளார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது. அதில் 16 இந்தியப படையினர் கொல்லப்பட்டனர் என்றும் செய்தி வெளியாகியிருந்தது.

ஆனால், அந்தச் செய்தியை இந்திய இராணுவ உயர் அதிகாரி ஒருவா மறுத்தார். அவர் கூறியதாவது:-

உல்பா தீவிரவாதிகளைத் தடுக்க எல்லையில் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த இந்தியப்படையினர் 16பேர் கொல்லப்பட்டனர் என்றும் சில்குரி மாவட்ட இராணுவத் தலைமையகத்தில 16 சவப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன என்று வெளியான செய்திகள் தவறு. ஆனால் உல்பா தீவிரவாதிகளை வேட்டையாடும் பணி நீடிக்கிறது.

இதுவரை 160 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு அவர் கூறினார்.

## இயேசு பற்றிய திரைப்படத்தால் சர்ச்சை

மியாமி,டிசெ.25

இயேசு கிறிஸ்து தொடர்பான சாச்சைக்குரிய 'கிறிஸ்துவின் திருப்பாடுகள்' என்ற திரைப்படம் பொதுமக்களுக்கு வெளியிடுவதற்கு முன்பாக அமெரிக்காவில் புளோரிடா நகரில் ஜனவரி 21ஆம் திகதி நடைபெறும் கிறிஸ்தவ மதகுருக்கள மாநாட்டில திரையிடப்படும்.

இயேசுவின் கடைசி 12 மணி நேரத்தை சித்தரிக்கும் இப்படம் லத்தீன மற்றும் அராமை மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்படம் வெளிவந்தால் தங்களுக்கு எதிரான வன்முறை அதிகரிக்கும் என்று யூதர்கள் அஞ்சுகின்றனர்

இப்படத்தில் பல விருதுகளைப் பெற்ற பிரபல நடிகர் மெல் கிப்சன் நடித்துள்ளார்.



ஆப்கானிஸ்தானியத் தலைநகர் காபூலுக்கும் தலிபான்களின் கோட்டையான கந்தகார் நகருக்கும் இடையேயான பிரதான வீதி அமெரிக்கப் படையினரால் மூடப்பட்டிருந்தது. இந்தப் பிரதான வீதியைப் போக்குவரத்தை ஆப்கான் இடைக்கால அரசின் தலைவர் ஹமீட் கர்சாய் சம்பிரதாயபூர்வமாக சமீபத்தில் திறந்துவைத்தார்.

# இந்தியப் பொறியியலாளரை தலிபான்கள் விடுவித்தனர்

காபூல்,டிசெ.25

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பிடித்துச்சென்ற இந்தியப் பொறியியலாளர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இத்தகவலை ஆப்கான் உள்துறை அமைச்சகத்தின் உயரதிகாரி குல் நபி அஹமத் சாய், பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட இரண்டு இந்தியர்களும் நேற்றுக்காலை உள்ளூர் நேரப்படி 10 மணியளவில் காபூலில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்

கடந்த 6ஆம் திகதி காபூல் கந்தகார் பிரதான வீதியின் கட்டுமானப் பணியை மேற்பார்வைசெய்துகொண்டிருந்தபோது இவர்கள் கடத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா, பிரிட்டனுக்கு லிபியா அல்-கெய்டா பற்றித் தகவல்

லண்டன்,டிசெ.25

அல்- கெய்டா மற்றும் இஸ்லாமிய தீவிரவாதிகள் பற்றிய இரகசியத் தகவல்களை லிபிய அரசு பிரிட்டன் மற்றும் அமெரிக்க புலனாய்வு அமைப்புகளுக்கு அளிப்பதாக லண்டனில் இருந்து வெளியாகும் 'ஒப்சேவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படவும்; ஐ.நா சபை விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கவும். இதுபோன்ற தகவல்களை இரண்டு ஆண்டுகளாக லிபியா அளிப்பதாக அப்பத்திரிகை கூறியுள்ளது.

லிபியாவின் வெளிவிவகார பாதுகாப்பு அமைப்பின் தலைவர் மூசா கவுசா, அமெரிக்கா மற்றும் பிரிட்டன ஆகியவற்றுக்கு எதிராகவே இருந்தார். பயங்கரவாதத்தை வெளிநாடுகளுக்கு அவர் பரப்புகிறார் என்று கூறப்பட்டது. 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க்கில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு அவரது செயற்பாடுகள் மாறின. பயங்கரவாதிகள் பற்றிய தகவலை பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் அவர் அளிக்கத் தொடங்கினார்.

இதன்மூலம், லிபியா மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடையை நீக்க வழி ஏற்படும் என்று அந்நாட்டு அரசு கருதுகிறது.

லண்டனில் லிபியாவின் தூதரகத்தில் முன்னர் பணியாற்றியவர் மூசா கவுசா. அப்போது, லண்டனில் உள்ள லிபிய ஜனாதிபதிக்கு எதிரானவர்களைக் கொல்லப்போவதாக மூசா வெளிப்படையாகப் பேசினார். இதனால், 1980 இல் அவர் லண்டனில் இருந்து வெளியேற்றப்பட்டார். தற்போது மீண்டும் பிரிட்டனுடன் அவர் உறவு கொண்டிருப்பதால் அங்குள்ள லிபிய நாட்டவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

# மத்திய அரசிலிருந்து விலகுவதா? ம.தி.மு.க. தலைவர்கள் குழப்பம்!

வேலூர்,டிசெ.25

இந்திய மத்திய அரசிலிருந்து விலகுவது குறித்து ம.தி.மு.க. தலைவர்களிடையே முரண்பாடு உருவாகியுள்ளது.

'பொடா' சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்று தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. ஆகியவை வலியுறுத்தின. ஆனால் அதை ஏற்க இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்துவிட்டது. இதைத் தொடர்ந்து மத்திய அமைச்சரவையில் இருந்து தி.மு.க. விலகியது.

தி.மு.க. அமைச்சர்களான டி.ஆர். பாலு, ஏ.ராஜா ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தங்கள் பதவியை ராஜினாமா செய்தார்கள். அவர்களைப் பின்பற்றி ம.தி.மு.கவின் அமைச்சர்களான கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோரும் பதவி விலகுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இந்தப் பிரச்சினையில் ம.தி.மு.க. தலைவர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை என்று தெரிகிறது.

ஆளும் பாரதிய ஜனதா கூட்டணியில் உள்ள ம.தி.மு.கவுக்கு தற்போதுள்ள முக்கிய பிரச்சினை, வைகோ விவகாரம் மட்டும்தான். எனவே, அவசரப்பட்டு எந்த முடிவும் எடுத்துவிடக்கூடாது என்று ம.தி.மு.க. நிர்வாகிகளில் சிலர் வலியுறுத்தி உள்ளனர்.

இந்நிலையில், ம.தி.மு.க. பொதுசெயலாளர் வைகோவை கட்சியின் மூத்த தலைவர்கள் நேற்றுக் காலை வேலூர் சிறையில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ம.தி. மு.க. மாநில அவைத் தலைவர் எல். கணேசன் செய்தியாளரிடம் கூறியதாவது :-

ம.தி.மு.கவின் மாவட்டச் செயலாளர்கள், அரசியல் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி காலை 10மணிக்கு சென்னையில் ம.தி. மு.க. தலைமை அலுவலகமான தாயகத்தில் நடக்கிறது. இந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சரவையில் இருந்து விலகுவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்று கூறினார். (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பிரம்படி லேன், கொக்குவிலில் 1½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடும் கலட்டி அம்மன் கோயில் வீதியில் 1½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.த.இரட்ணராஜா, லஷ்மி பேக்கரி, மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.

(26190)

1ஸ்ரீxxx தொடரிலக்கமுடைய மொறிஸ் மைனர் 1000 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொன்னம்பலம், 247, K.K.S. வீதி, வல்வெட்டித்துறை. T.P.: 226-3575. (26285)

## தேவை

ரூபா 2,50,000 பெறுமதியான நல்ல கார் (Car) விலைக்குத் தேவை. சகல ஆவணங்களும் இருக்கவேண்டும். தொடர்பு: விளம்பர இல.2131, C/o உதயன், யாழ்ப்பாணம்.

(26255)

## திருமண சேவை

1966, புரட்டாதி கி.பா.17, லிகிதராக U.K.இல் உள்ள அழகிய மணப்பெண்ணுக்கு U.K.இல் மணமகன் தேவை. PRஅற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். நாடுங்கள்: இலகு திருமணசேவை, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

(26277)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்தகணிதம பல ஆண்டுகளாகக் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மிகச்சிறபபாக ஏராளமான பயிற்சிகளுடன் மிகக குறுகிய காலத்தில் முழுப்பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். 20 வருட A/L வினாத்தாள் உட்பட தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: R.பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey.).Dip.in.Ed., 17/1, பிறவுண வீதி, யாழ்ப்பாணம் (தினசரி 3.00 மணிக்குப் பின்பு). (26276)

## இசை வகுப்பு

வயலின் இசை, வாய்ப்பாட்டு என்பன கற்பிக்கப்படும். தொடர்பு: ச.ஜெயச்சந்திரன், 48/8, தேங்காய் மூலை, சொர்ணவடலிப்பிள்ளையார் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (26198)

## கை மாறிவிட்டது

பெண்களுக்கான ஏசியா (Asia) சைக்கிள் 19-12-2003 அன்று கொக்குவில் பகுதியில் கை மாறிவிட்டது. தவறுதலாக மாறி எடுத்துச் சென்றவர்கள் தயவுசெய்து S.நகுலேஸ்வரன், குளங்கரைலேன், கொக்குவில்கிழக்கு, கொக்குவில் என்ற முகவரியாளருடன் தொடர்புகொண்டு தமது சைக்கிளை ஒப்படைத்து மற்ற சைக்கிளை எடுத்துச் செல்லவும்.

(சி-32261)

## டெங்குக் காய்ச்சல் விழிப்புணர்வுக்கு வீதி நாடகக் குழு

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென தென் பகுதியில் உள்ள 'அயகம' பிரதேச சபையின் வீதிநாடகக்குழுவொன்று எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்.வரவுள்ளது.

இக்குழுவினர் டெங்கு காய்ச்சல் தொடர்பான வீதி நாடகம் ஒன்றை குடா நாட்டின் முக்கிய இடங்களில் காண்பிப்பதன் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளனர். (ம-8-185)

## மதுபாரத்
இந்துமகளிர் ஒழுங்கை

**A/L 2006**

**கலைப்பிரிவுக்கான உதயம்**

| | |
|---|---|
| அளவையியல்: | கமல் |
| புவியியல்: | கிரிதரன் |
| தமிழ்: | சிவா. |
| | தமிழிந்திரன் |
| இ.நாகரீகம்: | முகுந்தன் |
| பொருளியல்: | சன் |
| பொது ஆங்கிலம்: | நகேந்திரன் |

ஆரம்பம்:
27-12-2003 Sat. 8 a.m.

தரம் 06 முதல் O/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

(26295)(34-21-14) - நிர்வாகம்.

# MATHS CENTRE
M.M.V. Road - Nelliady

## A/L 2006 கலை, வர்த்தகம்
(எமது வழமையான ஆசிரியர் குழு)

ஆரம்பம்: 05.01.2004 திங்கள்
2.00 p.m. (ப.நே.)

(சி-32209) (24-14)

# SAMACON LTD
## தேவை

எமது நிறுவனத்துக்கு லொறிச் சாரதி, செலுத்துநர் ஆகியோர் தேவைப்படுகின்றனர். 7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:
**விளம்பர இல.2132,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.**

(34-21-14-) (26278)

### ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
## வெதுப்பி உற்பத்தியாளர் தேவை
(பாஸ்)

எமது சங்கத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள வெதுப்பகத்திற்கு வெதுப்பி உற்பத்தியாளர் (பாஸ்) தேவை. வருபவர்கள் பணிஸ், கல்பணிஸ், கேக், ரஸ்க், பிஸ்கட் தயாரிக்கக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். தகுதியானவர்கள் சேவையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் தலைமை அலுவலகத்திற்கு சமுகந்தரவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**பொது முகாமையாளர்**
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை.

(21-14-) (C/32245)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சின்னர் அருணாசலம்

| அன்னை மடியில் | ஆண்டவனடியில் |
|---|---|
| 19-04-1920 | 04-01-2003 |

*அன்புடனே எமை வளர்த்து ஆளாக்கி*
*பண்புடனே வாழவைத்த ஐயாவே!*
*இன்றுடனே ஓராண்டு மறைந்தாலும்*
*உங்கள் முகம்*
*என்றும் எங்கள் நெஞ்சத்தில் நிறைந்திருக்கும்.*

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மீசாலை வடக்கு,
வேம்பிராய், மீசாலை.
(34-21-14)

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(26287)

# நீங்காத நினைவில்
# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 27 - 03 - 1932 |  | 05 - 01 - 2003 |

எமது வாழ்வின் ஒளிவிளக்கு

## திருமதி அன்னப்பிள்ளை சிற்றம்பலம்
திதி: 25.12.2003

எங்கள் அன்புத் தெய்வமே! தாயே!
குடும்பத்தலைவியே! அம்மா!
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம்துயரம்
ஆயிரமாயிரம் பாசங்கள் இருந்தென்ன இப்புவியில்
அம்மா என்றழைக்க நீங்கள் இல்லையே?
எங்களுக்காய் ஒளியீந்து வாழ்ந்த அம்மாவே
மீண்டொருக்கால் வந்து அன்புமொழி கூற மாட்டீர்களா?

என்று எல்லாம்வல்ல கொட்டடியானை வேண்டி என்றும் உங்கள் நினைவுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்:
தொல்புரம் மத்தி, சுழிபுரம். **பொ.சிற்றம்பலம் குடும்பத்தினர்.**

(26274) (26-21-14)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அற்புதராசா கனகாம்பிகை

அரியாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அற்புதராசா கனகாம்பிகை கடந்த (21.12.2003) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் அற்புதராசாவின் அன்பு மனைவியும் இந்துமதி, கோமதி (பிரான்ஸ்), சற்குணம் (மோகன் - பிரான்ஸ்), பரமேஸ்வரன் (ரூபன்), கலைமதி, கிருபாகரன், சுரேஸ்வரன், பரமராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஷ்ணபிள்ளை, ரஞ்சன் (பிரான்ஸ்), ஈஸ்வரி (பிரான்ஸ்), உதயகுமாரி, நாகேந்திரன் (தேவன்), சிவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் குலசேகரம்பிள்ளை, கேதீஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற நேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2003) வியாழக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு 32, கதிரவேலு ஒழுங்கையில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*32, கதிரவேலு லேன், அரியாலை.* (26253)(26-21-14) பிள்ளைகள்.

## இரத்தினராஜா நடராஜா
(முன்னாள் மனேஜர், மனோகரா தியேட்டர்)

ஆறுகால்மடம், வைத்திலிங்கம் வித்தியாலயத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினராஜா நடராஜா 22.12.2003இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினராஜா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் துஷ்யந்தியின் (கொக்குவில் இந்துக்கல்லூரி, மாணவி) பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*வைத்திலிங்க வித்தியாலய லேன்,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.* (26280) (26-21-14)

தகவல்:
N.சிவா *(சிவம்)* (பெறாமகன்).

# IIS இன் இதயங்கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



## தகவல் தொழில்நுட்பத் துறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற BTEC HND தகைமையை IIS நிறுவனம் வழங்குகிறது.

### கணனித்துறையில் பட்டப்படிப்பு

நீங்கள் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? ஆம் எனில் இச்சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். *Edexcel* International நிறுவனத்தின BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்துகொண்டு சர்வதேச தரம்வாய்ந்த B.Sc. (Hons) பட்டப்படிப்பினைத் தொடரமுடியும்.

### சர்வதேச சான்றிதழ்கள்

BTEC HND (Higher National Diploma) என்பது கணனித்துறையில் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சி நெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் *Edexcel* இன் சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். *Edexcel* என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

### வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்

IIS நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.Sc. (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதார ரீதியாக நன்மை அடையமுடியும்.

### தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்

IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

### விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.
மேலதிக விவரங்களுக்கு 021-222 2831 / 021-222 6933 அல்லது இல. 100, மணிக்கூட்டுக்கோபுர வீதியில் அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

**கல்வியாண்டு 2004இற்குரிய பிரிவு | ஜனவரி மாதம் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.**

ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். (வார, வார இறுதி நாள்களில் தனித்தனியே பிரிவுகள் ஆரம்பிக்கப்படும்).

உங்கள் பதிவுகளிற்கு முந்துங்கள்.

## INSTITUTE OF INFORMATICS STUDIES
An *Edexcel* approved HND Centre

# 100, Clock Tower Road, Jaffna. Call as @ 021-222 2831/ 021-222 6933 (C/32258)

### யாழ்.குடாநாட்டில் மக்களுக்கு நன்மையளிக்கும்

# உடனடித் திட்டங்களை இனங்காண்பதற்கு உள்ளூராட்சிச் செயலாளர்களுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு உடனடியாக நன்மையளிக்கக் கூடிய திட்டங்களை அடுத்த ஆண்டு செயற்படுத்துவதற்கு ஏதுவாக விரைவில் இனங்காணுமாறு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் சகல உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களுக்கும் பணித்துள்ளார்.

இவ்வாறு இனங்காணப்படும் திட்டங்களை உடனடியாக நடைமுறைப படுத்துவதன் மூலம் பிரதேச வளர்ச்சியை ஏற்படுத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

இனங்காணப்படும் திட்டங்கள் யாவும் அடுத்த ஆண்டில் நடைமுறைப் படுத்தக் கூடியதாக அமையவேண்டும். இடம்பெயர்ந்த மற்றும் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு உடனடி நன்மையளிக்கக் கூடியதாக அவை இருக்க வேண்டும்.

அத்துடன், இத்திட்டங்கள் பொது மக்கள் சார்ந்த நிறுவனங்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருப்பது அவசியம். 2004ஆம் ஆண்டில் மாகாண சபைகள் அமைச்சினால் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களை இந்தத் திட்டங்களில் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அரச அதிபர் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு வலியுறுத்தியுள்ளார்.

திட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கையை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார். (ம-8-185)

# உடுவில் கோட்டத்தில் பாடசாலைகளை காலை 8 மணிக்கே ஆரம்பிக்க முடிவு

வலிகாமம்.தெற்கு,டிசெ.25

2004ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து உடுவில் கல்விக்கோட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளையும் காலை எட்டுமணிக்கு ஆரம்பிப்பது என உடுவில் கல்விக் கோட்ட அதிபர்கள் தீர்மானித்துள்ளனர்.

கடந்த வருடங்களில் இக்கோட்டத்தில் உள்ள சில பாடசாலைகள் காலை எட்டுமணிக்கும் சில பாடசாலைகள் 8.15 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெற்றுவந்தன.

இவ்வேறுபாட்டால் கல்வி நிர்வாகத்துக்கும் செயற்பாடுகளுக்கும் இடையூறுகள் இருந்து வந்தமை சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து, 2004 ஆம் ஆண்டு சகல பாடசாலைகளையும் காலை எட்டுமணிக்கே ஆரம்பிப்பது என இவர்கள் தீர்மானித்துள்ளனர்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

ஏற்கனவே வலிகாமம் கல்விவலயத்தில் உள்ள தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகள் காலை எட்டு மணிக்கே ஆரம்பமாகி நடைபெற்று வந்த போதிலும் உடுவில் கல்விக் கோட்டத்தில் மட்டும் பாடசாலைகள் ஆரம்பிப்பதில் நேரவேறுபாடுகள் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், உடுவில் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்ற அதற்பராணந்தனுக்கு ஜனவரி மாதம் 10ஆம் திகதி பாராட்டு விழா நடத்துவது எனவும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. (ம-152)



கைதடி நாவற்குழி தெற்கு ஸ்ரீ மகாவிஷ்ணு சனசமூக நிலையத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட 'அம்டா' நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் செல்வி சீ.ஈ.யொசிமி உரையாற்றுவதையும் ஏனைய விருந்தினர்களையும் படத்தில் காணலாம். (ஜ-10)

# சிறுமியை வல்லுறவுக்குட்படுத்துவதற்கு முயன்றதாக இளைஞர் மீது குற்றச்சாட்டு

தெல்லிப்பழை,டிசெ.25

பதினாறு வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றார் என்று கூறப்படும் இளைஞரொருவர் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வலி.வடக்குப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவியான அந்தச் சிறுமியுடன் நட்பு பாராட்டி பழகியபின் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றார் என்று அதே பகுதியைச் சேர்ந்த அந்த இளைஞர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மேற்படி இளைஞரைக் கைதுசெய்த பொலிஸார் அவரை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ம-150)

## கொழும்பு - மட்டு ரயில் சேவை

கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் ஆரம்பமானது. கோட்டை ரயில் நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் காலை 6.05 இற்கு ஒரு ரயிலும், இரவு 8 மணிக்கு ஒரு ரயிலும் மட்டக்களப்பு நோக்கிப் புறப்பட்டன.

கொழும்பு - மட்டக்களப்பு ரயில் பாதையில் இதுவரை வாழைச்சேனை வரை மாத்திரமே ரயில் சேவைகள் நடைபெற்றன.

# கோடா வைத்திருந்த இருவருக்கு ரூபா 1லட்சத்து 95,000 அபராதம்

தெல்லிப்பழை,டிசெ.25

கசிப்பு உற்பத்திக்கான கோடா வைத்திருந்தார்கள் என்னும் குற்றச்சாட்டின் பேரில் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட இருவருக்கு ஒரு லட்சத்து 95ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த மாதம் 23ஆம் திகதி 2 ஆயிரத்து 116கிராம்ஸ் கோடா வைத்திருந்தார் எனும் குற்றச்சாட்டின் பேரில் தெல்லிப்பழை பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட கட்டுவன் வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த முத்து நாகமணி என்ற நபரை விசாரணை செய்த நீதிவான் அவருக்கு 95ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். மேற்படி நபர் குறித்த தொகையைச் செலுத்தாததாலும் எவரும் அவரைப் பிணை எடுக்க முன்வராததாலும் தொடர்ந்து மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று ஆயிரத்து 920 கிராம் கோடாவுடன் சுன்னாகம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு 22ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட குப்பிளான் தெற்கைச் சேர்ந்த பொன்னக்கோன் நாகேந்திரன் எனும் நபருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இத்தொகையைக் கட்டத்தவறின் ஒரு வருட - கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் நீதிவான் எச்சரிகை விடுத்தார். (ம-150)

# புளியங்குளத்தில் சுமை உந்துப்பிரிவு இரண்டு நாள்கள் மூடப்படும்

## ஆயப்பகுதியினர் அறிவிப்பு

வவுனியா, புளியங்குளம் சோதனைச் சாவடியில் செயற்படும் தமது சுமை உந்துப்பிரிவு, எதிர்வரும் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் மூடப்பட்டிருக்கும் என்று தமிழீழ நிதித்துறையின் ஆயப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் பிரிவில் ஆண்டிறுதிப் பணிகள் மேற்கொள்ளவேண்டியிருப்பதாலேயே இப்பிரிவு இருநாள்களும் மூடப்படுகின்றது எனத்தெரிவிக்கப்பட்டது.

எனினும், நாளாந்தம் பயன்படுத்தப்படும் - பழுதடையக்கூடிய - மரக்கறிவகைகள், முட்டை, ஐஸ்கட்டி போன்றவற்றையும் கொண்டுவருவதற்கு மேற்படி திகதிகளில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆயப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை -

இத்தினங்களில் புளியங்குளம் ஊடாக பொதுமக்களின் போக்குவரத்து வழமைபோல் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# தபால் நிலையங்களுக்குத் தொலைபேசி இணைப்புப் பெறுவதில் நிதிப்பிரச்சினை

அச்சுவேலி.டிசெ.25

யாழ்மாவட்டத்தில் உள்ள தபால் நிலையங்கள் பலவும் தொலைபேசி வசதியின்றிச் செயற்படுகின்றன. தொலைபேசி இணைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் இருப்பதாலேயே இந்த நிலை தொடர்வதாகக் கூறப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் அதிவிசேட தரத் தபால் நிலையம் ஒன்றும், 24 முதலாம் தரத் தபால் நிலையங்களும், 26 இரண்டாம் தரத் தபால் நிலையங்களும், 147 உப தபால் நிலையங்களும் செயற்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவற்றில் இதுவரை தொலைபேசி வசதி செய்யப்படவில்லை.

தொலைபேசி இணைப்பை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால், அதற்கான கட்டணத்தைச செலுத்துவதற்கு யாழ்.மாவட்ட தபால திணைக்களத்திடம் நிதி வசதியில்லை எனக் கூறப்படுகின்றது.

யாழ். மாவட்டத் தபால் நிலையங்களுக்குத் தொலைபேசி இணைப்பை மேற்கொள்வதற்கான நிதிவசதி வழங்கப்படாததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ-11)

## மூன்றுநாள் இலவச கணனிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.25

2004 நோக்கி என்னும் தொனிப்பொருளில் அமைந்த 'கணனி விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும்' என்ற இலவசக் கருத்தரங்கு ஒன்றை எஸ்.ரி.பி. கணனி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் மூன்று நாள்கள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. பாடசாலை மாணவர்கள், அரச, தனியார் நிறுவன அலுவலர்கள், பெற்றோர்கள் இதில் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதேசத்துக்கேற்ற கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு நடவடிக்கை வேண்டும்

## கல்விக்கழக யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் கவியன்பன்

யாழ்ப்பாணம்,டிசெ.25

எமது பிரதேசத்திற்கு ஏற்ற கல்விக் கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட அனைவரும் முன்வர வேண்டும்.

- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் கல்வி கழகப் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் கவியன்பன்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் சாந்திகம் உளவளத்துணை நிலையத்தினால் நடத்தப்பட்ட உளவளத்துணைப் பயிற்சி நெறியில் சித்தியடைந்தோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கவியன்பன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

எமது மண்ணில் இடம்பெற்ற யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் உளநெருக்கீடுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களது உள நெருக்கீடுகளை அகற்றவேண்டிய பாரிய பொறுப்பு இந்த மண்ணில் வாழ்கின்ற அனைவருக்கும் உண்டு.

யுத்தத்தினால் மட்டும் தான் எமது மாணவர்கள் உளதாக்கத்திற்கும் நெருக்கீடுகளுக்கும் உள்ளானார்கள் என்று கூறமுடியாது. சமூகத்தின் சில செயற்பாடுகளாலும் இவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

இத்தகைய மாணவர்களினால் பாடசாலை அதிபர்கள் தமது நிர்வாகச் செயற்பாடுகளைச் செம்மையாகச் செய்ய முடியாதுள்ளது. இன்று உளவளத் துணையாளர்களால் பயிற்சி பெற்று வெளியேறும் ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் அமைதியான முறையில கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட வழி செய்து கொடுக்கவேண்டும்.

யாழ்.குடாநாட்டில் பல அமைப்பு



கள் ஏதாவது நிதியீட்டங்களைப் பெற்று மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு பாடசாலைகளில் நுழைகின்றன. எனினும் அவை மாணவர்களுக்கான உளப்பயிற்சியைப் போதிக்கின்றனவே தவிர முழுமையான பயிற்சியை வழங்குவதில்லை.

விலை மதிக்க முடியாத உயிர்களைப் பறிகொடுத்து நாம் பெறப்போகும் தேசம் ஆரோக்கியமானதாக இருக்கவேண்டும். எமது மண்ணிற்குத் தேவையான கல்வியைத்திட்டமிட்டு அதன் மூலம் எமதுமாணவர்கள் பண்பாட்டு விழுமியங்களுடன் வாழ்வதற்கு வழிசமைக்க வேண்டும் - என்றார்.

அங்கு உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தனதுரையில்:-

பல்கலைக்கழகம் என்பது தனியே மாணவர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. அது சமுதாயத்திற்கும் சொந்தமானது. மானிய ஆணைக்குழுவினால் வருடாந்தம் அனுமதி வழங்கப்படும் மாணவர்களைத் தவிர மேலும் பலர் பல வழிகளில் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருகின்றனர். எனவே, பல்கலைக்கழகம் தனியே மாணவர்களுக்கு மட்டும் தான உரியது எனக் கூறிவிடமுடியாது - எனத் தெரிவித்தார்.

உள மருத்துவத்துறைப் பேராசிரியர் தயா சோமசுந்தரம் தனது உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இன்றைய நிலையில் பெரும்பாலான மாணவர்களின் உளப்பாதிப்புக்கு அவர்களது குடும்பங்களில் காணப்படும் பிணக்குகளும் சமூகத்தில் காணப்படும் வேற்றுமைகளுமே காரணம்.

குடாநாட்டு மாணவர்களின் உளப்பாதிப்புக்கான காரணங்களை ஆராய்ந்தபோது இது தெரியவந்தது. குடும்பத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளினால் உள நெருக்கடிகளுக்கு உள்ளாகும் மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்தத் தவறுகின்றனர். இவ்வாறான பாதிப்புக்குள்ளாகும் மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்கு நாம் முன்வரவேண்டும். இத்தகைய மாணவர்களைத் தண்டிக்கும் போது அவர்களுக்குரிய உண்மை நிலையை இனங்கண்டு அதற்கேற்ற வகையில் அவர்களைக் கையாள வேண்டும் - என்றார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், சாந்திகம் உளவளத்துணை நிலையத்தின் தலைவர் என்.கனகரத்தினம், வடக்கு - கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ம-5-7-86)

# டெங்கு காய்ச்சல் பரவாதிருக்க வலி.தெற்கில் விழிப்புணர்வு!

வலிகாமம்தெற்கு,டிசெ.25

டெங்கு காய்ச்சல் பரவாதிருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும், சுகாதார குடும்பநல உத்தியோகத்தர்களும் வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.

தத்தம் பகுதிகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தியும், பிரசாரங்களை மேற்கொண்டும் நீர் தேங்கி நின்று நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களை சிரமதானம் மூலம் அழித்தும் தடுப்பு நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

சுன்னாகம் நகரபொதுச்சுகாதாரப் பரிசோதகர் கே.பத்மகுமார் தலைமையில் குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் இணைந்து உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள நலநோம்பு நிலைய சுற்றாடலில் கடந்த வாரம் சிரமதானப் பணியொன்றினை மேற்கொண்டனர்.

அப்பகுதியில் உள்ள பொது மக்களும் இவர்களுடன் இணைந்து நீர் தேங்கி நிற்கக்கூடிய பேணிகள், தகரங்கள், சிரட்டைகள், பொலித்தீன் உறைகள் என்பவற்றை அப்புறப்படுத்தினர். பொதுசுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் விழிப்புணர்வு கருத்தரங்கொன்றும் நடத்தப்பட்டது.

தொடர்ந்து இப்பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களாலும் விழிப்புணர்வு பிரசாரங்கள், கருத்தரங்குகள், சிரமதானங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-152)

# வாழ்த்துகின்றோம்



வட்டு.வடக்கு பிரமனாச்சி தோட்டக் கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான முதல்வரும், தேசிய உப்புக் கூட்டுத்தாபன சிரேஷ்ட உத்தியோகத்தரும், சங்கானை ப.நோ.கூ. சங்கக் கிளைக் குழுத் தலைவருமாகிய

## திரு.புண்ணியமூர்த்தி ஸ்ரீகாந்தன்

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு அவரை வாழ்த்தி மகிழ்வடைகிறோம். இவரின் சமய, சமூகப் பணிகள் தொடரவும், சிறக்கவும் கற்பகன் திருவடிகளைப் போற்றி வணங்குகின்றோம்.

வட்டு.வடக்கு, சித்தங்கேணி. (26251) (25-14) - கற்பகன் மீளா அடியார்கள்.


# இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

## சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382)
AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-31677)


# ஓர் ஆண்டு நினைவாக

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 29 - 11 - 1928 | 05 - 01 - 2003 |



## திருமதி முருகேசு கனகேஸ்வரி அவர்கள்

திதி: 25.12.2003 (பூர்வபக்க திருதியை)

சிந்தனையால் உம்நினைவு சிதறிக்கிடக்குதம்மா!
முந்தைநாள் நினைவுகள் முழுமையாய் நிறைந்திருக்க
கந்தனருள் கடாட்சம்சேர் கனகேஸ்வரி அம்மா!
வந்தனைகள் கூறியுமை வணங்குகிறோம் இந்நாளில்.

இல.7, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவாக:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(26247) (25-14)

# அனுமதியின்றி மதுபானம் விற்ற ஐவர் சிக்கினர்

ஊர்காவற்துறை,டிசெ.25

அனலைதீவில் அனுமதியின்றி வீடுகளில் வைத்து மதுபானம் விற்பனை செய்தவர்களில் ஐவர் ஊர்காவற்றுறை பொலீஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

அனலைதீவில் பல்வேறு இடங்களிலும் அனுமதியின்றி பல வீடுகளில் மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால் அங்கு குற்றச் செயல்களும் சமூகச்சீரழிவு நடவடிக்கைகளும் அதிகரிப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. மதுபானம் விற்பனை செய்யப்படும் இடங்களுக்கு அருகில வசிப்பவர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்தனர்.

இது தொடர்பாக ஊர்காவற்துறை பொலீஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்பவர்கள் எனக் கருதப்படுவோரது வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் பெருமளவு மதுபான வகைகள் பொலீஸாரினால் கைபபற்றப்பட்டன.

இவர்களுக்கெதிராக பொலீஸாரினால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-16)

# சிவத்தமிழ் செல்வியின் பிறந்த நாள் அறக்கொடை விழா

யாழ்ப்பாணம்,டிசெ.25

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் 7ஆம திகதி காலை 9.30மணிக்கு ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், யாழ். தேசிய கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன், வலிகாமம் கல்விவலய உதவிக கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோரும் வாழ்த்துரையை ஈழத்தமிழர் கழகத் தலைவா வை.ஈழலிங்கமும் நிகழ்த்துவர்.

பிரதம விருந்தினராக கலாநிதி க.சிவலிங்கராசாவும் சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிவத்தமிழ்ச் செல்வி எழுதிய 'அறிவொளி காட்டிய சான்றோர் வரிசையில்' என்னும் நூல் வெளியீடும் நிகழ்வில் இடம்பெறும்.

(ம-10)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 06 - 1922 | 05 - 01 - 2003 |



## திருமதி தையல்நாயகி ஐயாத்துரை

திதி:25-12-2003

ஓராண்டு பறந்து ஓடிவிட்டதே - ஆனால்
பசுமை நினைவுகள் மனதை வாட்டுகின்றனவே!
மறவாத நினைவொன்று மனதிலே நாம் வரைந்து
தவறாமல் உங்களையே தினம் தினம் எண்ணுகிறோம்
கதியேதுமின்றி நாம் கலங்கியே தவிக்கின்றோம்
கண்ணீரும் வற்றித் துடியாய்த் துடிக்கின்றோம்
நிதியிருந்தென்ன இன்று நீயில்லாது எமது இல்லம்
ஒளியிழந்து போயிற்றே பெறுக நீ சாந்தி!

சரசாலை தெற்கு.
சாவகச்சேரி.

(26201) (34-14-25)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஐந்தாவது ஆண்டு நினைவு

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 - 02 - 1919 | 21 - 12 - 1998 |



அமரர் பிரம்மஸ்ரீ

## சாமிநாதக்குருக்கள் பஞ்சாட்சரக் குருக்கள்

திதி: திருதியை

சைவத் தமிழ் மணம் பரவ தரணியில் தோன்றி
சைவந் தழைத்தோங்க சைவப் பரம்பரையில் வந்த
எம் இனிய குலக்குன்றே பஞ்சாட்சரக் குருக்கள் ஐயாவே!
எம்மில் ஒருவராக நீர் இருப்பீர் என இருந்தோம்
எம்மை விட்டு நீர் சென்று ஆண்டுகள் ஐந்தும் ஆச்சே
ஏங்குகின்றோம் கலங்குகின்றோம் உம்மை நினைத்து
ஏற்ற இறக்கமின்றி உம்பணி தொடர்ந்தே செய்ய
எம்பெருமானை வேண்டி ஆறுதலடைகின்றோம்.

சந்தையடி
(இலங்கை வங்கி அருகில்),
மானிப்பாய்.

(26211) (21-14-25)

பிரம்மஸ்ரீ
ப.விநாயகமூர்த்திக்குருக்கள்
குடும்பத்தினர்.

# நினைவழியா முதலாம் வருடம்...

பிறப்பு 01.10.1982 இறப்பு நத்தார் 2002



மன்னவா,
உன் வாசல் தேடி
ஓடி நான் வந்தேன்
உன் முக தரிசனம்
கேட்டேன்,
உன்பதம் அமர்ந்து
உன்முகம் பார்த்து
உன்மொழி
கேட்டால்
போதுமே!

செல்வி சோபியா ஜொய்சி மகேந்திரன்

பசுமையான நினைவுகளுடன்:
மகேந்திரன் & பற்றிமா,
யூட் சுதர்சன் & ஜெமி,
அன்ரன், சசி.

42, இராஜ வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(26247) UTHAYAN Graphics

# 47 ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 - 05 - 1922 | 09 - 11 - 2003 |



## வைரமுத்து சண்முகம்

பாசத்தின் வித்தாய் பண்பின் உறைவிடமாய்
பார்போற்றும் உத்தமராய் வாழ்ந்து
கண்ணை இமை காப்பதுபோல
எமைக் காத்து வளர்த்து நம் வாழ்விற்கு
ஒளியூட்டிய எம் தந்தையே!
அன்புத் தெய்வத்தின்
*ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து உடன்வந்து உதவி செய்தவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தபால் மூலம் ஆறுதல் கூறிய உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர், நண்பர்கள் மற்றும் நவாலி முருகானந்தா சனசமூக இளைஞர்கள், வடலியடைப்பு கலைவாணி இளைஞர்கள், இறுதியாத்திரையில் கலந்துகொண்டு பலவகையிலும் உதவிபுரிந்தவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (25.12.2003) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

(26233) (25-14)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

லஷ்சுமி சினிமா இணுவில்
நத்தார் வெளியீடு .
சிம்ரன் மற்றும் புதுமுகங்கள் நடித்த
கோவில் பட்டி வீரலட்சுமி (ரீகல்)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பி.நே.)
(26264)(32)

லிபேட்டி அச்சுவேலி

விஜய், ஜோதிகா, நடித்த
திருமலை (ரீகல்)
காட்சிநேரம்: 10.30,2.00, 6.30. (பி.நே.)


அனைவருக்கும் எமது நத்தார்–புது வருட நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்
நடத்தும
ஒளிவிழா
28.12.2003 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.00 மணி
மறைக்கல்வி நடுநிலைய மண்டபம்
நிகழ்ச்சிகள்
நாடகம், நடனங்கள், இசைநிகழ்ச்சி.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திருமறைக் கலாமன்றம். 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(C31953)(32-12-16)

உளம் நிறைந்த கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துக்கள்
இன்று வாழ்த்துச் சொல்ல ஒரு நிமிடம் உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புக்கள் இலவசம்.......
எமது மற்றும் பல சேவைகள்...
★ அரைமணிநேரத்தில் கறுப்பு வெள்ளை, கலர் படங்கள்.
★ கவரிடுதல், போட்டோ பிரதி செய்தல்.
★ கணனி மூலமான புதுப்பித்தல், மெருகூட்டல்.
★ குறைந்த கட்டண தொலைபேசி அழைப்புக்கள்.
★ போட்டோ அல்பம் புதிய வகைகளில் தயாரித்தல்.
இன்று முதல் வெளிநாட்டு அழைப்பு -8/=
லைவ் ஸ்ருடியோ & தொலைத்தொடர்பகம்
இல. 9, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(நீதிமன்றம், OLR தேவாலயம் அருகில்)
T.P.: 021 222 6334, 0777 570 400
(26270)(32-12-16)

இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்
இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல்பருமன், உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய் பிரச்சினை, தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.
ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :
Dr.நவநீதன DYNS.SMP.NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
பெருமாள் கோவிலடி வீதி,
யாழ்.பயனியர் விடுதி
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
யோகாசனப் பயிற்சி வகுப்புக்களுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன.
முகாம் நடைபெறும் நாள்கள்:
டிசெம்பர் 21 ஆம் திகதிமுதல் 30ஆம் திகதிவரை.
(26167) (32-12-16)


## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

நாவற்குளி, கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சீருடைகள் மற்றும் கற்றல் உபகரணங்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இதேவேளை சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வடபிராந்திய சாயி சமித்தியின் இணைப்புக் குழுவினர் அப்பியாசப் புத்தகங்களை நேற்றுமுன்தினம் செவ்வாயன்று வழங்கினர். (எ-117)


SHAMROCK
J/ஈச்சமோட்டை வீதி
A/L 2005 - Econ.
தேசிய வருமானம்
ஆரம்பம் : 27th Sat. 12.30
Mr.விக்கி, B.A.(Hons)(Econ.Spl.)
★ Acc.: Mr.தவா, B.Com.(Hons)(Acc.Spl.)
★ Com.: Mr.பசில், B.B.A.
(26294)

CHEMISTRY
Group Classes
G.VijayaKumar (B.Sc.)
2005 A/L : Organic
Sat., Sun.:
7.00-8.30 p.m.
ஆரம்பம் : 27.12.2003
2006 A/L : Basic
Mon., Thu., Fri.:
6.15 - 7.30 a.m.
ஆரம்பம் : 29.12.2003
இல:42/3 A, அம்மன் வீதி, கந்தர்மடம்.
(26273)

புதிய வீடியோ CD வெளியீடு
★ ஜூட்
★ தத்தித்தாவுது மனசு
★ சக்தி சுமங்கலி
(பிரதிகள் உடன் பெறலாம்)
புதிய பட ஸ்ரிக்கர்களும்
புதிய (Org) பட சீடிக்களும்
விற்பனைக்கு உண்டு.
ப்ளாஷ் சீடி ஹவுஸ்
640, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
0777-162349
(26311)(12)

நிர்மலா சங்கானை
MGR நினைவு தினத்தையொட்டி விசேட காட்சியாகக் காண்பிக்கப்படுகின்றது.
MGR இருவேடம், ஜெயலலிதா நடிக்க
குடியிருந்த கோயில் (ரீகல்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
JOHNNY ENGLISH
இரவு 8.45 (பி.நே.)

ராஜா யாழ்ப்பாணம்
கருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடிக்க
(ரீகல்)
காட்சிகள்:
10.30,2.30,6.30,9.30 (பி.நே.)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.


நீங்கள் அழகுடன் மிளிர விரும்புகிறீர்களா?
இதோ உங்களுக்காகவே
அழகுக் கலை வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன!

எதிர்வரும் புதுவருடத்தில்
ஜனவரி 5ஆம் திகதி
காலை 9.00 மணிக்கு
ஆரம்பம்.
முதலில் சேரும் 100 மாணவிகளுக்கு விசேட சலுகை

அழகுக் கலை பயிற்சி நெறிகள் | டிப்ளோமா வகுப்பு | தலையலங்காரம்
இந்து-கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம் | FACIAL செயன்முறைகள் இன்னும் பல
Eye Brow arching | உத்தியோகத்தர்களுக்கான மாலை நேர வகுப்புகள்
கூடிய நேர செய்முறைப் பயிற்சி | குறைந்த கட்டணம்
சகல வகையான மணப்பெண் அலங்கரிப்பு Servicces களும் செய்து கொள்ளலாம்
சாதாரண ஒப்பனை (Normal Makeup) களும் செய்து கொள்ளலாம்
பெண்களுக்கான உடற்பயிற்சி வகுப்பும் நடைபெறுகிறது.
உங்களுக்கு ஏற்ற நேரத்தில் வகுப்புகள் நடைபெறும் ஆதலால் அனைவரும் தவறாது பங்குபற்றுங்கள்.
மேலதிக விவரங்களுக்கு:- R.T.R BEAUTY TRAINING CENTRE,
☎ 0777-677079 பிரதான வீதி, மானிப்பாய்.
மேலதிக விவரங்களுக்கு மானிப்பாய் றோட்டரக் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(தி-32272)(30)


# மரண அறிவித்தல்கள்

## அருளானந்தன் புவனேசன்

(தொழிற்சட்ட ஆலோசகரும் நீதிமன்ற வழக்குரைஞரும்)

யாழ்ப்பாணம், கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தன் புவனேசன் நேற்று (24.12.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் யசோதராவின் அன்புக் கணவரும், ஊர்மிலா (N.S.B. - வெள்ளவத்தை), ஷர்மிலா (பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அருளானந்தன் - செல்லம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற இராசையா - வாலாம்பிகை தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதி (டென்மார்க்), ஆரூரன் (லண்டன்), காலஞ்சென்ற உலகநாயகி மற்றும் நீலகண்டன் (நியாப், கிளிநொச்சி), லீலாவதி (கல்முனை), திருமதி அ.குணபாலா (றோயல் வைத்தியசாலை, வெள்ளவத்தை), குமரகுருபரன் (கனடா), சதானந்தன் (திருநெல்வேலி), அரன்மகன் (கல்முனை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr.சி.அசோக்குமார் (தேசிய வைத்தியசாலை - கொழும்பு), க.ரதீதரன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநந்த், அஷ்மித்தா ஆகியோரின் அன்பு அம்மப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.12.2003) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் கொழும்பு, களுபோவில ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஜெயரத்ன மலர்ச்சாலையிலிருந்து தகனக்கிரியைக்காக கொஹுவலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*20A, கிரீடா மாவத்தை,*
*ஸ்ரீ சரணங்கரா வீதி,*
*தெகிவளை.*
*T.P.: 2732013*

தகவல்:
பு.யசோதரா (மனைவி)
01, கோணாவளை ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு.

(C-32280)(12-16-30)

## திருமதி அந்தோனியாப்பிள்ளை யோசேப்

(இளவாலை)

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனியாப்பிள்ளை யோசேப் அவர்கள் நேற்று (24.12.2003) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை யோசேப் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை சுவக்கீனா தம்பதியரின் அன்பு மகளும் மேரி றீற்றா, லூட்ஸ் மேரிதிரேஸ், மேரிலெற்றீசியா (சுவிஸ்), பிரான்ஸிஸ் குணரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, மனுவேற்பிள்ளை (முன்னாள் இலிகிதர், GRINDA LAY'S BANK), பிலிப் இராசநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும் யேசுரட்ணம், இரட்ணராஜா (சுவிஸ்), யூடின் றஜனி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஒஸ்மன் ஜெறி (யாழ். பல்கலைக்கழகம்), டன்ஸிக்கா (யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி), ஸொயலின், மொறின் (மாணவிகள், யா/தி.கு.க.மடம்), எவன்ஸ்ரன், சுவிஸில் வசிக்கும் சாம்ஸன், ரிபேட்சன், ஷர்சினி, எல்மன், ஸ்ரெவ்வானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.*

தகவல்:
மேரிறீற்றா யேசுரட்ணம்-
(மகள்)

(26298)(12-16)

## திருமதி கதிரவேலு மாணிக்கம்

சுன்னாகம், தில்லைக்கட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு மாணிக்கம் அவர்கள் நேற்று (24.12.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும் கருணைநாயகம் (இயக்குநர், கருணை கல்வி நிலையம்/கணித ஆசிரியரும்) அவர்களின் அன்புத் தாயாரும் பானுமதி (ஆசிரியை) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2003) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தில்லைக்கட்டி,*
*சுன்னாகம்.*

தகவல்:
க.கருணைநாயகம்.
(மகன்)

(C-32278)(12-16)

## சூசை யோசேப்

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் இளவாலை, சென். யூட்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சூசை யோசேப் அவர்கள் நேற்று (24.12.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லூர்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சூசை-ஆனாசி தம்பதிகளின் அன்பு மகனும் சேவியர் (தெ.ப.கூ. சங்கம்-பண்டத்தரிப்பு), காலஞ்சென்ற அல்பிறட், சாந்தினி (இத்தாலி), மாலினி (ஆசிரியை, றோ.க.த. ஆண்கள் பாடசாலை, இளவாலை), றோகினி, யூட்ஸ்ரீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மக்ஷி (இத்தாலி), மேசி (ஆசிரியை, தி.கு.கன்னியர்மடம், இளவாலை), மோகன் (தெ.ப.கூ.சங்கம்-கிளிநொச்சி) ஆகியோரின் மாமனாரும் ஜேனுஷா, ஜினேஸ்டன் (இத்தாலி), மிதுர்ஷன், எமிலினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (25.12.2003) வியாழக்கிழமை பிற்பகல் 5மணிக்கு புனித யூதாதேயு சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சென்.யூட்ஸ்,*
*இளவாலை.*

தகவல்:
சேவியர்(மகன்),
மாலினி (மகள்).

(C-32279)(12-16)

## சண்முகம் தம்பிமுத்து

காரைநகர், மெலிஞ்சிமோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் தம்பிமுத்து நேற்று (24.12.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், இரத்தினசிங்கத்தின் (புதுறோட் ரஞ்சன் என்ரப்பிறைஸ் - உரிமையாளர்) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற றஞ்சினி மற்றும் கலாசோதி ஆகியோரின் அன்பு மாமனாரும், கலாரஞ்சன், பாலரஞ்சன், சுகன்யா, கிரிசாந்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சின்னாலடியில் உள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சின்னாலடி,*
*காரைநகர்.*

தகவல்:
த.இரத்தினசிங்கம்.
(மகன்)(TRK)

(26314) (36-12-16)

# நீதிபதியின் இடமாற்றத்தை அடுத்து நெடுமாறனின் விடுதலையில் தாமதம்

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பிணையில் விடுதலையாவதில் புதிய சிக்கல் எழுந்துள்ளது. அவரது பிணை மனு மீது நேற்றுத் தீர்ப்பளிக்க இருந்த நீதிபதி திடீரென இடமாற்றப்பட்டுவிட்டார்.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினார் என்ற குற்றத்தின் பேரில் நெடுமாறன் மீது 'பொடா' சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கடந்த 15 மாதகாலமாக அவர் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் 'பொடா' வழக்கின் சென்னை மேல் நீதிமன்றம் நெடுமாறனுக்கு பிணை வழங்கியது. ஆனால், திண்டுக்கல் மற்றும் ஆலந்தூர் நீதிமன்றங்களில் நெடுமாறன் மீதான வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அவர் விடுவிக்கப்படவில்லை.

இதைத் தொடர்ந்து இரு நீதிமன்றங்களிலும் பிணை கோரி நெடுமாறன் சார்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதன் பிரகாரம் திண்டுக்கல் நீதிமன்றத்தில் நெடுமாறனுக்கு பிணை கொடுக்கப்பட்டது. ஆனால், ஆலந்தூர் நீதிமன்றில் நெடுமாறனின் பிணை மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம்தான் முடிவடைந்தது. நேற்று தீர்ப்பு வழங்கப்படும் என நீதிபதி ஆனந்தன் அறிவித்திருந்தார்.

அதன்படி நேற்றுக்காலை நெடுமாறனின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். ஆனால், நீதிபதி ஆனந்தன் மன்றுக்கு வரவில்லை.

நீதிபதி ஆனந்தன், மேலதிக மாஜிஸ்திரேட்டாக 48 நாள்கள் பயிற்சியில் ஆலந்தூர் நீதிமன்றுக்கு வந்தவர் என்றும் -

பயிற்சிக் காலம் முடிவடைவதற்குள் அவர் நேற்று இடம்மாற்றப்பட்டுவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிணை தொடர்பாக பூந்தமல்லி 'பொடா' நீதிமன்றத்தை மீண்டும் அணுகுமாறு நெடுமாறன் தரப்பு சட்டத்தரணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனால், நெடுமாறன் சிறையிலிருந்து வெளியே வருவதில் புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. 'பொடா' நீதிமன்றத்தில் நெடுமாறனின் பிணை மனு ஏற்கனவே நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



யாழ். செயலகத்தில் நேற்று நடந்த சந்திப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் யாழ். படைத்தளபதி

## மூன்றாம் தரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நோர்வே ஏற்பாட்டாளர்கள் ஊடாகவே ஏற்கனவே தான் கடிதங்கள் அனுப்பினார் எனவும் தற்பொழுது அவர்கள் பேச்சு ஏற்பாடுகளில் இருந்து விலகிக்கொண்டுள்ளதால் அவ்வாறு செய்வது சிரமமாக இருப்பதாகவும் கூறிய அமைச்சர் ஹக்கீம் எவ்வாறாயினும் இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை விரிவாக முன் வைக்கத் தாம் உத்தேசித்துள்ளார் எனவும் - தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டறிக்கையின் பிரகாரம் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களை அவர்கள் மீண்டும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்த வசதி செய்து கொடுப்பது என்ற அம்சம் தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் சில சுற்றுப் பேச்சுக்கள் நடந்தன. இது தொடர்பாக சில ஆவணங்கள் திரட்டப்பட்டு பரிசீலிக்கப்பட்டு அவற்றில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளபோதிலும், முஸ்லிம்களிடம் இருந்து வரி அறவிடுதல், முஸ்லிம்களின் பாது காப்பு என்பன தொடர்பில் குறிப்பிடத் தக்கதாக மாற்றம் எதுவுமே இடம்பெறவில்லை எனவும் அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

எவ்வாறாயினும், மிகவும் நல்லெண்ணத்துடன் அந்தக் கூட்டறிக்கை தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளதாலும் இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மூலமாக இது தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பிரபல்யப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும், இரு பெரும் சமூகங்கள் அதில் சம்பந்தப்பட்டுள்ளதாலும் அதன் முக்கியத்துவத்தை எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிடமுடியாது. தமிழ் - முஸ்லிம்களின் உறவைப் பொறுத்தவரை அது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு - என்று அமைச்சர் ஹக்கீம் நம்பிக்கை தெரிவித்தார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தலைக்குக் கிடைக்கப்பெற்ற அமைச்சு மூலம் மக்களுக்கு அளப்பெரிய சேவையாற்றுகின்ற இந்துகலாசார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு

**தியாகராசா மகேஸ்வரன்**

அவர்களையும்

அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற காரைநகரைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட வ.பி.போ. சபை சாலை பரிசோதகரும் தேசிய ஊழியர் சங்க உப தலைவரும் சிவகௌரி ச.ச.நிலைய முன்னாள் தலைவரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய

உயர்திரு. **செல்வரத்தினம் செல்வராசா**

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்



அராலிவெட்டி மேற்கு,
பத்துப்பனையடி.
(சி-3223) (22-16-18)

கே.எஸ்.சீலன், ஆர்.ஆர்.தாசன்.

## மாபெரும் இலவச கணனிக் கருத்தரங்கு

கணனி விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்

யாருக்கு

- பாடசாலை மாணவர்கள் (O/L & A/L)
- அரச தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள்.
- பெற்றோர்கள்.

காலம் 27/12/2003 - 29/12/2003

கணனிப் பட்டதாரிகளுடன்கூடிய அனுபவம் மிக்க விரிவுரையாளர்களின் இணைந்த சேவையின் கீழ் 3 நாட்கள் நிகழ்வுகள்.

**இன்றே உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்**

பதிவுகளிற்கு

73, Palaly Road, Kandharmadam.
Branch: Sankathanai, Chavakachcheri
T.P: 2222674

STP
Your Partner in IT Solution


ஆனால், சமாதான... (continued)

## சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஜனவரி மாத இறுதியில் இலங்கைக்கு வரவிருக்கையிலேயே கொழும்பில் கூடுவதென அந் நாடுகளின் பிரதிநிதிகள் தீர்மானித்திருக்கின்றனர்.

ஜனாதிபதிக்கும், அரசுக்குமிடையே ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு எதுவும் தென்படாத நிலையில் வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான நிதியை இலங்கை அரசின் தலையீடு இல்லாமல் நேரடியாக விடுதலைப் புலிகளுக்கு வழங்குமாறு சர்வதேச சமூகத்திடம் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கோருவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

புலிகள் இயக்கம் இவ்வாறான ஒரு கோரிக்கையை முன்வைத்தால் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதும் இம்மாநாட்டின் மற்றொரு நோக்கம் எனவும் கூறப்படுகிறது.

இதற்கிடையே, புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வெளியிட்டுவரும் கருத்துகளின் படி அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான அரசியல் நெருக்கடியைத் தீர்க்க புலிகள் இரண்டு மாற்று யோசனைகளை முன் வைத்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

சமாதான முயற்சியை முன்னெடுத்துச்செல்லும் தரப்புக்கு பாதுகாப்பு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பது ஒரு யோசனையாகும்.

பொதுத்தேர்தலில் தென்பகுதி மக்களின் ஆணையைப் பெறும் எந்த ஒரு தலைவருடனும் சமாதான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் தயார் என்பது இரண்டாவது யோசனையாகும்.

ஜனாதிபதிக்கும், அரசுக்குமிடையிலான நெருக்கடியைத்தீர்க்க இந்த மாற்று யோசனைகளில் ஒன்றை தென்பகுதித் தலைவர்கள் கடைப்பிடிக்க முன்வராவிடின் மத்திய அரசின் தலையீடு இன்றி வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான வெளிநாட்டு உதவிகள் தமக்கு நேரடியாக வழங்கப்படவேண்டும் என்று புலிகள் இயக்கம் தனது இன்றைய நிலைப்பாட்டை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்.வந்த...

(முதலாம் பக்கத் தொடச்சி)

முகமாலை வரை வந்த பயணிகள் இதனால் பெரும் ஏமாற்றமடைந்தனர். நூற்றுக்கணக்கான பயணிகளும் வாகனங்களும் முகமாலையில் தரிக்க நேர்ந்தது.

புலிகள் தங்களின் சோதனை நிலையங்கள் திறந்திருக்கும் நேரத்தை முன்கூட்டியே அறிவித்திருந்தபோதிலும் இராணுவத்தரப்பில் இருந்து தமது நிலைப்பாடு தொடர்பாக பொது மக்களுக்கு எந்த அறிவித்தலும் விடுக்கப்பட்டிருக்கவில்லை.

யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் நேற்று மாலை 6.30மணிவரை மட்டுமே முகமாலை இராணுவச் சோதனை நிலையம் ஊடாக வர அனுமதிக்கப்பட்டனர். 6.30 மணிக்குப் பின்னர் வந்த பயணிகள் இப்பால் வர முடியாது பளைப் பகுதியில் தங்கள் இரவுப் பொழுதைக் கழிக்க நேர்ந்தது.

இதனால் அவர்கள் கடும் விசனமடைந்து காணப்பட்டனர்.

வவுனியாவில் இருந்து நேற்று மாலை ஓமந்தைக்கு வந்த பயணிகள் அங்குள்ள இராணுவ சோதனை நிலையங்கள் ஊடாக இரவு 9.30 மணிவரை அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பிரசார நடவடிக்கைகள், குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று ஆரம்பமாகின.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரும் தமிழீழ சுகாதார சேவையினரும் இணைந்து நடத்தும் இந்த விழிப்புணர்வுப் பிரசாரத்தில் நேற்றைய தினம் சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான தொண்டர்கள் ஈடுபட்டனர்.

வீடு வீடாகச் செல்லும் இந்தத் தொண்டர்கள், எய்ட்ஸ் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததுடன், பொது இடங்களில் படக் காட்சிகளையும் காண்பித்தனர். அதே வேளை, எய்ட்ஸ் சம்பந்தமான பூரண அறிவு அற்றவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் தொண்டர்கள் பதில் அளித்து சந்தேகங்களைத் தீர்த்து வைத்தனர்.

தென்மராட்சியில் நேற்று மட்டும் ஆயிரத்து 714 குடும்பங்களுடன் எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு பகிரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சிப் பிரதேசத்தில் எய்ட்ஸ் நோய்த்தடுப்பு வாசகங்கள் கொண்ட பெரிய அளவிலான சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டிருந்ததுடன், ஒலிபெருக்கிகளில் இதுவிடயமாகப் பரப்புரையும் நடைபெற்றது.

இதேவேளை -

மேற்படி எழுச்சிவாரத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், தேசிய எழுச்சிப் பேரவை என்பன பத்திரிகை அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

(எ-86-117-173)

## அரசினர் - புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத் தீர்வுகாண வேண்டியது அவசியம். இந்த விடயத்தில் தனி ஒரு தரப்பாய் இலக்கை அடையமுடியாது. அரசும், விடுதலைப் புலிகளும், படையினரும் இணைந்து செயற்படுவதன் மூலமே அது சாத்தியமாகும். அந்த வகையில், எமது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

வவுனியாவில் நான் பணிபுரிந்த சமயம் இந்த விடயத்தில் வெற்றி கண்டுள்ளேன். அரச அதிபரும், விடுதலைப் புலிகளும் என்னுடன் நம்பிக்கையுடன் இணைந்து செயற்பட்டதால், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. அதேபோன்ற நிலை இங்கும் ஏற்படும் என நம்புகின்றேன்.

நான் 24மணி நேரமும் பணிபுரிவேன். மக்களின் பிரச்சினை குறித்து எவரும் என்னுடன் எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளமுடியும். பிரச்சினையின் தன்மையைப் பொறுத்து அந்த இடத்தில் பிரசன்னமாகி தீர்வு கிட்ட உதவுவேன்.

குடாநாட்டில் பணிபுரியும் ஒவ்வொரு பிரிவு தளபதிகளுடனும் கலந்துரையாடியுள்ளேன். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அந்தப் பிரதேச தளபதிகளுடன் கலந்துரையாடித் தீர்வுகளைக் காண வழி செய்வேன்.

கடந்த காலங்களில் மக்களுக்கும் படையினருக்கும் இடையில் பல தடவைகள் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளன. எல்லாப் படையினரும் ஒரே தன்மையுடையவர்களாகவும், குணம் படைத்தவர்களாகவும் இருக்க முடியாது. அத்தகைய காரணங்களினால் தான் இருபகுதியினருக்கும் இடையில் அடிக்கடி பிணக்குகள் ஏற்படுகின்றன. எதிர்காலத்தில் இந்த நிலை ஏற்படுவதனைத் தவிர்க்க உரிய நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான உணர்வுகள் அனைத்தையும் மறந்து எதிர்காலத்தில் ஒற்றுமையுடனும், புரிந்துணர்வுடனும் வாழ்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

**ஒப்பந்த பயன் கிட்டவில்லை**

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்பட்ட சமாதான சூழ்நிலையில் மக்களுக்கு பெரும் பயன் கிடைத்திருக்கவேண்டும். ஆனால், இப்பகுதியில் அத்தகையதொரு நிலை ஏற்படவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

நான், யாழ். மாவட்ட படைகளின் புதிய தளபதியாக பதவி ஏற்றதும் இங்குள்ள சகல இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளையும் அழைத்து மக்களின் இயல்பு வாழ்வைத் தோற்றுவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மக்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளேன். அவர்களுக்கு தம்மாலான பூரண ஒத்துழைப்பை வழங்க மக்களும் முன்வரவேண்டும்.

மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நான் முயற்சி செய்து வருகின்றேன். அந்த வகையில் அரச அதிகாரிகளை அடிக்கடி சந்திக்கவிருக்கின்றேன்.

இன்று நடைபெற்றதுபோல் சந்திப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெறும்.

- இவ்வாறு தளபதி கூறினார்.

(ஐ-3-5)

## இன்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றப்படும் - என்று அந்த செஞ்சிலுவை அதிகாரி தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தை ஒட்டி சோதனைச் சாவடிகள் ஊடான போக்குவரத்து நேரத்தை விடுதலைப் புலிகள் அதிகரித்திருந்தபோதும், ஸ்ரீலங்காப் படையினர் அதனைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' குற்றஞ்சாட்டியது.

தங்கள் சோதனைச் சாவடிகளை இரவு 9.30 மணிவரை திறந்துவைப்பது என்ற முடிவை மல்லாவியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணிமனைக்கு நேற்றுமுன்தினமே அறிவித்துவிட்டதாக புலிகளின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார். (ஐ)

## யாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு கட்டியெழுப்பிய அனைத்து விடயங்களும், ஜனாதிபதியின் ஒரு கையொப்பத்தில் - நவம்பர் 4ஆம் திகதியுடன் - அழிந்துபோய்விட்டன இதுதான் இன்று எமக்கு ஏற்பட்டுள்ள மிக மோசமான நிலை.

இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதே எமக்கு தற்போதைய தேவையாகும்.

நாட்டின் அதிகாரங்கள் யாரிடம் இருக்கவேண்டும் என்பதை அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.




## இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு

**அம்பிகா அம்மா**

அவர்கள்

மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை

கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்

புத்தாண்டுப் பலன், புதிய தொழில் தொடங்க, வியாபார முன்னேற்றம், திருமணத்தடை, குழந்தைப் பாக்கியம் உயர் கல்வி, தீராத வியாதி, மனக்கவலை இதுபோன்று எல்லா வகையான பலன்களையும் கேட்டு அறிந்துகொள்ள இன்றே அம்மாவைச் சந்திக்கவும்.



சந்திக்கும் இடம்: அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
(லிங்கம் கூல்பார்/ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் அருகில்)
நிஷாந்தா நகைக் கடை அருகில்.
குறிப்பு : முன்பு இருந்த அதே பழைய இடம்
(25227) (22-16-18)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

"உதயன்" நத்தார் சிறப்பிதழ்
25.12.2003

# சிங்கள அரசியல் தலைவர்களின் மனம் மாற பிரார்த்திப்போமாக!



## யாழ். ஆயரின் செய்தி

2003ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா ஒரு புதிய சிக்கலான காலகட்டத்தில் நிகழ்கிறது. இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இருந்துவந்த அரசியல் கருத்து வேறுபாட்டின் முறுகல் நிலையும் அதன் உச்சக்கட்டமான இன்றைய அரசியல் ஸ்திரமற்ற குழப்பநிலையும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாயினும் தமிழ் மக்களை பொறுத்தவரையில் மிகவும் வேதனைக் குரியதாகும்.

தமிழ் மக்கள் வாழ்வில் ஏதோ ஒரு சரித்திர திருப்பம் ஏற்படப் போகிறது. நிரந்தர அமைதியும் சமாதானமும் சுதந்திரமும் நிறைந்த ஒரு வாழ்வு மிக நீண்டகால போர் அனுபவங்களின் பின் மலரப்போகிறது என எண்ணியிருந்தவேளை தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் சிதறடிக்கப்பட்டுள்ளன. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் அரசியல்வாதிகள் நீண்டகாலமாக நடத்திவந்த அரசியல் நேர்மையற்ற தன்மை மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் மீண்டும் ஒரு தடவை யுத்தம் மூளுமானால் அதன் தாக்கங்களையும் கோர விளைவுகளையும் அனுபவிக்கப்போகிறவர்கள் தமிழ் மக்களே என்ற வகையில் போரைப் பற்றி கனவில் கூட அவர்கள் நினைக்கத் தயாராய் இல்லை. இலங்கை மண்ணில் இனப் பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வு ஏற்படுமானால் அது இலங்கையின் இரு முக்கிய அரசியல் கட்சிகளின் கூட்டு முயற்சியிலேயே ஏற்படமுடியும். இந்த இரு முக்கிய கட்சிகளின் தலைவர்களான ஜனாதிபதியும் பிரதமரும் பதவியிலிருக்கும் வேளையில் இவர்களின் மனதை இறைவன் பக்குவப்படுத்தவும் உரியவிதமாக திசைதிருப்பி இலங்கை மண்ணின் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வழிவகுக்கவும் வேண்டி தமிழ் மக்கள் அனைவரும் இந்த இக்கட்டான வேளையில் இறைவனில் முழு நம்பிக்கை வைத்து செபத்தில் ஈடுபடவேண்டுமென மீண்டுமொரு தடவை அழைப்பு விடுக்கிறோம்.

இரண்டு தசாப்தங்களாக போரையும் அதன் அழிவுகளையும் அன்றாட அனுபவங்களாகக் கொண்டிருந்த தமிழ் மக்கள் எத்தனையோ அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் இழந்தவர்கள். பயத்தோடும், பதட்டத்தோடும் பாதுகாப்பில்லா நிலையில் தம் வாழ்வை மிக நீண்டகாலம் கழித்தவர்கள்.

இனியும் இந்த நிலையை தொடர விடாமல் இந்த இக்கட்டான வேளையில் யார் பெயரையும் பெருமையையும் பெற்றுக்கொள்வது என்ற அதிகாரப் போட்டியில் தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்வை நாசம் செய்ய வேண்டாமென்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் பெயராலும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மனிதாபிமான ரீதியில் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் தமது 2003ஆம் ஆண்டு மாவீரர்தின உரையில் சமாதானத்துக்கான தனது உறுதிப்பாட்டை உலகம் முழுவதும் அறியத்தக்க விதமாக மிக ஆணித்தரமாக வெளிப்படுத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த இக்கட்டான நிலையிலும் இச்செய்தியானது மன மகிழ்வையும் ஆறுதலையும் தருகிறது.

கடந்தகால போர் அனுபவங்களின் பின்னர் ஏனோதானோ என்ற ஒரு கட்டுப்பாடற்ற வாழ்வை வாழ எத்தனிக்கின்ற இளைய சமுதாயத்தினர் தம் நிலையையும் போக்கையும் தமிழ் மக்களின் எதிர் கால வாழ்வைக் கவனத்திற் கொண்டு தம இளைய சக்திகளை உரிய விதமாக வழிப்படுத்த வேண்டுமென வேண்டிக்கொள்ள விரும்புகிறோம். இளமைத் துடிப்பில் சுதந்திரமாக எதையும் செய்யலாம் என்ற நினைப்பில் இன்று இளைஞர்கள் செய்து வருகின்ற நடவடிக்கைகள் போர்க்கால குழந்தைகளின் உளவியல் தாக்கத்தையும் வெளிப்பாட்டையும் பிரதிபலிப்பதாய் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. எதிர்கால தலைவர்களான இவர்கள் கவனத்தோடும் கண்ணியத்தோடும் வாழ்வை அணுக வேண்டும். தம் பொது நலனுக்காக தம்மை அர்ப்பணிக்கவேண்டும்.

போரின் பன்முக தாக்கங்களினால் எமது சமூக கட்டுமான அமைப்பில் குடும்பங்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளன. குடும்ப பாரம்பரிய ஒற்றுமை, திருமண பந்தம், பிள்ளை வளர்ப்பு, பெற்றோரை கனம் பண்ணுதல், கீழ்ப்படிதல் போன்ற பல விடயங்கள் இன்று குழப்பத்திற்கும் கேள்விக்கும் உள்ளாகியிருக்கின்றன. யாழ். மறைமாவட்டத்தில் மலர இருக்கின்ற புதிய ஆண்டில் குடும்பங்களில் அதிக கவனம் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எல்லாத் தமிழ் குடும்பங்களிலும் விசேட கவனம் செலுத்த வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். குடும்ப அமைப்பையும் கட்டுக்கோப்பையும் நாம் மீள ஒரு தடவை கவனமுடன் பாதுகாத்து வளர்ப்போமானால் இன்று நாம் எதிர்நோக்குகின்ற இளைஞர்களுடைய பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் தானாகவே இல்லாது ஒழிந்துவிடும்.

இருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியை கண்டனர் என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகளை திரும்பத் திரும்ப படித்தும் செபித்தும் வேண்டிக்கொண்ட எமக்கு கிடைத்த சிறு ஒளியாகிய இந்த சமாதான முன்முயற்சிகள் பெரு வெளிச்சமாக மாறி இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் மேலும் வீச வேண்டும் என்பதே எமது வேண்டுதலும் ஆசீரும் ஆகும்.

உலகின் ஒளியாகப் பிறந்த பாலகன் இயேசு எமது இல்லங்களுக்கும் உள்ளங்களுக்கும் நீடித்த ஒளியையும் நிரந்தர சமாதானத்தையும் கொண்டுவர நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கிறோம்.



**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்,**
**யாழ். ஆயர்.**



# "உதயன்" நத்தார் சிறப்பிதழ்
25.12.2003


பண்டிகைக்கால மலிவு விற்பனை

இன்பத் திருநாளாம் இயேசு பிறந்த
நத்தார் திருநாளில்
எமது நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

Sale.... Sale.... Sale....
அதி விசேட
விலைக்கழிவு
அபான்ஸ்
நிறுவன உத்தரவாதம்
இலவச விநியோக சேவை

13.12.2003 முதல் 31.12.2003 வரை மட்டுமே

(C/31901)

LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA TEL: 021-222-5766


## சுதந்திர ஒளி எங்கே பிறக்கும்...

மெல்லப் பகை இருள் விலக
மின்னும் அமைதி ஒளி கண்டு
உள்ளக் கமலம் எல்லாம் உவகையால்
மலர்ந்து மகிழ்ந்து நிற்க
நல்லகாலம் வருமோ என்று நாடோ
எதிர்பார்த்து நிற்க சொல்லம்பு விடும்
சுயமிகளால் சுதந்திர ஒளி எங்கே பிறக்கும்?
பூமி புத்திரர் எனக்கூறி பூபாளம் பாடும் இனவாதிகள்
போதிசத்துவரின் போதனைகளை போர்க்கோளமாக்கும்
போக்கிரிகள்

ஆட்சி மாற்றம் எனக்கூறி அயல் இனத்தை
அடக்கியாள முனையும் அரசியல்வாதிகள்
இவர்கள் இன்னும் இருப்புக் கொள்வதினால்
எங்கே சுதந்திர ஒளி பிறக்கும்
வானில் வெள்ளி ஒன்று உதித்தது
ஞானியர் இடையர் கண்டு மகிழ்ந்தனர்
மாமன்னன் ஏரோது மமதையுற்றான்
மாசில்லாக் குழந்தைகள் மரணமுற்றனர்
வீண் பொறாமை கொண்டான்
விளைந்தது பேரழிவே மிச்சம்
உண்மையை அழிக்க முயற்சித்தால்
எங்கே சுதந்திர ஒளி பிறக்கும்

இ.கருணாகரன்.


இல்லம் சிறக்க! உள்ளங் குளிர!
ஈடிணையற்ற எழில்மிகு புதுயுக புடைவைத் தினுசுகளை உங்கள் விருப்புக்கேற்ப உவந்தளிக்கும் ஜி.எஸ். லிங்கநாதன் அன் கோ ஸ்தாபனத்தார் மங்கலம் பொங்கும் இனிய நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்!
ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ
இல.13,14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். ☎:021 222 3139
(C/31909)

(C/31914)
சாணுகா 50 நகைமாடம்
அழகு நகைகளின் அரங்கம்
SHANUGA NAGAI MADHAM
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 3700
மகிழ்ச்சிகரமான நத்தார் திருநாளில் மனம் நிறைந்த நல்வாழ்த்துகள்!

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எம்மினிய நத்தார் வாழ்த்துக்கள்!
டாட் என்ரபிறைஸ் Dart Enterprise
(C/32048)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் நல் வாழ்த்துக்கள்!
ஏசியன் வீட்டுத் தளபாடம்
குறைந்த விலையில் நிறைந்த தரத்தில்
வீட்டுத் தேவைகளுக்கான
சகல தளபாடங்களும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
(C/32052)

# "உதயன்" நத்தார் சிறப்புமலர்

**25.12.2003**

# ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார் அவர் அமைதியின் அரசர் என அழைக்கப்படுவார்

2003ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் இன்று கொண்டாடுகின்றோம். உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்கள் அனைவரோடும் இணைந்து அஞ்சாதீர்கள்! இதோ எல்லா மக்களுக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந் திருக்கிறார். (லூக். 2:10) என்று வானதூதர் அறிவித்த வார்த்தைகளின் அர்த்தத்தை பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம்.

நாம் கொண்டாடுகின்ற விழாக்கள் அனைத்தும் எமது வாழ்நிலை அனுபவங்களோடு இணைந்தே அர்த்தமும் ஆழமும் பெறவேண்டும். நாம் சோகமான ஒரு கால கட்டத்தில் ஒரு மகிழ்வின் விழாவை மனித ரீதியில் கொண்டாடுவது கடினமானது.

கடந்த பல ஆண்டுகளில் இல்லாத மகிழ்வையும் மனநிலையையும் இறுதி இரண்டு ஆண்டுகளில் பெற்ற நாம் இப்போ அதனையும் தொலைத்த நிலையில் இருக்கிறோம். நாட்டில் தோன்றியுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலை எம் அனைவரையும் சிந்தனையிலும் குழப்பத்திலும் ஆழ்த்தியுள்ளது. அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வு எங்கள் எல்லோரையும் பற்றிப் பிடித்துள்ளது.

இருளில் நடந்து வந்த மக்களாக மரண நிழல்படும் நாட்டிலுள்ள மக்களாக இருந்த எமக்கு பேரொளியாகவும் சுடர்ஒளியாகவும் தோன்றிய ஒளி மறைந்துள்ளது. நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத்தீர்வு வரப்போகிறது அடக்குமுறைகள் அனைத்திற்கும் முற்றுப் புள்ளி வைக்கின்ற வகையில் இடைக்கால நிர்வாகம் கிடைக்கப் போகிறது. உடைந்துபோன எமது கட்டடங்களையும் சிதைந்துபோன எங்கள் வாழ்க்கை முறையினையும் திரும்பவும் இன்னும் உறுதியாக கட்டியெழுப்ப முடியும் என்ற ஒரு நம்பிக்கையில் வாழ்வை ஆரம்பித்த நாம் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துபோய் இருக்கிறோம்.

இந்நிலையில் 2003ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பிறப்பு விழாவில் பாலகன் இயேசுவை அமைதியின் அரசராகவும் நீதியின் தலைவராகவும் நாம் வரவேற்க இருக்கிறோம். ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர் வலிமைமிகு இறைவன் என்றுமுள்ள தந்தை அமைதியின் அரசர் என அழைக்கப்படும் (எசாயா 9:6) என்று எசாயா கூறிய இறைவார்த்தைகளில் நம்பிக்கை வைத்து அமைதியின் அரசரை வரவேற்க இருக்கிறோம்.

இவ்விழாக்காலத்தில் நாம் செய்கின்ற எல்லா மகிழ்வான நிகழ்வுகளிலும் எமது எல்லாவித மான கொண்டாட்டங்களிலும் எமது எல்லா விதமான மகிழ்வின் செயல்களிலும் ஒன்றை நாம் செய்யவேண்டுமென எம் மனது களில் ஆழமாகப் பதித்துக் கொள்ளுவோம்.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமிழ் மக்கள் அனைவரையும் செபத்தில் ஈடுபட்டு ஒரு நல்ல தீர்வினை பெற்றுக் கொள்ள இறை வல்லமையை நாடும்படி எமக்கு விடுத்திருக்கும் அழைப்பை நிறைவு செய்வதே அச்செயலாகும். அந்த அழைப்பினை யாழ். ஆயர் திரும்பவும் தமது கிறிஸ்மஸ் தினச் செய்தியில் வலியுறுத்தியிருப்பதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை தெளிவாக புரிந்துகொள்ளலாம்.

இலங்கையில் மீண்டுமொரு தடவை யுத்தம் மூளுமானால் அதன் தாக்கங்களையும் கோர விளைவுகளையும் அனுபவிக்கப் போகிறவர்கள் தமிழ்மக்களே என்பதை தெளிவாக மனதிருத்தி தமிழ் மக்கள் அனைவரும் இந்த இக்கட்டான வேளையில் இறைவனில் முழு நம்பிக்கை வைத்து செபத்தில் ஈடுபடவேண்டும்.



இயேசு பெத்லகேம் நகரில் பிறந்த போது வானதூதர் பாடிய மகிழ்ச்சியின் கீதம், உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. பூவுலகில் நன்மன துடையோர்க்கு அமைதி ஆகுக என்பதாகும். (லூக். 2:14) இந்த அமைதியின் கீதம் எமது மண்ணிலும் மக்களின் அன்றாட அனுபவங்களிலும் ஒலிக்க வேண்டுமானால் நாம் இப்பணியினை சிறப்பாக மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாண்டின் இறுதியில் பாலக இயேசுவின் தாயாகிய மரியாவையும்

## அருள்திரு ஞபன் மரியாம்பிள்ளை

வளர்ப்புத் தந்தையாகிய சூசையையும் இணைத்த திருக்குடும்ப விழாவை நாம் கொண்டாட இருக்கிறோம். ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவையும் திருக்குடும்ப விழாவையும் கொண்டாடுகின்ற வேளையில் நாம் செய்யவேண்டிய இன்னுமொரு பணி உண்டு.

கடந்தகாலப் போரினது கோர விளைவுகளை இப்போதுதான் நாம் அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம். போரினால் ஏற்பட்ட நேரடித் தாக்கங்களும் இழப்புக்களும் இடப்பெயர்வுகளும் இறப்புக்களும முடிவடைந்துள்ளன. ஆனால் அதன் மறைமுகமான விளைவுகளின் தாக்கங்களை உடல் ரீதியாக, உளவியல் ரீதியாக, பழக்க வழக்கங்கள் ரீதியாக, கலாசார அமைப்பு முறை ரீதியாக நாம் இப்போதான் அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறோம். இதில் மிகவும் முக்கியமாகத் தாக்கப்பட்டது எமது குடும்ப அமைப்பு முறையாகும். எமது பாரம்பரிய கட்டுக்கோப்பான குடும்பங்களும் குடும்ப அமைப்பு முறைகளும் நெருக்கமான உறவும் குடும்ப அங்கத்தவர்களை மதிக்கின்ற தன்மையும் இறுதி வரை குடும்ப பந்தத்தை பேணுகின்ற தன்மையும் இன்று கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

புதிய ஆண்டில் இக்குடும்பங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டிய ஒரு தேவை உண்டு. அதற்கு ஆயத்தமாக கிறிஸ்து பிறப்புவிழாக் காலத்திலேயே திருக்குடும்பத்தை மேல் வரிச் சட்டமாகக் கொண்டு எமது வாழ்வை ஆரம்பிப்போம். குடும்ப அமைப்பு முறையினை கட்டி எழுப்புவோம் என மிக உறுதியான ஒரு முடிவை கணவனும் மனைவியும் பிள்ளைகளும் இணைந்து எடுக்கவேண்டும்.

இகுடும்ப அமைப்பு இறுக்கமாக நெருக்கமாக உறவுமுறை கொண்டதாக உரிமைகளுக்கு கட்டுப்படுவதாக இருந்தால் நாம் இன்று எதிர்நோக்குகின்ற வேறு எத்தனையோ பிரச்சினைகள் தானாகவே இல்லாது ஒழிந்துவிடும். கட்டுப்பாடற்ற இளைஞர்கள், வீதிகளில் சுற்றித் திரிகின்ற இளைஞர்கள், எமது சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டும் எனத் துடிக்கின்ற இளைஞர்கள் இவர்கள் அனைவருக்கும் வாழ்வினை மகிழ்வான விதமாக அதேவேளை, மதிப்பான விதமாக அனுபவிக்கவும் பிறரை அனுபவிக்க விடவும் தக்க மதிப்பீடு களை கற்றுத்தரலாம்.

புதிய ஆண்டு 2004 பழையன கழிந்து புதியன புகுந்து தீமைகள் விலகி நன்மைகள் பெருகி ஒரு நல்ல ஆண்டாக தமிழ் மக்கள் அனைவருக்கும் மலரவேண்டி, உதயன் நேயர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். ★

# மரணத்தை வென்ற மனுக்குமரன்...!

வானிலுயர்ந்தானை பெருவல்லமை மிக்கானை
ஊனிலுமிருப்பானை உயிரெல்லாம் கலந்தானை
தேனிலுமினிய சொல்லானை தென்றலாய் வருவானை
மானிலம் போற்றும் மாதவத்தோனை வாழ்த்துவோமே!

அலர் கதிராய் ஆழியின் முத்தாய் தெள்ளமுதாய்
மாலையாய் மணியாய் மருதமாய் குளிரோடையாய்
புலர்காலைப் பொழுதாய் பூரண நிலவாயென்றும்
ஞாலத்தில் திகழ்ந்த ஞானியை வணங்குதல் நன்றே!

அன்பு கொள்வதே ஆனந்தமென்றுரைத்தானை
மன்னுயிரோம்புதலே மாண்புடை மார்க்கமென்றானை
புன்னெறி நீங்கி புவனத்திலுள்ளாருய்யல் வேண்டி
தன்னுயிரீய்ந்த ஏசுநாதனை வையத்தீரே வாழ்த்துவீர்!

அழுவாரைத் தேற்றியென்றும் ஆறுதலளித்த அற்புதரை
தொழுநோயரையும் தொட்டு சுகமீய்ந்த சித்தனை
பழுதுறாக்கிப் பாடுகள் பாவங்களீங்கி சீராய்
வாழும் வழி காட்டிய ஏசுபிரானை ஏற்றி துதிப்போமே!

கண்களிற் கருணையும் கருத்திலினிமையுமென்றும்
மண்ணை விதைச்சப்பொறையும் மன்னிக்கும் பண்பும் நிறை
புண்ணிய சீலனை பூதலம் போற்றும் புனிதரை
புண்ணமைந்த மேசியனை நெஞ்சமே புகழ்ந்து பாடு!

இரத்தம் சிந்திய இலறுமகனை சனம் செய்தாரையும்
அரவணைத்தருளிய அண்ணலை பாரச் சிலுவை சுமந்த
பரமபிதாவை பாரும் படர் விசும்பும் வியந்தேத்த
மரணத்தை வென்ற மனுக்குமரனை பணிந்தேத்துவோமே!

# மீ*ட்பர் வாழும் மண்ணிது

மழை பொழிகின்ற காலத்தில் பிறந்தார்
எங்கள் மீட்பர்
என்ன அப்படிப் பார்க்கின்றீர்கள்
வருடம் வழமைக்கு மாறாகத்தான் இம்முறை வருகிறது
நேற்றுவரை வரலாறு நாம் அடிமைகளாம்
பாவத்தில் தள்ளப்பட்ட இனமாம் நம்மினம்
நேற்றுத்தான் அப்படி – இன்று
அப்படியல்ல.
சிலுவைப்பாடுகள் மறையப்போகும் காலமல்லவா இது
மீட்பர் வாழும் ஈழமல்லவா!
காத்திருந்ததில் பலன் கிடைத்தது.
காட்டிக் கொடுப்பு துரோகங்கள் இனியும் வேண்டாம்
துரோகிகளே! புனிதர்களாக மாறுங்கள்
தவறுகளை மீட்பர் மன்னித்துவிட்டார்
எந்த வேறுபாடும் நமக்குள் வேண்டாம்
ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் மீட்பர் வழியில் போராடுவோம்.
போராடிப் பெறும் விடுதலைக்குத்தான் பெறுமதி அதிகம் – அந்த
விடுதலை வாழ்வில் மட்டுந்தான் நிறைவும் மகிழ்வும் உண்டு
நல்ல மனிதத்தில் புனிதம் நிறைவாக நிரந்தரமாகவுள்ளது.
விடுதலையை மீட்டுத் தருவார் வாருங்கள்.
மீண்டும் பாலன் சமாதானத்தோடு வருகிறார் – அவரை
சிலுவையிலிருந்த காப்பது எல்லோரினதும் கடமை
நீங்கள் பொறுத்ததோடு, இன்னும் கொஞ்சம் பொறுங்கள்
பொங்கி எழுகின்ற காலத்தை காலமே தள்ளிவிடும் – அதுவரை
நீங்கள் அமைதியாகுங்கள்
விடுதலையைப் பெற்றுக்கொண்டு உங்களைக் காண
மீட்பர் வருவார்
நல்லவருக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் எங்களின் மீட்பர்
நல்ல செய்தியோடு வீடுவீடாக வந்து உங்கள் குறை தீர்ப்பார்.
மீட்பர் வரும் வழி பார்த்து நம்பிக்கையுடன் காத்திருங்கள்
நிச்சயம் வருவார் தெய்வ வடிவில் – அல்ல
மனித வடிவில்.

யோ.யூட்நிமலன்,
சட்டக் கல்லூரி
காந்தரூபன் அறிவுச்சோலை.

## உள்ளத்தில் உறைந்தால்...

வெந்த மனங்களும்
நொந்த உள்ளங்களும்
நந்தவனமாகும்
தேசம் சேமம் பெறும்
யுகம் யுகமாயிருந்த
அடிமை முகங்கள்
அகன்றுவிடும்
இத்தரை மீதில்
பட்டவை யொழியும் – மனம்
புத்தம் புதுப் பறவையாய்
சிறகடித்துப் பறக்கும்
நித்தம் இறை
சித்தம் உணர்ந்தே
பக்தியோடு தேடும்
பக்தரின் உள்ளத்தில்
இடந்தேடி வரும்
இறைவன் – எம்
உள்ளத்தில் உறைந்தாலே
இத்தனையும்
தப்பாமல் நடந்துவிடும்.

ஜே.எம்.ரி.
றொட்றிக்

# அருட்பிழம்பே அணைத்துக்காரும் யேசுபாலா

கலங்குகின்ற மக்கள் நாம் கரங்குவித்தோம்
கருணை நிறை தெய்வமுனை இறைஞ்சுகின்றோம்
அலைகின்ற நிலைமாற்றி யமைதிக்கேங்கும்
அடிமைகளைக் காக்க வாரும் யேசுபாலா

யுத்தத்தின் சுமைகளிங்கு நீங்கவில்லை
சித்தந்தான் தடுமாறிக் கலங்குகின்றோம்
சத்தியத்தின் நாயகனே வாழ்வுக்கேங்கும்
மக்களெமை அணைக்கவாரும் யேசுபாலா

பாவத்தின் சிலுவைதனைச் சுமக்கின்றோம் நாம்
[illegible] களின் பாரத்தால் துவளுகின்றோம்
[illegible] மக்களுக்கோர் விடிவைக் காட்ட
இரக்கின்றோம் எழுந்துவாரும் யேசுபாலா

ஆளுகின்ற தலைவர்களால் அவதியுற்றோம்
வாழுகின்ற வழியைக்காட்டத் தவறிவிட்டார்
அருளுறையும் தொழுவமதில் அவதரித்த
அருட்பிழம்பே அணைத்துக்காரும் யேசுபாலா

அருளாளும் உள்ளத்தை எமக்குத் தாரும்
அன்புப்பணி முன்னெடுக்கும் ஆர்வம் தாரும்
துன்பத்தில் வாடுவோர்க்குக் கைகொடுக்கும்
இயல்பினிலே நாம் வளரச் சக்தி தாரும்.
"மாரீசன்"

ஆ.சவரிப்பிள்ளை

# "உதயன்" நத்தார் சிறப்புமலர்

25.12.2003

இனிய நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகட்டும்!

நியூ விஜயஷன்
நகை மாடம்

ஓடர் நகைகள்
அசல் 22 கரட்டில்
குறித்த தவணையில்
செய்து கொடுப்பவர்கள்.



இல.6, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் (C/31919)(35)

நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!

NEW NIRANJANAS
Nagai Maligai

நியூ நிறைஞ்சனாஸ்
நகை மாளிகை



அசல் 22 கரட்டில் குறித்த தவணையில் நம்பிக்கையுடன்
செய்து பெற்றிட யாழ். தலைநகரில் தலை சிறந்த ஸ்தாபனம்.
83/1, கஸ்தூரியார் வீதி, செம்மா தெரு, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 071-2270458, 077-6070679
(E.S.பேரம்பலம் முன்பாக)
(C/31918)(35)

## நிம்மதி தர பிறந்திடு!

மீட்பின் அரசனாய் நீயும்
மீண்டும் ஒருமுறை வந்துவிடு
சமாதானத்தின் தலைவனாய் நீயும்
எம்மண்ணில் உதித்துவிடு

முறிந்துவிட்ட பேச்சுவார்த்தை
இதய சுத்தியுடன் தொடங்கிவிட
புரிந்து கொண்ட ஒப்பந்தம்
உடைந்துவிடாது நிலைக்க

தமிழர் நாம் எம் மண்ணில்
நிம்மதியாய் வாழ்ந்திடவே
பாலகனே நீயும்
பாரினிலே பிறந்துவிடு!

- திராட்சையூரான்

நம் ஈழமண்ணில் நிரந்தர சமாதானம் நிலைபெற்று
ஓங்கிட பாலகன் யேசுவின் பிறந்த நன்னாளாம்
நத்தார் திருநாளில்
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
நலன்விரும்பிகள் அனைவருக்கும் இனிய
நத்தார் நல்வாழ்த்துக்கள்!

எக்காலத்திற்கும் உகந்த
எழில் வடிவமைப்பில், உறுதி,
உத்தரவாதத்துடனான
உங்கள் வீட்டுத் தளபாடங்களை வாங்கிக் கொள்ள

திரேசா தளபாட மாளிகை
155, 157, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/31930) (26)

எமது நாட்டில் பேரமைதி நிலைத்திட வேண்டி,
பாரினில் பாலன் அவதரித்த இத்திருநாளில்,
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம் இதயங்கனிந்த
கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!



அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 2899

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
25, 4 ஆம் குறுக்குத் தெரு, சின்னக்கடை,
யாழ்ப்பாணம். (சி-31931)(31)

RENNY



நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்,
நலன்விரும்பிகள் அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த கிறிஸ்மஸ் -- புதுவருட
நல்வாழ்த்துக்கள்

* உங்கள் கண்களைப் பரிசோதித்து, சிறந்த ரக கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள
* விழுந்த பற்களுக்கு நிகரான புதிய உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
* மிதந்த பற்களுக்கு கிளிப் செய்துகொள்ள

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:

றெனி பல், மூக்குக் கண்ணாடி அகம்

இல.540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.3703

இல.288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
மெயின்வீதி (வேலாயுதம் பாடசாலை அருகில்), பருத்தித்துறை. (C/31929) (26)
கண்டி வீதி, சாவகச்சேரி.

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும் எம்மினிய
நத்தார் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

பிரபா பார்மஸி அன் குறோசரீஸ்

உங்கள் தேவைக்கு... வேண்டிய....

★ ஆங்கில மருந்துவகைகளா?
★ பால்மா, பிஸ்கட் வகைகளா?
★ பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்களா?
★ பென்சில், பேனா மற்றும் மாணவர்களுக்கான உபகரணங்களா?
★ அழகுசாதனப் பொருள்களா?

அனைத்தையும் ஓரிடமாகவே பெற்றிட நாடுங்கள்:

பிரபா பார்மஸி அன் குறோசரீஸ்
இல.35, ஸ்ரான்லி வீதி
(நாகவிகாரை அருகில்), யாழ்ப்பாணம். (C/31929) (26)

அன்பு நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம் இனிய கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள்!
உங்கள் வனப்பு எங்கள் கைகளில்!



நவநாகரீக பிறேம்களிலான மூக்குக் கண்ணாடி!
முக அமைப்புக்கேற்ப கட்டுப்பல் வரிசை!
மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்துதல்!
இலவச கண் பரிசோதனை!
இத்தனை சிறப்புத் தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப
மகத்துவம் பெற்ற ஒரே ஸ்தாபனம்:

எலிக் அனெக்ஸ்

மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். கிளை : கொக்குவில் சந்தி.
T.P: 2436 கிளை: சுன்னாகம்.

✝ கர்த்தரே தெய்வம்
அன்பர்கள், ஆதரவாளர்கள், விசுவாசிகள்
அனைவருக்கும் மேசியாவின் நத்தார் நல்வாழ்த்துக்கள்!

★ உங்கள் தேவைகளுக்கேற்ப தங்க, வைர நகைகளை நீங்கள் பெற்றிட!
★ நவீன மோஸ்தர்களில் மாசில்லாத நகைகளைப் பெற்றிட உங்கள் அனைத்து உள்ளங்களிலும் நிலைத்து விட்ட இடம்!

மேசியா நகை மாடம்
111C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/31935)(35)

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு
எமது நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

மாணவ, மாணவிகளுக்கு
சகல புத்தகங்களும்
மலிவு விலையில்!
குறைந்த விலையில்
அப்பியாசப் புத்தகங்கள்!
கலண்டர்கள், டயறிகள் விற்பனையாகின்றன!
உடனே விஜயஞ்செய்யுங்கள்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2573. (சி-31928)(31)

# "உதயன்" நத்தார் சிறப்புமலர்

## 25.12.2003


மங்களகரமான இனிய நத்தார் புது வருட நல்வாழ்த்துக்கள்!
அண்ணா தயாரிப்புக்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

ANNA INDUSTRY

தரத்திற்கு உத்தரவான

அண்ணா கோப்பி
அண்ணா பற்பொடி
அண்ணா ஜீவாகாரம்
அண்ணா கறிமிளகாய்த் தூள்
அண்ணா அப்பம் மா
அண்ணா தோசை மா
அண்ணா அரிசி மா

✪ குமரன் வீபூதி
✪ சாயி சுகந்தா
✪ துர்க்கா பத்தி
✪ ரோஸ் பத்தி



அண்ணா தொழிலகம்

இணுவில். (சி-31918)



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!
நவநாகரிக நங்கையர் விரும்பும் நவீன
ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்:



லைடன் புடைவை நிலையம்

பஸ் நிலையம் முன்பாக, 410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 2381 (சி-31917)(24)



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம்மினிய நத்தார் நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

- சுபமுகூர்த்தப் பட்டுப்புடைவைகளா? பட்டு வேட்டிகளா? அல்லது நீங்கள் விரும்பும் ஏனைய புடைவை வகைகளா?
- எது வேண்டுமோ அனைத்தையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட நாடுங்கள்:



சீமாட்டி புடைவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மஞ்சுளா சில்க்ஸ்

(சி-31932) 15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
எம்மினிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.

இலவச கண் பரிசோதனையுடன்.........

- குறைந்த விலையில் சிறந்தரக – தரமான – மூக்குக் கண்ணாடிகள்!
- உறுதியான, அழகிய அமைப்பிலான கட்டுப்பற்கள்!
- குறுகிய காலத்தில் பலன்...... மிதந்த பற்களுக்கு கிளிப் போடுதல்!

நீண்டகால அனுபவம், தொழில்நுட்பம் வாய்ந்தவர்கள் தான்....

P.J. பர்ணாண்டோ

பல் கட்டுமிடமும்,
மூக்குக்கண்ணாடி அகமும்

542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

முதலாம் குறுக்குத்தெரு
(வண்ணமாடம் அருகில்).
பிரதான வீதி, நெல்லியடி.


(சி-31932) (24)



இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!


அல்டி எலக்ரோனிக்ஸ்





CITIZEN, SEIKO, CASIO, Q&Q மற்றும் கைக்கடிகாரங்கள்,
சுவர், மேசை மணிக்கூடுகள் சகலவிதமான றேடியோ, T.V., டெக்,
VCD, DVD, CD PLAYERS, கமரா, அன்ரனா, பூஸ்ரர்கள் மற்றும் மின் உபகரணங்களும்

நவீன கணனிகள், PENTIUM III, IV (2.6, 2.4, 2, 1.8, 1.7GHZ),
MOTHER BOARD, ASUS, AOPEN அவற்றின் உதிரிப்பாகங்கள்
(ACCESSORIES) CD, DVD ROM, PRINTER, SCANNER,
BLANK CDS, FLOPPY DISK, SOFT WARE CDக்களும்,





ஓடியோ, வீடியோ, MP3, DVD, CD பாடல்களும், படங்களும்
பெற்றுக்கொள்ளவும் விருப்பத்திற்கு ஏற்ற பாடல்களை CD யில் பதிவுசெய்து
பெற்றிடவும் மங்களகரமான நிகழ்வுகளை ஒளிப்பதிவு நாடாவில் இருந்து
DVD, VCDயில் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளவும், VIDEO TITILING,
VIDEO, MIXING என்பனவற்றை நவீன கணனித் தொழில்நுட்பத்துடன்
செய்திட

ALDI ELECTRONICS

இல. 15, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

T.P. No: 021 - 222 -2676

E-Mail:aldielec@sltnet.lk

# "உதயன்" நத்தார் சிறப்புமலர்

25.12.2003


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!

உங்கள்
பண்டிகைகள் சிறந்திட......

- சகலவிதமான கேக், ஐஸ்கிறீம் குளிர்பானங்களைத் தயாரிக்கவேண்டிய பொருள்கள், பிஸ்கட், ரொபி வகைகள்
- கைத்தொழில் விருத்திக்கான மூலப்பொருள்கள்
- வாசனைத் திரவியங்கள்
- ஆயுர்வேத மருந்துச் சரக்குகள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடமாகப் பெற்றிட

ஸ்ரீகாந் ஏசன்ஸ் அன் குறோசறீஸ்

161A, கே.கே.எஸ். வீதி, (சத்திரத்துச்சந்தி)
யாழ்ப்பாணம். T.P.: 2219



நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நத்தார்
வாழ்த்துக்கள்

இதோ! யாழ் நகரில்!
SILVER SHIELD SOCKS
குழந்தை முதல் பெரியோர் வரை சகலருக்கும்
COTTON & NYLON SOCKS பாடசாலை
மாணவர்களுக்கேற்ற SOCKS & STOKINGS,
விளையாட்டு வீரர்களுக்கு ஏற்ற சொக்ஸ் வகைகள்
எதுவானாலும்
மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள:
SRI MURUGAN COMMUNICATION
N0:303, K.K.S. ROAD, JAFFNA. T.P.: 021 222 5392



நன்மைகள் கிடைத்திட நாடு நலம் பெற அனைவருக்கும்
எமது நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

Global Informatics (Pte) Ltd

தேவைக்கு ஏற்ப நவீன கணனிகளை (Computer) மிகக்குறைந்த கட்டணத்துடன் கொள்வனவு செய்வதற்கும் வலைப்பின்னல் (Networking) அமைப்புக்களை ஏற்படுத்தவும் கணனி சம்பந்தமான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும் கணனிகளை திருத்தி அமைப்பதற்கும் அவற்றிற்கான உதிரிப்பாகங்களுக்கும் ஒரே கூரையின் கீழ்

Your Total Computer Solution

- Personal Computers. (Branded &, Assembling)
- Servers Networking Products * Computers Accessories..
- Internet & email Services,
- Networking & Data Communication. * IT Consultancy.
- Software Development.
- Computer Maintenance, Service Contract & Repairs.
- Technical Support
- Corporate Training & Solution.
(Banking, Business Administration & Technical)

Kingston CREATIVE EPSON DELL Canon hp ASUS intel U.S.Robotics APC

Global Networking & Communication

Global Informatics (Pte) Ltd.
No; 379, Kasthuriyar Road, Jaffna. Sri Lanka.
Tel: 077 736 4247, 077 748 9361, 021 222 5735-6
Head Office: #17A/1, Moors Road, Colombo -06, Sri Lanka.
Tel: +94 (1) 505849, 0777364246, 0777364247, 0777489361
Fax: +94(1) 505849 e-mail: gi@dialogsl.net

மிகக்குறைந்த கட்டணத்துடன் உங்கள் வெளிநாட்டு உள்நாட்டுத் தொலைத்தொடர்புகளுக்கும் இணைப்பு அழைப்புகட்கும் (Connecting calls) உங்கள் தெரிவு
S. P. Enterprices

S.P. Enterprises
Communication, Stationary, Travels & Tours

No: 379, Kasthuriyar Road,
Jaffna. Sri Lanka.
Tel: 021 222 5735-6
Fax: 021 222 5736
e-mail: specomm@yahoo.com

விரைந்த வேகத்துடன் இணையத்தளத்தினூடாக உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

gi@netcafe
Internet Browsing Center

No: 379, Kasthuriyar Road, Jaffna. Sri Lanka.
Tel: 077 748 9361, 021 222 5735-6 Fax: 021 222 5736
e-mail: gi@dialogsl.net



உங்கள் அனைவருக்கும்
எமது இனிய நத்தார் வாழ்த்துக்கள்!

SPOKEN ENGLISH பேச்சு ஆங்கிலம்
தபால் மூலம் நடைபெறும்

ஆங்கிலம் பேச வேண்டும் என்று விருப்பம், ஆனால்.... ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கம், பயம். மற்றவர்கள் ஆங்கில மொழியைப் பேசும் போது புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், நாம் பேசும் போது தயக்கம்.

இது தானே உங்கள் பிரச்சினை?
கவலையை விடுங்கள்!

உங்களுக்குத் தெரிந்த சில ஆங்கிலச் சொற்களைக் கொண்டே தயக்கமின்றி மிகக் குறுகிய காலத்தில் ஆங்கிலத்தைப் பேச, கேட்க, எழுத, வாசிக்கக்கூடிய முறையில் மிக விந்தையான உளவியல் அடிப்படையில். எளிய முறையில் படிப்போர் அனைவரும் தம்மால் ஆங்கிலம் பேச முடியும் என்னும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய முறையில் தபால் மூலம் கற்றுத்தரப்படும்.

இலகுவான ஆங்கிலமொழிப் பேச்சுக்காகவா இவ்வளவு காலமும் வீணடித்தேன் என நீங்களே கூறக்கூடிய முறையில் பத்தாண்டுகாலக் கல்விப் போதனை அனுபவம் வாய்ந்தவரால் கற்றுத்தரப்படும்.

90 நாள்களில் ஆங்கிலப் பயிற்சியை நிறைவுட முடிக்கும் மாணவர்களுக்கு Diploma in English Certificate வழங்கப்படுவதோடு, Business English பாடத்தையும் தொடரமுடியும்.

தபால் மூலம் கற்க விரும்புவோர் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்துடன் சுய விலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்புகொள்ளவும்.

APPLICATION FORM
NAME :..............................
ADDRESS :..............................
விரும்பும் பாடநெறி :..............................

BRIGHT BOOK CENTER (PVT) LTD.
S-27 FIRST FLOOR COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX, P.O.BOX NO: 162. COLOMBO-11.TELE.434770



பாடசாலை அதிபர்களே!
மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45 வருட பூர்த்தியை முன்னிட்டு 5% - 50% விலைக்கழிவு 15.11.03 முதல் 31.01.04 வரை பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தகங்களுக்கு வழங்கப்படுகின்றது. இப்பொழுது பாடசாலை தவிர்ந்த ஏனையவர்களுக்கும் டிவான் டென்ஸ் கணக்குக் குற்றிகள் வழங்குகின்றோம். இன்றே விஜயம் செய்யுங்கள்.

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருள்களுக்கான மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், பயில் அலுவலக அலுமாரிகள், அலுவலக மேசைகள், புத்தக றாக்கைகள், அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், ஆய்வுகூட உபகரணங்கள், ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள், அறிவு அமுது, O.H.P. புறஜெக்ரர் மற்றும் அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

குறிப்பு:

எம்மிடம் டிவான் டென் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். "பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி சனிக்கிழமை முழுநாளும், ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணி வரை திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்."

நலந்தரும் நத்தார்
திருநாளில்
அனைவருக்கும்
எமது நத்தார்
நல்வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில்
மகிழ்ச்சியடைகிறோம்!

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
211, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5542

(C/31948) UTHAYAN Graphics

# "உதயன்" நத்தார் சிறப்பிதழ்

25.12.2003


இயேசு பிறந்த இன்பத் திருநாளாம்
நத்தார் திருநாளில் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்கள்!

* நவநாகரீக நங்கையர்
விரும்பும் நவீன ரக
ஆடைகளுக்கும்
புத்தம் புதிய
டிசைன்களிலான
புடைவைத்
தினுசுகளுக்கும்
நாடவேண்டிய
சிறந்த இடம்:

விட்டில் இந்தியன் பெஷன்

77, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 6440

(C/31908)



நலம் பல தந்திடும் நத்தார் திருநாளில்
நமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

கலண்டர் பிறின்ரிங்ஸ்
ஸ்கிறீன் பிரின்ரிங் | ஓவ்செற் பிறின்ரிங்
பிளாஸ்ரிக் போட் | திருமண அழைப்பிதழ்
கீரெக் | துணி பிறின்ரிங்

நவீன முறையில், புதிய பாணியில், அழகு
வடிவத்தில் வடிவமைத்துக்கொள்ள நாடுங்கள்.

தாரணி பதிப்பகம் & ஆட்ஸ்

இல 319, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டருக்கு அருகில்)
கிளை: பொன்னாலை வீதி, மானிப்பாய்.
பதிப்பு வேலைகளில் தரணி புகழ் ஸ்தாபனம்
தாரணி பதிப்பகம்

(C/31903)



நாடுபோற்றிடும் நன்னாளாம் நத்தார்
புதுவருட திருநாள்களில் நலம்பல கிடைக்க
நல்வாழ்த்துக் கூறுகின்றோம்!

சிறந்த அன்பளிப்புப்
பொருள்களைப்
பெற்றுக்கொள்ளவும்
தரமான நல்ல ரகமான
பொருள்களைப்
பெற்றுக்கொள்ளவும்
சிறந்த இடம் :

Fashion House
பெஷன் ஹவுஸ்

65, கே.கே.எஸ்ரோட்,
யாழ்ப்பாணம். ☎: 222 2117



இயேசுவின் பிறந்த பொன்னாளாம் நத்தார் திருநாளில்
அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!

→ திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும்
→ நவீன ரக ஆடைத்தெரிவுகளுக்கும்
→ சிறுவர் சிறுமியர்க்கான சிறந்த உடைகளுக்கும்

இன்றே நாடுங்கள்!

மகாநதி புடைவையகம்

இல.4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

இல.16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



பாரினில் அமைதி பூத்திட பாலகன் தேடிவரும்
இத்திருநாளில் அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்!

காலத்துக்குக் காலம் ஈடு இணையற்ற புத்தம் புது டிசைன்களில் நகைகளை நவீனமாக வடிவமைப்பவர்கள்.

காலத்தால் அழியாத, கற்பனைக்கும் எட்டாத அற்புத எழில்மிகு ஆபரணப் படைப்பாளர்கள்.

தங்க நகையுலகில் மாங்காப் புகழுடன் ஒளி வீசி, தனக்கென தனியிடம் பதித்து நிற்பவர்கள்.

நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222-5551

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222-3431

(C/31913)



பாலன் இயேசுவின் பிறந்த பொன்னாளாம் நத்தார் திருநாளில்
அனைவருக்கும் எமது அன்பு கலந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

நவநாகரீக நவீனமய ஆடைகள்,
புத்தம் புதிய சாறி வகைகள்,
நங்கையருக்கேற்ற ஜவுளிகள்
அனைத்துக்கும் அதி சிறந்த
உன்னதமான இடம் :

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்
10, POWER HOUSE RD, GRAND BAZAAR, JAFFNA.

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

(C/31905)



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம் இதயம்கனிந்த நத்தார் நல்வாழ்த்துக்கள்!

உங்களுக்கு வேண்டிய
* அழகு சாதனப் பொருள்கள்
* அன்பளிப்புப் பொருள்கள்
* இலத்திரனியல் பொருள்கள்
* மின்சாரப் பொருள்கள்
* வீட்டுப்பாவனைப் பொருள்கள்

மயூரா அன்பளிப்பு அகம்

* Dealers in fancy goods
* Gift Items
* Electronics
* Electrical & House Hold goods.

இத்தனையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரேடமாகப் பெற்றிட.....

MAYOORA GIFT CENTRE மயூரா அன்பளிப்பு அகம்

14, நவீன சந்தை (வெளிப்புறம்) மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். ☎: 021 222 2084.
14, New Market (Out Side), Power House Road, Jaffna. Tel.:021 222 2084.

# "உதயன்" நத்தார் சிறப்பிதழ்

**25.12.2003**


பாலன் பிறந்த பகலையான பொன்னாளாம் நத்தார் திருநாளில், புதுவருட வாழ்த்துக்களையும் இணைத்து வழங்குவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கின்றார்கள் பெற்றா எசன்ஸ் ஸ்தாபனத்தார்!

## ரிச்கேக்

175 ரிச் கேக் தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்கள்

500g ரவை
500g பட்டர்
500g பிளம்ஸ்
500g ரெய்சின்ஸ்
500g செரீஸ்
500g பம்கின் பிரசர்வ்
600g கஜு
200g கறன்ஸ்
500g சவ் சவ்
500g ஜின்ஜர் பிரசர்வ்
1 போ. ஸ்ட்ரோபரி ஜேம்
600 g சொவ்ட் சுகர்
1 போ.கோல்டன் சிரப்
200 கிராம் கென்டீட் பீல்
1 வெனிலா எசன்ஸ்
1ஆமன்ட் செனஸ்
1/2 ரோஸ் எசன்ஸ்
1 வைன் கிளாஸ் தேன்
2 வைன் கிளாஸ் பிரண்டி
1/4 தேக்கரண்டி உப்பு
27 முட்டை
(27 மஞ்சள் கரு,
14 வெள்ளைக் கரு)
(1/4 தேக்கரண்டி
சாதிக்காய்)

## RICH CAKE

செய்யும் முறை

முட்டை, சீனி, வறுத்த ரவை., பட்டர் முதலியவற்றைத் தவிர மற்ற பொருள் களை சிறு துண்டுகளாக வெட்டி 5 நாள்களுக்கு வைக்கவும்.

வெள்ளைக்கருவை சீனியில் சேர்த்து நன்றாக அடித்து வறுத்த ரவையை சேர்க்கவும். அத்துடன் மஞ்சள் கரு, பட்டர், வெட்டிய பொருள்கள் சிறிதளவு பேக்கிங் பவுடரையும் சேர்க்கவும். பிறகு கேக் டிரேயில் போட்டு பேக் செய்யவும்.

PETTAH ESSENCE SUPPLIERS

பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்

104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎: 222 2386

(C/31910)


## மீட்க வா!

மாந்தர் எம்மை மீட்க மனிதனாய்
மனுவான மன்னவனே
மனதார உம்மை மன்றாட
மனம் தாரும் எமக்கு.

பாவிகள் எம்மை திருத்தி
நீதி மான்களாக்க வந்த
இறைவா எமக்காக
உம்மையே தந்ததென்ன?

ஏழ்மையின் கோலமாய்
வந்துதித்த மைந்தனே
ஏழைகள் எம்மை
மீட்டு விடு தெய்வமே!

ஈழத்துக் கவிக்குகன் போல்


பாலன் பிறந்த பொன்னாளாம் நத்தார் திருநாளில் அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மெது நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்!

சிறி மதனா நகை மாளிகை

SRI MATHANA NAKAI MALIKAI

155 M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. 021-2225526

155 M, KASTHURIAYAR ROAD, JAFFNA. TEL: 021 - 2225526

(C/31907)

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம்மினிய நத்தார் வாழத்துக்கள்!

❖ காலத்தால் அழியாத ❖ கற்பனைக்கும் எட்டாத ❖ எழில் குன்றா அற்புதப் படைப்புகள்

பார்ப்பவர் கண்களில் பளிச்சிடும் அசல் ரகங்கள், ...ப்பிட்ட தவணையில் தரமாகவும் நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்:

சாரங்கன் நகை மாடம் அன்ட் சென்றர்
இல.45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎: 222 6059

சாரங்கா நகை மாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎: 222 2480, 6972
இல.177A இல் இயங்கிவந்த சாரங்கா நகைமாடம் தற்பொழுது இல.: 157/1 இல் இயங்கிவருகின்றது.

அருள் முருகன் நகை மாடம்
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/32051)

நிரந்தர சமாதானம் எம்மிடம் சேர அனைவருக்கும் எம்மினிய நத்தார் நல்வாழ்த்துக்கள்.

V.S.P லஞ் ஓயில்
பரிமளா ஸ்ரோர்ஸ்

Merry Xmas

உணவுத் தேவைகளுக்கு சுத்தமாகத் தயாரிக்கப்படுவது

28A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P:222 2785

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய நத்தார் வாழ்த்துக்கள்!

நிஷாந்தா ஜுவல்லரி

75, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் ☎ 0777 732702

பலவருடகால அனுபவமுள்ள பொற்றொழிலாளர்களின் கைவண்ணத்தில் உருவாகும், புதிய டிசைன்களை இன்றே உங்கள் முன் தருவதில் முன்னணியில் திகழ்பவர்கள்.

(C/32049)

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் நத்தார், புதுவருட நல் வாழ்த்துக்கள்!

அனைத்து வகை சைவ அசைவ உணவுகளுக்கு

THREE STAR HOTEL

மூன்று நட்சத்திர உணவகம்

சுவையின் சங்கமம்

இல. 162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்....!

தங்கள் நல்வரவை நாடும்

செல்வம் ஸ்ரோர்ஸ் தொ.பே: 3817

3 ஸ்ரார் ஹோட்டல் தொ.பே: 3590

போன்சொப் தொ.பே: 7125

(C/31912)